
# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

ஊற்று 3
துளி 7
MAY 2001



இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை
மே 2001 -30/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படைப்பாற்றல் மிக்கவர்களுக்கு பரிசு,

# 125,000/-




## போட்டியில் பங்குபற்றிய உங்கள் அனைவருக்கும்!

**தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகமும் அமுது சஞ்சிகையும் இணைந்து நடத்திய மாபெரும் படைப் பாற்றல் போட்டிக்கு,**

பலநூறு ஆக்கங்கள் வந்து குவிந்துள்ளன. நாங்கள் எதிர் பார்த்ததைவிட, வெளியே கொட்ட வகையின்றி மனதுக் குள்ளே புழுங்கிக் கொண்டிருந்தோரின் தொகை மிக அதிகமாக உள்ளது. ஆபத்து நேராது என்பதற்கு உத்தர வாதம் அளிக்கப்பட்டால், தங்கள் உள்ளக் குமுறலை இறக்கி வைக்க ஆவேசத்தோடு நம் சமூகமே காத்திருக் கிறது என்பது தெரியவருகிறது.

பலரும் தங்கள் பெயர்களை வெளியிட வேண்டாம் என்றே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் சமூகத்தின்மீது இருளாகக் கவிந்துள்ள பயங்கரத்தை வெளிப்படுத்த ஓர் உதாரணம், போட்டிக்கு அனுப்பி வைத்திருந்த கவிதை யோடு வாசகர் ஒருவர் இணைத்திருந்த கடிதம்:

> *...அமுதினுடைய போட்டியினை கண்ணுற்று அதிலே பங்குபற்றுவதற்கு அவாக்கொண்டு எழுதியுள்ளேன். இங்குள்ள பிரச்சினை என்னவெனில் எனது ஆக்கத்தி னூடாக எனக்கு எந்தவிதமான நெருக்கடியும் வரக் கூடாது. ஏனெனில் இன்றைய சூழ்நிலையினை நீங் கள் அறிவீர்கள். எனவே தயவு செய்து எனது விலா சத்தினையோ அல்லது பெயரினையோ எக்காரணம் கொண்டும் வெளியிடவோண்டாம். தவறி வெளியிடுவீர் களானால். இதுவரையும் ஒரு பிரச்சினையிலும் அகப் படாமல் இருக்கும் ஒரு அப்பாவியான நான் பல்வேறு பிரச்சினைகளுக்கு உட்படுவதுடன் உயிரையும் இழக்க நேரிடும் என்பதில் ஐயமில்லை. எனவே தயவுசெய்து கருணைகூர்ந்து வெளியிடவேண்டாம்....*

அந்தக் கடிதமே ஒரு படைப்பாக நம் இன்றைய சமூகச் சூழலின் அவலத்தை உரைத்து நிற்கிறது. வேறென்ன?

தொலைக்காட்சி நாடகப் பிரதிகளைத் தவிர மற்றெல்லாப் போட்டி வகைகளுக்கும் உற்சாகமாகத் தங்கள் பிரதி- களை வாசகர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். யாவும் தகுந்த நடுவர் குழுவினரின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

*ஆசிரியர் - அமுது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . . . . . . 2
ஆமைக்கு அழிவு முயல் வேகத்தில். . . . . . 4
வாசலைத் தாண்டிய கடிதம் . . . . . . . . . 5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . . . . . 6
**கார்ட்டூன்** . . . . . . . . . . . . . . . . . . . 7

**அரசியல்:**

சமாதானத்திற்கு வழிவிட மறுக்கும்
அந்தரங்கம் . . . . . . . . . . . . . . . . . . . . 8

**பேட்டி:**

தீர்வின் வெற்றி நோர்வேயின்
கைகளில் இல்லை . . . . . . . . . . . . . 12
நாங்கள் மத்தியஸ்தம் செய்தால் . . . . . . 15

**சிறுகதை:**

குணம் பணத்தில் இல்லை . . . . . . . . 17
நாய் எல்லாம் நாய் அல்ல . . . . . . . . . 18
**காதல் தொடர்** . . . . . . . . . . . . . . . 20
பிகாஸோ . . . . . . . . . . . . . . . . . . . 22

**கவிதை:**

நீங்கள் தூவிய மலர்கள், . . . . . . . . . . 25

**பேட்டி:**

காமினி பொன்சேகா . . . . . . . . . . . . 26

**சிறுகதை:**

நேரம்தான் . . . . . . . . . . . . . . . . . . 30
இஸங்களல்ல இதயங்கள் . . . . . . . . . 32
மே தினம் . . . . . . . . . . . . . . . . . . . 35
மீண்டும் அம்மா ஆட்சி . . . . . . . . . . . 36
கொழும்புத் தமிழ்ச் சங்கம். . . . . . . . . . 40

**சினிமா:**

சினிமாவைப் படியுங்கள். . . . . . . . . . 42

**மருத்துவம்:**

இரத்தக் கொதிப்பு . . . . . . . . . . . . . 47
நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . . 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர், 'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 429496,**
**ஃபக்ஸ்: 429270**

E-Mail: webmgr@sri.lanka.net




08
வழிவிட மறுக்கும் அந்தரங்கம் . . .



நோர்வேயும் தீர்வும் . . .
11



ஓவியன் பிகாஸோ
22



26
சிங்களச் சினிமாவின் அப்பன்



படிக்க வேண்டிய சினிமா
42


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தங்களது சஞ்சிகையான 'அமுது' மத்தியகிழக்கு நாடான Saudi Arabiaவில் ஒரு நண்பர் மூலம் பெற்றுக் கொண்டேன். இந்த சஞ்சிகையை தொடர்ந்து படிப்பதற்கு விரும்புகிறேன்.

**Nursath Kalandher Lebbe,**
**Saudi Arabia.**

என் இனிய அமுதுக்கு,
சித்திரையாள் வாழ்த்துக்களுடன் கூடிய வணக்கங்கள். கருத்துச்செறிவுடன் கனமான விடயங்களை வண்ணப்படங்களுடன் வாரித் தரும் உன் சேவை மேலும் வளர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

**ப.கேதீஸ்,**
**மல்லாகம், யாழ்ப்பாணம்.**

பிரசுரிக்கப்படும் கவிதைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மாணவர்களுக்கு என ஒரு பகுதியையும் ஒதுக்க வேண்டும். வாசகர்களின் விமர்சனத்தை ஏற்று நடைமுறைப்படுத்தும் 'அமுது' இதனையும் ஏற்றுக் கொள்ளும் என எண்ணுகிறேன்.

**ஏ.எல்.முஹமட் றஸ்மி,**
**அட்டாளைச்சேனை - 02.**

ஆங்கில இலக்கியத்துக்கு மட்டும் C கிடைத்தது ஏன்? D வருவதற்கு எழுதக்கூடிய யாரும் வன்னியில் கிடைக்கவில்லையா? குளிர்கழி, மீள்முறுக்கி, வெதுப்பி, குழம்பிக் கொட்டை என்று ஆங்கிலத்தையே எதிர்த்து அந்தப் பாடுபடுத்திவிட்டு, ஆங்கிலத்தைப் பாடமாக எடுக்க பிள்ளைகளை அனுமதித்தது ஏன்? சோதனை எடுக்காமல் பாஸாகி வந்தவர்களே இங்கும் அமுது'வை எரித்துள்ளார்கள். அதன்பின் அமுதுக்கு பரபரப்பான விற்பனை. நல்லதுதானே?

**சி. தவம். யாழ்ப்பாணம்.**

சீர் பெற்ற ஆக்கங்களைத் தாங்கி நின்று சீலமுடன் பவனிவரும் எங்கள் 'அமுது' நேர்வழியில் மனுக்குலத்தை நடத்திடவே அமுத மரம் மாதமொரு மலரைப் பூக்குதென்று சொன்னால் அது மிகையல்ல.

**திருமதி ஹிதாயா நபீர்,**
**கெமுனுமாவத்தை, கந்தளாய்.**

'அமுது' Excellent. ஆனால் கடந்த 3 இதழ்களில் ஒரு சிறிய பிழை தென்படுகின்றது. இதழ்களை தொடர்ந்து ஒழுங்குமுறையில் நான் பாதுகாத்து வருவதால் ஊற்று, துளி, மாதம், வருடம் என்பன பிழையாகவும் சில வேளைஊற்று, துளி என்பன குழம்பியும் வருகின்றது. கவனியுங்கள்!

**எம்.ஆர். முஹம்மத்.**

## யாழில் 'அமுது'வை படிக்க மட்டுமில்லை, எரிக்கவும் சுதந்திரம் உண்டு. ஆனால் வன்னியில் எங்களின் நிலை?

- நிதீஷ்குமார்

சித்திரை 'அமுது' வாசித்தேன். தித்திப்பாகத்தான் இருந்தது. இ. தொ. கா பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானின் பேட்டியில் காரம் இல்லை. தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்காக நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்தின் வாயிலாக பல்வேறு மலையகத் தலைவர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்தது உண்மைதான். ஆனால் அதனால் தொழிலாளர்களுக்கு என்ன நன்மை விளைந்தது?

இன்று தோட்டத் தொழிலாளர்கள் பத்துக்கு பத்தடி லயன் காம்பராக்களில் அடிப்படை வசதிகளோ அடிப்படைச் சம்பளமோ இன்றி இழிநிலையில் இருக்கிறார்கள். நானூறு ரூபாய் சம்பளத்துக்காக போராடி நாய் படாத பாடுபட்டும் நல்லது நடக்கவில்லை. போராட்டத்தினால் வேலைக்குப் போகாத படியினால் சம்பளத்திலும் வெட்டு விழப் போகிறது. ஆக போராடினாலும் போராடா விட்டாலும் இன்னமும் இருட்டில் இருந்து கொண்டு வெளிச்சத்துக்காக ஏங்கிடும் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வில் என்றுதான் விடிவு பிறக்குமோ தெரியவில்லை. தற்போதைய விஷம் போன்ற விலைவாசி உயர்வினால் கால்வயிறு கஞ்சிகூட ஒழுங்காக கிடைக்காமல் கந்தையையும் கசக்கி கட்ட முடியாத நிலையில் வாடி வதங்கிக் கிடக்கும் இவர்களின் கண்ணீர் எப்போது யாரால் என்றுதான் துடைக்கப்படுமோ தெரியவில்லை...!

**பாலா. சங்குப்பிள்ளை. அட்டன்.**

யாழ் பல்கலைக்கழகத்திலுள்ள வன்னி மாணவர்கள் 'அமுது'வை தீயிட்டுக் கொழுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். யாழ்ப்பாணத்தில் அவர்கள் 'அமுது'வை படிக்க மட்டுமில்லை, எரிக்கவும் சுதந்திரம் உண்டு. ஆனால் இங்குள்ள எங்களுக்கு எதையென்றாலும் படிக்கவே சுதந்திரம் இல்லாமல் இருக்கிறதே!

*என்று மாறும் இந்த அடிமை நிலை? வன்னியிலிருந்து யாழ் சென்ற மாணவர்கள் சொல்வார்களா?*

**நிதீஷ்குமார்.**
**ஆனைவிழுந்தான், முறிகண்டி.**

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அருமை. அதிலும் கவிதைகள், காத்தான்குடி பள்ளிவாசல் கொலை சம்பவம் பற்றி துணிச்சலோடு எழுதியதெல்லாம் என்னை மிகவும் கவர்ந்தது. அமுது மேலும் மேலும் வளர என்னுடைய வாழ்த்துக்கள்.

**ஏ.ஜி.பாறூக் பொத்துவில்-15.**

'அமுது' வாசித்தேன் சகல விடயங்களும் தரமானது. படைப்பாற்றல் மிக்கவர்களுக்கு 125,000/- ரூபாய் பரிசு வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் 'அமுது'வின் பணி தமிழ்பேசும் மக்களின் சமூக எழுச்சிக்காய் தொடர என் வாழ்த்துக்கள்.

**உக்குவளை ரிசாட்.**

மார்ச் மாத இதழில் 'நல்லதோர் வீணையில்...' இடம்பெற்றிருந்த 'அடிமைத் தனம்' என்ற ஆசிரியர் கருத்து எம்மை 'அமுது' விற்கு அடிமையாக்கிவிட்டது. மேலும் 'அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் பேட்டி', 'என்னுள்ளே..என்னுள்ளே..' 'காதல்தொடர்' என்பன அருமையிலும் அருமை. தற்போது 'அமுது' மாதத்தின் முற்பகுதியிலேயே வெளியாகிவிடுகிறாய்... வாழ்த்துக்கள்...! மேலும் ஆபாசப் படங்களைத் தவிர்த்து அனைவரும் வாசிக்கும் வண்ணம் குடும்ப இதழாக வெற்றி நடைபோட நல்வாழ்த்துக்கள்...!!

**மொஹமட் ஸகீர், கற்பிட்டி.**



### கந்தையையும் கசக்கி கட்டமுடியாத நிலையில் வாடி வதங்கிக் கிடக்கும்...

சென்ற பெப்ரவரி மாத இதழில் வெளிவந்த ஆக்கங்கள் விரும்பத்தக்கவை. எனக்குப் பிடித்த அரசியல் ஆக்கங்கள் நன்றாய் இருக்கின்றன. நன்றி அதுபோலவே ஒஸ்கார் வைல்டுடைய சிறைச்சாலை அனுபவங்கள் வேதனைக்குரிய ஒன்றாக இருந்தது. மற்றும் தன்னினச் சேர்க்கை மனித உரிமை ஓர் அலசல் என்ற அம்சம் பல அங்கங்களில் விரிந்து செல்கின்றது. இது போன்ற சில நல்ல அம்சங்கள் வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இருந்தும் சிறுவர்களின் பக்கங்கள் வரவில்லை. சினிமாவின் பக்கங்கள் 'அமுது'க்கு தேவையா? இந்த பக்கங்களில் இன்னும் சில மருத்துவங்களை வெளியிட்டால் நன்றாய் இருக்கும்.


**யாழ்ப்பாணத்திலிருந்து திருமதி T.சோமா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....





தணிக்கை..! சுய தணிக்கை..!!

ஒரு சமூகம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளுவதற்கு சரியான அடையாளம் அதுதான். பேசச் சுதந்திரம், எழுதச் சுதந்திரம், செயல்படச் சுதந்திரம் இவற்றை இன்னொருவர் நமக்கு மறுக்கின்றபோது அதைப் பெற்றுக்கொள்ள போராடுவதே மனித இயல்பு. மனிதனல்ல, ஒரு சிறு எறும்பின் சுயமான நடமாட்டத்தை கூட நம்மால் வலிந்து நிறுத்திவிட முடிகிறதா பாருங்கள். அதுதான் சுதந்திர உணர்வு. எமது சமூகத்தின் உயிர்ப்பான சுதந்திர செயற்பாடுகள் அனைத்தும் இன்று அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளன. இதனால் எவருக்கும் தெரியாமல் மனதுக்குள் சுதந்திரமாக சிந்தித்து குமுறுவது ஒன்றையே இன்று தமிழ்ச் சமூகம் செய்து வருகிறது. இச்செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் சாதாரண மக்கள் தம் ஆன்ம உயிர்ப்பை தக்க வைத்துக் கொள்ள பெரும்பாடு படுகின்றனர். உண்மையில் இந்த சுதந்திர சிந்தனை உயிர்ப்பு நிலையானது சாதாரண மக்களைவிட அறிவு ரீதியாக அக்கிரமங்களை எதிர்க்கவல்ல புத்திஜீவி சமூகத்துக்குள்தான் அதிகம் காணப்பட வேண்டும். முழுச் சமூகமும் மௌனித்து இருந்தாலும் அச்சமூகத்தை அழுத்தும் சகல தணிக்கைகளுக்கும் எதிராக கொதித்தெழ வேண்டியவன் புத்திஜீவியே. ஆனால், என்று ஒரு புத்திஜீவி சமூகம், தன் சமூகத்திற்கு வழிகாட்ட மறுத்து, தன் சுயமான சிந்தனைக்கு ஆப்பு வைத்து சுய தணிக்கையை நிலைநாட்ட முனைகின்றதோ, அன்றே அது தன் சமூகத்தின் சவப்பெட்டிக்கான இறுதி ஆணிகளை அறைய ஆரம்பித்து விட்டது எனலாம். இதற்கு இலங்கையின் பல்கலைக்கழகங்களும் விதிவிலக்கானவை அல்ல. பல கருத்துக்களை மோத விடுவதும், ஏற்கமுடியாத கருத்துக்களை கருத்தியல் ரீதியாக மோதி தோற்கடிப்பதும் தான் ஒரு சமூகத்தில் அறிவுஜீவிகளின் பணி. எனவேதான் அவர்களை அறிவுஜீவிகள் என உலகம் அழைக்கிறது. இந்த அறிவுஜீவிகளால்தான் இன்று 'அமுது'வின் சுதந்திரமான சிந்தனைக்கு மரண எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அவ் எச்சரிக்கைக்குப் பயந்து தன் சுதந்திர சிந்தனையை 'அமுது' நிறுத்திக்கொண்டால் அக்கணமே அது செத்துவிடும். மாறாக அவ் எச்சரிக்கைக்கு அடிபணியாது தொடர்ந்து தன் சுதந்திரச் சிந்தனையை அது பேணும்வரை, அது தொடர்ந்து உயிர் வாழும்.

'சுதந்திர சிந்தனை'
அமுதுவின் உயிர்மூச்சே அதுதான்!
புரியவில்லையா...?

ஆ-ர்.



ஆசிரியர்:
**எஸ். மனோரஞ்சன்**
பக்க வடிவமைப்பு (கணனி):
**ஜெரால்ட் எஸ். நடேசன்**
எழுத்தமைப்பு (கணனி):
**எஸ். எம். பிரேம்குமார்**

அச்சிட்டு வெளியிடுவோர்:
**அசோஸியேட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிடெட்**
**இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**Phone: 429496, Fax: 429270**
**E-Mail: webmgr@sri.lanka.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமைக்கு அழிவு முயல் வேகத்தில்!

**ஆமைகளை அழித்தல், முட்டைகளை சேகரித்தல், அவற்றை அழித்தல் என்பன வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். என்னதான் சட்டங்கள் கடுமையாக இருந்தாலும் அவற்றை அழிவிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.**



'ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது' என்பர். இதில் 'ஆமை' பொறாமையைக் குறிக் கிறது. நிஜ ஆமையை அல்ல, ஏனெனில் நிஜ ஆமையைப் பற்றி அபசகுனமான கதைகள் ஏதுவுமில்லை. பாவம்! அது அப்பாவி ஜீவன்!

ஆமை என்றதும் எமக்குச் சட்டென்று ஞாபகம் வருவது, ஆமை - முயல் ஓட்டப்பந்தயம் தான். சிறுவயதில் எம் உள்ளத் தைக் கொள்ளை கொண்ட கதையல்லவா அது!

ஆமை மிகவும் தொன்மை வாய்ந்த உயிரினம். 100 மில்லி யன் வருடங்களுக்கு முற்பட்டது என்று உயிரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். டைனோசரின் காலத்தைப் பற்றியே சர்ச்சை நடந்து கொண்டிருக்கும்போது ஆமை அதற்கும் முந்திய கால த்திற்குரியது என்பதில் சர்ச்சை களே எழவில்லை.

இலங்கையின் மன்னர் காலத் தில் ஆமை ஓட்டினால் தயாரிக் கப்பட்ட கலைப் பொருட்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

பொலன்னறுவை யுகத்தில் ஆமை உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இரு ந்துள்ளன.

ஆமைகள் இரட்டைப் பிரஜா உரிமை கொண்டன. ஆம் அவை நீரிலும் நிலத்திலும் வாழ்பவை.



உலகில் 8 வகையான ஆமை கள் உள்ளன. அதில் 6 வகைகள் இலங்கை யில் அடையா- ளம் காணப்பட் டுள்ளன.

பொதுவாக உல கில் எல்லா இடங் களிலும் ஆமைகள் காணப்படு கின்றன. இலங்கையில் விசேட மாக தெற்கு, கிழக்கு கடற்க ரையோரங்களில் அதிகமாக வாழ்கின்றன.

சருகு ஆமை, பால் ஆமை, கடல் ஆமை, குளத்து ஆமை, பூ ஆமை, கவடி ஆமை, தலை பெருத்த ஆமை என்று பல பெயர்களி லும் ஆமைகள் இரு க்கின்றன.

ஆமை கடற்கரையில் தட்டு தட்டாக முட்டையிடும். உஷ்ண த்தினால் அவை குஞ்சுகளாக வெளிப்படும். நூற்றுக்கணக்கில் முட்டையிட்டாலும் குஞ்சுகள் மிஞ்சுவது மிகவும் அபூர்வம். கரையில் காகம், கொக்கு, நாய், நரி போன்றன ஆமை முட்டையிட்டுள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவற்றை ஏப்பம் விட்டுவிடும்.

அவற்றிடமிருந்து தப்பி குஞ் சாக வெளிவந்து கடலுக்குச் சென்றாலும் அங்கும் சுறாமீன் போன்ற மீன்வகைகளினால் உயி ராபத்துக்கள் ஏற்படுகின்றன.

ஆமைகள் 30 வருடங்களில் பருவமடையும். இதிலிருந்து முட்டையிட ஆரம்பித்தால் 25 - 30 வருடங்களாக அது நீடிக் கும். கரைக்கு வந்து ஒரே முறையில் 100 - 150 முட்டை களை இடும். மீண்டும் இரு வாரங்களில் முட்டையிடும். இவ் வாறு 10 முறைகூட கரைக்கு வந்து முட்டைகளை இடும்.

கடலிலிருந்து கரைக்கு வந்து முட்டையிட்டுவிட்டுச் சென்ற பின்னர் மீண்டும் கரைக்கு வந்து அதே இடத்தில் முட்டையிடுவது ஆயிரத்தில் ஒன்றுதான் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆமைக்குட்டிகள் பிறந்தவுட னே கடலில் நீந்த ஆரம்பிக்கும். மூன்று தினங்கள் அவை தொட ர்ந்து கடலில் நீந்தும். அதன் பின்னர்தான் ஆகாரமே எடுக்கு மாம். இதற்குக் காரணம் அதன் மரபணுச் செயற்பாடுகள்.

ஆமைகளைப் பாதுகாப்பதற் கென்றே ஆமைகள் சரணால யம் ஒன்று அமைக்கப்பட்டுள் ளது. 1956ல் அப்போதைய வன இலாகா அதிகாரியான 'வில்டன் ஜயவர்த்தன' என்பவர் யால வனப்பிரதேசத்தில் இந்த சரணா லயத்தை அமைத்தார்.

ஆமைகளை அழித்தல், முட் டைகளை சேகரித்தல், அவற் றை அழித்தல் என்பன வனவி லங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமா கும்.

என்னதான் சட்டங்கள் கடு மையாக இருந்தாலும் அவற் றை அழிவிலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

அண்மைக்காலமாக உல்லா சப் பிரயாணிகளைக் கவர்வதற் காக இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப் பட்டுவரும் தொடர் அடுக்குமாடி ஹோட்டல்கள் ஆமைகளின் சுத ந்திரத்திற்கு மட்டுமல்ல அதன் சந்ததிப் பெருக்கத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

கரையோர மீன்பிடியின்போது மீனவர்களில் வலைகளில் சிக்கி ஆயிரக்கணக்கில் ஆமைகள் அழிந்து போகின்றன.

இதைவிட உல்லாசப் பிரயா ணிகளுக்கான ஹோட்டல்களில் ஆமை இறைச்சி, முட்டைகளு க்கு நல்ல மவுசு. வெளிநாட்ட வர்கள் மீன், இறால் போலவே ஆமை இறைச்சியையும் விரும் பிச் சாப்பிடுகின்றனர். இதுவும் ஆமைகளின் அழிவுக்கு வழி கோலுகின்றன.

ஆமை ஓட்டினால் ஆபரணங் கள், கலைப்பொருட்கள் செய் யப்படுகின்றன. இவை விற்பனை செய்யப்படுவது சட்டரீதியாக தடை செய்யப்பட்டிருந்தாலும் கூட, இவற்றின் விற்பனை என் னமோ அமோகமாகத்தான் நட க்கின்றது.

**- விசித்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'றோபோ'க்களாகிப்போன யாழ். பல்கலை 'வன்னி மாணவர்கள்'

வரலாற்றுச் சக்கரம் எப்பொழுதும் முன்னோக்கியே சுழலும். ஆனால் எம் தமிழ் சமூகத்தில் மாத்திரம் அது பின்நோக்கியே சுழல்கின்றது என்பதனை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அப்பட்டமாக உணர்த்தியுள்ளார்கள்.

எமது தேசியத் தலைவரின் அரை நிர்வாண கேலிச்சித்திரம் தொண்டர்களை நன்றாகத்தான் கிளர்ந்தெழ வைத்துள்ளது. (தவறு, மன்னிக்கவும்) தொண்டர்களைக் கிளர்ந்தெழ வைத்துள்ளது என்பதுதான் உண்மை. கிளர்ந்தெழும் சிந்தனை வர இவர்கள் சிந்திக்க அல்லவா வேண்டும். சிந்திப்பதற்குரியவற்றை வன்னியில் அல்லவா கழட்டி வைத்துவிட்டார்கள். அதனால் தான் பின்புலம் 'றோபோ'க்களை இயக்கியுள்ளது.

தமிழ்த் தேசியம், தேசிய விடுதலை என தனிநபர் ஆதிக்கத் தலைமையின் மறுபக்கத்தை விடுதலையின் பெயரால் உயிரிற்கு விலைபேசும் மா∴பியா கும்பலின் மறுபக்கத்தை அமுதுதான் துணிவாக பத்திரிகைத் தர்மத்திற்குரிய வகையில் கொண்டு வந்தது. கொண்டு வருகின்றது.

அமுதைத் தடை செய்வதன் மூலமோ அல்லது எரிப்பதன் மூலமோ இல்லையேல் கட்டுரையாளரை (உங்கள் பாஷையில்) 'போடுதல்' மூலமோ மாற்றுக் கருத்துக்களை எதிர்க் கருத்தியலை தடுத்து நிறுத்த முடியுமா? பிரபாகரன் என்ற தனிமனிதனின் ஆதிக்க வெறியினால் நாங்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளோம். எமது இனத்தின் சகல அரசியல் அபிலாசைகளையும் முன்னெடுத்த மூலவேர்களையும் தனது ஆதிக்கப்பசிக்கு புசித்துவிட்டு ஏப்பமிடும் நம் தலைவனின் கார்ட்டூனிற்கே தடைவிதிக்கும் உங்களைவிட பிரித்தானியாக்காறன் பரவாயில்லை.

இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் கூச்சல் போடும் மாணவர்கள் அன்று சிறுவர்களாக 'ஆமி - பொடியள்' என தென்னம் மட்டையை துவக்காகவும் ஊமைக் கொட்டையை கைக்குண்டு எனவும் விளையாடி இருப்பார்கள். நானும் அப்போது இவர்களையொத்த சிறுவன்தான். ஆனால் நான் ஊமைக்கொட்டைக்குப் பதிலாக நிஜமான கைக்குண்டுகளுடனும் A.Kயுடனும் முன்னணிக் காவலரண்களில் இரவு பகல் என கண்விழித்திருந்தேன். வன்னிக் காடுகளில் ஒரு நேர மரவள்ளிக்கிழங்குடன் அலைந்திருக்கின்றேன்.

இந்தத் தேசிய விடுதலைப் போராட்டம் உடலிலும் உள்ளத்திலும் பல ரணங்களை உருவாக்கி எம்மை மனநோயாளியாக்கியது. இவ்விடுதலையின் பெயரால் விலை போகும் உயிர்களின் பெறுமதியை நீங்கள் கணக்கிட்டுத்தான் பார்ப்பீர்கள். நான் அந்த உயிர்களின் உணர்வுகளை அவர்களின் வேதனைகளை அருகிலிருந்து சுவாசித்தவனான். ஆதிக்க வெறிபிடித்த ஏரோது மன்னன் தனது அரச கட்டிலிற்காய் எத்தனை குழந்தைகளை கொன்றொழித்தான். குழந்தைகளை இழந்த ராமாக்களின் அழுகையொலி ரோமாபுரியில் அல்ல எம் வடகிழக்கு மாகாணத்தில் கேட்டது. கேட்கின்றது. இவ்வாறு இரத்தமும் சதையும் இறந்த உடல்களின் மீதும் ஆட்சிபீடமேறும் புதிய ஏரோதுவின் கட்டளைக்கு அடிபணிய மறுத்து வெளியேறியவர்கள் நாங்கள்.



வாசலைத் தாண்டிய கடிதம்

அன்று நாங்கள் பிஞ்சு வயதில் துப்பாக்கிகளுடன் திரியும் பொழுது புத்தகமும் கையுமாக நின்றீர்கள். இன்று பல்கலைக்கழகத்தில்தான் தலைவனின் தொண்டராக ஆசைப் படுகிறீர்களோ?

உங்களால் யுத்த முனையில் ஆயுததாரிகளாக முடியாது. பச்சைப் பாலகர்களைப் போல் கட்டளைக்கு அடிபணிய முடியாது. பட்டினி கிடக்க முடியாது. அதனால் உங்கள் இயலாமையை மறைக்க பொங்கு தமிழ் எழுச்சியுறுவீர்கள். மாற்றுக் கருத்துடைய பத்திரிகைகளிற்கு தீ வைப்பீர்கள்! இருக்கும் கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் இல்லாமல் செய்வீர்கள். யாழ்ப்பாணத்தின் சொத்தாம், கற்றலையும் சிதைப்பீர்கள்...
இவ்வளவும் விடுதலையின் பெயரால்...
மாண்டு போன மாவீரனின் பெயரால்...
ஆனால் நீங்கள் மாள மாட்டீர்கள். மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் எம் தலைவரின் மாயைத்திரை விலகும்வரை நீங்களும் தமிழ்த் தேசியத்தின் காவலாளிகள்தான்.

நடத்துங்கள் உங்கள் நாடகத்தை. பார்த்து ரசிக்க ஐரோப்பிய கனடா என நிறைய ரசிகர்கள் உண்டு. அவர்கள் சலிப்படையும் பொழுது எமது தேசியத் தலைவரின் நெறிப்படுத்தலில் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதி, கடற் புலித் தளபதி, கிட்டு பீரங்கிப்படைத் தளபதி ஆகியோரின் வழி காட்டலில் இந்த முகாம் அழித்தொழிக்கப் பட்டது. இவ் அழித்தொழிப்புச் சமரில் லெப்டினற் தொடக்கம் கேணல் வரை கைப்பற்றிய ஆயுதங்களின் பட்டியல்... என விறுவிறுப்பான காட்சிகள் ஆரம்பமாகும்.

வெற்றிக்களிப்பில் I.B.C Radio பல மறத் தமிழர்களைப் பேட்டி காணும்... ஐரோப்பியத் தெருக்களில் உற்சாக பானம் தலைக்கேற, தலைவனுக்கு வாழ்த்துக்கள் பாமாலைகள் எனத் துதிபாடல் தொடரும்.

இங்கோ மகனைப் பறிகொடுத்து, கிழிசல் ஆடைகளுடனும் ஒட்டிய தேகத்துடனும் ஓர் உயிர் கதறும்...
முடிந்த கழிசானுடன் பலநாள் உணவின்றி U.N.H.C.R கொடுத்த தறப்பால் கொட்டிலுக்குள் உயிர்கள் விம்மும்...
பாசறைக்குச் சென்ற தனது பத்து வயதுப் பாலகனும் தெருக்களில் ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டரில் இருக்கின்றானா என பத்து மாதம் சுமந்த தாய்மை தேடும்...
இவை எல்லாம் தமிழ் சினிமாக்கள் அல்ல! நிஜமான கதாபாத்திரங்கள்!. நான் கண்டு அனுபவித்த கதைகள்!. இவ் ஆத்மாக்களின் அறியாமைக்காக இது எழுதும் பொழுதே என் மனம் அழுகின்றது.
கடைசிப் புலி இருக்கும் வரை தனித் தமிழீழம் என்பார்கள் பின்பு இடைக்கிடை தங்களைப் பலப்படுத்த ஒப்பந்தங்கள், யுத்தநிறுத்தங்கள், கைதட்ட தமிழ்ப் பேரறிஞர்கள், உதவிக்கு சில தமிழ்க்கட்சிகள் என மாவீரர்களையும் பொய்யாக்கி திறம்பட எம் தலைவன் நடாத்தும் நாடகத்தில் பங்காளிகளாக யாழ் பல்கலைக்கழகமும் தனது பங்களிப்பைச் செய்யவல்லவா வேண்டும். இல்லையேல்?? என்ற கேள்விகள் எழாவண்ணம் உயிர்ப்பறிப்பும் இடைக்கிடை உண்டு.

என்றோ ஓர் நாள் இரும்புத் திரை விலகும். உண்மைகள் உயிர்த்தெழும். மானுடத்தின் எச்ச சொச்சங்கள் எட்டிப்பார்க்கும். அப்பொழுது அமுதில் வெளியாகியது போல் எம் தலைவன் அரை நிர்வாணத்தில் அல்ல முழு நிர்வாணமாக காட்சி தருவார். House Full என்பதால் இப்பவே முன் பதிவுகள் செய்து கொள்ளவும்.

*பெயர் வேண்டாம்,*
*வன்னியிலிருந்து தப்பியவன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷாந்தி, கோணேஸ்வரி, ரஜனி, ஜமாலிட்டா, சாரதாம்பாள் வரிசையில் இப்பொழுது மன்னார் உப்புக்குள விடுதியில் தங்கியிருந்த இரு குடும்பப் பெண்களான சிவமணி, விஜிகலா என்போரின் பெயர்களும் பதிவாகிவிட்டது.

முன்னையவர்கள் படையினரால் மோசமான பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டார்கள். தற்போதைய சம்பவத்தில் இவ்விரு பெண்களும் கொலை செய்யப்படவில்லை என்பது மட்டுமே பாக்கி. விவகாரம் இப்படி சந்திக்கு வரும் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு பொறி தட்டியிருந்தால் இவர்களும் கொலை செய்யப்பட்டிருக்கவும் கூடும்.

முன்னைய சம்பவங்களில் நீதி முறையாக நிலைநாட்டப்படவில்லை என்ற கருத்து தமிழ் மக்களினது மட்டுமின்றி நீதியாக சிந்திக்கும் அனைத்து மக்களினது கருத்தாகவுமிருந்தது. உதாரணமாக சாரதாம்பாளின் பாலியல் வல்லுறவுக் கொலை பற்றி இது வரை காலமும் விசாரணை நடாத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவ்வளவு காலம்தாழ்த்தி, வழக்குத் தொடர்வதற்கு போதிய சாட்சியங்கள் இல்லையென்று இப்பொழுது தெரிவித்துள்ளனர்.

தற்போதைய மன்னார் பாலியல் விவகாரத்திலும் கூட நீதி விசாரணைகள் ஆமை வேகத்திலேயே நகருகின்றன. முதலில் விவகாரத்தை மூடிமறைக்க பெரும் முயற்சி நடந்தது. பின்னர் வைத்திய பரிசோதனை அறிக்கைகள் குழறுபடியாக இருந்தன. குற்றம் சாட்டப்பட்டவர்களை கைது செய்து விசாரிப்பதில் தாமதம் காட்டப்பட்டது. தொல்லைதவிர்ப்புக் குழுவினதும் நீதி அமைச்சரினதும் உத்தரவுகள் கூட உடனடியாக அமுல்படுத்தப்படவில்லை. இவ்வாறு ஆரம்பத்திலேயே பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும் விதத்தில் பலதும் நடந்துள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் விவகாரங்களைக் கையாண்ட முறையில் நீதித்துறைக்கும் அரசாங்கத்திற்கும் அபகீர்த்தி ஏற்படும் விதத்திலேயே நடந்து கொண்டுள்ளனர்.

போதாததிற்கு இப்பெண்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னியிலிருந்து வந்தபடியால் அவர்கள்மீது 'புலி முத்திரை' குத்தும் முயற்சிகளும் நடந்தன. உண்மையில் அவ்வாறு அவர்களுக்கு தொடர்பு இருந்தால்கூட அதை உரியமுறையில் விசாரிப்பதை விடுத்து பாலியல் வல்லுறவுக்கும் சித்திரவதைக்கும் உட்படுத்துவது என்பது எந்தச் சட்டத்தில் உள்ளதோ தெரியவில்லை.

# சமாதான மாலையில் தொடுக்கப்படும் மண்டை ஓடுகள்






**நக்கீரன்**

ஆனால் பெண்கள் மீதான அதிகாரித்துச் செல்லும் வக்கிரமான வன்முறை சிந்தனையும் அத்துடன் அவர்கள் தமிழர்கள் என்ற இனவாதச் சிந்தனையுமே இச்செயலுக்கான காரணிகளாகும். இந்த உண்மையை யாருமே மறைக்கமுடியாது. ஆனால் இந்த உண்மையை தமிழ் மக்களைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் இயங்குகின்ற பெண் உரிமை அமைப்புகளோ 'மனித உரிமை' அமைப்புகளோ கண்டு கொள்ளாதது அவர்களது நிலைப்பாட்டிற்குச் சந்தேகிக்க வைக்கின்றது.

யுத்தமுனையில் தினசரி நடக்கின்ற அழிவுகளோடு ஒப்பிடுகையில் இச்சம்பவம் ஒரு சிறு துளி என்று தட்டிக் கழித்து ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் இவ்வாறான சம்பவங்கள் ஒரு பானை சோற்றின் ஒரு பதமே. இவ்வாறான சம்பவங்களில் எவ்வளவுதூரம் நீதி சரியாகவும் விரைவாகவும் நிலைநாட்டப்படுகின்றது என்பதைப் பொறுத்தே ஒரு அரசின் மீது மக்கள் நம்பிக்கை வைப்பர்.

ஆனால் இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்களில் உரிய முறையில் நீதி நிலைநாட்டப்படாமையே இலங்கையில் தமிழ் மக்கள் மாறி மாறி வந்த அரசுகள்மீது நம்பிக்கையை முற்றாக இழப்பதற்கு காரணமாக அமைந்தன.

மன்னாரைப் பொறுத்தவரையில் இச்சம்பவம் முதன்மையானதும் அல்ல. ஜமாலிட்டா பாலியல் வல்லுறவுக் கொலையும் அங்குதான் நிகழ்ந்தது. அங்குள்ள விடுதிகளில் வந்து தங்கும் பெண்களைப் படையினர் கொண்டு சென்று தமது தேவையைப் பூர்த்தி செய்தபின்னர் கொண்டுவந்து விடுவது கடந்த காலங்களில் சர்வசாதாரணமாக நடந்து வந்துள்ளதாக உள்ளூர் மக்கள் வெகு சாதாரணமாகக் கூறுகின்றனர்.

வன்னியில் இருந்து இந்தியா செல்வது, புலிகளுக்கு பொருட்கள் கடத்துவது போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளும் மன்னாரில் தாராளம். எனவே இவ்வாறான பகுதிகளில் எல்லாவகையிலும் சட்டம், நீதி என்பனவற்றை அரசு கவனமாகப் பேணுவது அவசியமானது.

அரசாங்கம் என்னதான் சமாதான முயற்சிகளில் முனைப்பாக இருந்தாலும் அரச யந்திரத்தின் சில பிரிவுகள் அரசு கட்டும் சமாதான மாலையில் இடையிடையே மலர்களுக்கிடையில் மண்டை ஓடுகளையும் பிணைத்து வைத்துவிடுகின்றனர். அவ்வாறான ஒரு சம்பவமே இப்பொழுது மன்னார் பாலியல் வல்லுறவு, சித்திரவதை விடயத்திலும் நடந்துள்ளது. இதைப்புரிந்து கொண்டு அரசு விரைந்து செயல்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Cartoon by : Anil Nishantha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்திற்கு வழிவிட மறுக்கும் அந்தரங்கம்


மிலோசெவிச்

இலங்கைத் தமிழ் மக்களின் எதிர் கால நல்வாழ்வுக்கு 'தமிழ் ஈழம்' அமைப்பதே ஒரே வழி என்று திட்ட வட்டமாக அறிவித்து அதற்காக ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தி, இடை யில் ஏற்பட்ட சமாதானப் பேச்சுகளையும் தற்காலிகத் தீர்வுகளையும் திட்டமிட்டுக் குழப்பிவந்த புலிகள், நிபந்தனையற்ற சமா தானப் பேச்சுவார்த்தைக்கு தயார் என்ற பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து மக்கள் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியடைந்தாலும் மறு பக்கத்தில் இது நடக்குமா என்ற சந்தேகத் துடனும்தான் அவதானித்து வருகின்றனர்.


மார்க்கோஸ்

ஆனால் ஒரு முழுமையான திட்டத்துடன் கூடிய தந்திரோபாயத்தை வகுத்துச் செயல் படத் தொடங்கியுள்ள புலிகள் ஒருதலைப் பட்சமான தமது யுத்த நிறுத்தத்தை அறி வித்ததுமல்லாமல் அதை மாதாமாதம் நீடி த்தும் தமது அடுத்த காயை முன்னோக்கி நகர்த்தினர். இந்த இரண்டு நடிவடிக்கைகள் மூலமும் அரசாங்கத்தை உள்நாட்டிலும் சர் வதேச அரங்கிலும் ஒரு அரசியல் நெருக் கடிக்குள் தள்ளுவதே புலிகளின் முதலா வது திட்டமாகும்.

**செய்தி ஊடகங்களின் அறிக்கைகளையும் அரசியல் ஆய்வாளர்களின் அபிப்பிராயங்களையும் நோக்கும்போது சற்று தெம்பாகத்தான் இருக்கின்றது. அவர்களின் கருத்துப்படி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இடைவெளி குறைக்கப்பட்டு நேரடிப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை நெருங்கி வருவதாகத் தெரிகின்றது. இதற்காக நோர்வே ஆற்றும் பணி உண்மையில் பெறுமதி மிக்கதாகவும் பாராட்டும்படியாகவும் இருக்கின்றது.**

ஆனால் இந்த உண்மையை அரசாங்க உயர் தலைமை மட்டுமின்றி உள்நோக்கங் கள் எதுவுமற்ற நடுநிலைமையான தமிழ் சிங்கள புத்திஜீவிகளும் நன்கு அறிந்தே வைத்திருந்தனர். அவர்களது பார்வையில்


ஈரானிய ஷா

புலிகளது அறிவிப்புகளுக்கு இரண்டு சூழ் நிலைகள் காரணங்களாக இருந்தன.

ஒரு காரணம்,
நீடித்த யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிர், சொத்து அழிவுகள், இடப்பெயர்வுகளால் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டுவந்த விரக்தி, அவநம்பிக்கை, மனித விழுமியச் சிதைவு, சமூகக் கட்டுக்கோப்பின்மை போன்ற விஷ யங்களால் தேசிய இனத் தன்மை மட்டு மின்றி பொதுவான மனித இனத்தன்மையும் அருகிவந்த ஒரு சூழ்நிலை.

தமிழ் சமூகத்தின் இந்நலிவு புலிகள் இயக் கத்தை மறைமுகமாகப் பல்வேறு வகைக ளில் பாதித்ததுடன், அவர்களது போரிடும் அணிகளாக இருக்கின்ற இச்சமூகத்தின் பிள் ளைகளை நேரடியாகப் பாதித்து, மனோரீதி யான வீழ்ச்சியை தொடர்ச்சியாக ஏற்படுத் தியது.

மற்றொரு பக்கத்தில் புலிகளுக்குக் கிடைத்த சமாதானத்துக்கான சந்தர்ப்பங்க ளை அவர்களது தலைமை வேண்டுமென்றே சீர்குலைத்து மக்களின் வாழ்க்கையுடன் விளையாடி தனது சொந்த அபிலாசைக ளைத் தீர்த்துக்கொள்ள முயல்கின்றது என்ற கருத்து சொந்தமக்களிடம் மட்டுமின்றி சர்வ தேச சமூகத்திடமும் படிப்படியாக வேரூன்றி இன்று ஆழப்பட்டுள்ளது. புலிகள் தமது நடவடிக்கைகள் அனைத்துக்கும் பௌத்த சிங்கள இனவாதிகளை காரணம் சொல்வ தைக் கேட்டுக்கேட்டு எல்லோருடைய காது களும் புளித்துப் போய்விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரண்டாவது காரணம்,

சந்திரிகாஅரசு ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மக்கள் உட்பட உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஏற்பட்ட நம்பிக்கையாகும். 17 வருட ஐ.தே.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு யுத்தம், தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான குண்டுவீச்சு அழித்தொழிப்புகள், ஜனநாயக மறுப்பு, தொழிற்சங்க உரிமை மறுப்பு, மனித உரிமை மறுப்பு, கருத்துச் சுதந்திர மறுப்பு, படுகொலைகள், லஞ்ச, அதிகார துஷ்பிரயோகங்கள் என்பன சந்திரிகா பதவிக்கு வந்ததும் நிறுத்தப்பட்டோ அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டோ மக்கள் ஓரளவு அச்சமின்றி வாழும் ஒரு சூழல் ஏற்பட்டமையாகும்.

அதுமாத்திரமன்றி இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக சந்திரிகா அரசாங்கம் மட்டுமே தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு தீர்வுத்திட்டத்தை வரைந்து முன்வைத்தது. அத் தீர்வுத் திட்டம் இன்றுவரை நிறைவேற்றப் படாவிடினும் அதன் காரணமாக அதாவது அரசாங்கமே தீர்வுக்கு முன் முயற்சி எடுத்த நிகழ்வு சர்வ தேச சமூகத்தை இலங்கை அரசின் பக்கமாகத் திருப்பியதுடன் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் முயற்சியிலும் இறங்க வைத்தது.

**ஜனநாயகம் இல்லாமல் தேசியமும் ஒருபோதும் இருக்க முடியாது என்ற உண்மையை புலிகளின் இன்றைய நிலை தெளிவாகக் காட்டி விட்டது.**

இந்த இரண்டு சூழ்நிலைகளுமே புலிகளை இன்றைய சமாதான வேடத்தை புனையுமாறு செய்யவைத்த காரணிகளாகும்.

1994இல் சந்திரிகா அரசு பதவிக்கு வந்தவுடன் புலிகளுக்கு நீட்டிய சமாதான நேசக் கரத்தை தமது வழமையான பாணியில் அவசரப்பட்டு உதறித் தள்ளிய புலிகள், அதன் பலாபலன்களை அதன்பின்னான காலத்தில் நன்றாக அனுபவித்துவிட்டனர்.

தம்மை ஒரு விடுதலை இயக்கமாக பெருமையுடன் சொல்லி வந்த அவர்கள், இன்று உலகம் முழுவதும் பயங்கரவாத இயக்கமாக கணிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் தமது ஜனநாயக செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியத்தை காரணம் காட்டி நியாயம் கற்பிக்க முயன்றவர்கள் இன்று தேசியத்தையும் இழந்து பயங்கரவாதிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். ஜனநாயகம் இல்லாமல் தேசியமும் ஒருபோதும் இருக்க முடியாது என்ற உண்மையை புலிகளின் இன்றைய நிலை தெளிவாகக் காட்டிவிட்டது.

உண்மையில் புலிகள் இன்னொரு கட்ட (4வது கட்ட) ஈழப்போருக்கே தயாரிப்புகள் செய்து வருகின்றனர். அதற்கு முன்னோடியான தயாரிப்புகளுக்காகவே இப்போதைய சமாதான முயற்சிகளை அவர்கள் பயன்படுத்த விழைகின்றனர். ஆனால் இம்முறை அவர்கள் அவசரப்படாமல் காரியமாற்றவே முடிவு செய்துள்ளனர்.

சமாதான முயற்சிகளில் வழமையைவிட சற்றுக் கூடுதலான காலம் நின்றுபிடிப்பதன் மூலம் தம்மைப்பற்றி உள்நாட்டிலும் குறிப்பாக சர்வதேச அரங்கிலும் ஏற்பட்டுள்ள ''யுத்தப்பிரியர்கள்'' என்ற அபிப்பிராயத்தை நீக்க முடியும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு.

அதேவேளை சமாதான முயற்சிகளில் அரசாங்கத்தை ஆழமாக இழுப்பதன் மூலம் அரசுக்கும் சிங்கள இனவாதிகளுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தி அதை உக்கிரப்படுத்தி சமாதான முயற்சிகளில் தன் தந்தையாரான திரு. பண்டாரநாயக்கா பின்வாங்கியது போல சந்திரிகாவையும் பின்வாங்க வைப்பது இன்னொரு நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு ஐ.தே.க., ஜே.வி.பி., சிஹலஉருமய என்பன நிச்சயம் உதவுவார்கள் என புலிகள் கணக்கிட்டுள்ளனர்.

ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் ஒருபிரிவினர் புலிகள் பலவீனமாக இருப்பதால் எப்படியும் ஒரு சமாதானத் தீர்வுக்கு வருவார்கள் என்று கூறுகின்றனர். இன்னொரு சாரார் புலிகள் இன்னமும் இராணுவரீதியில் யுத்தம் செய்யக்கூடிய பலமான நிலையில் இருப்பதாகக் கூறுகின்றனர். இக் கருத்துக்களில் ஓரளவு உண்மை உண்டு.

புலிகளைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியாகப் பலவீனமானவர்களாக இருக்கும் அதேவேளையில் இராணுவரீதியாக ஓரளவு இன்னமும் பலமுள்ளவர்களாகவும் இருப்பது உண்மைதான். ஆனால் உலகம் அவர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்திய தன் மூலம் அரசியலை முதன்மையில் வைக்காத அவர்களது இராணுவவாதப் போக்கு தோல்வியடைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

இவையெல்லாவற்றையும் விட, போரிடுவதற்கு அவர்களுக்குள்ள தவிர்க்கமுடியாத தேவையே அவர்களது அனைத்துச் செயற்பாடுகளையும் தீர்மானித்து வருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக அவர்களுக்கு ஆதரவான தத்துவவியலாளர்கள் எப்பொழுதும் கூறி வருகின்ற ஒரு கருத்து உண்டு. அதாவது தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருக்கும் வரை போராட்டமும் இயக்கமும் இருக்கு மென்பதே அது. இக்கோட்பாடு சரியாக இருந்தாலும் இப்பொழுது அது புலிகள் இயக்கமாக இல்லையென்பதே உண் மையாகும்.

தமிழ் மக்களின் இன்றைய தேவை தேசிய விடுதலையும் ஜனநாயக வாழ்வு முறையுமாகும். 80களில் போராட்டம் ஆரம்பமாகும்போது இவை இரண்டும் ஓர ளவு இருந்தன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எதிரி அவற்றை முற்றாக அழிப்பதற்கு முன்பே புலிகள் இவ்விரண்டு விஷயங்க ளையும் தாமே அழித்துவிட்டனர். அதன் காரணமாகவே இன்று தமிழ் சமூகம் மூளி யாகி நிற்கின்றது.

பலரும் பலவிதமான காரணங்களைச் சொன்ன போதிலும் புலிகள் யுத்தத்தைத் தொடர்வதை விரும்புவதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. புலிகளின் தலைமைக்கு மட்டுமே தெரிந்த அந்த காரணம்...

வெளியே பெரும் விற்பன்னர்களாகவுள்ள புத்திஜீவிகளுக்கும் ஆய்வாளர்களுக்கும் விளங்காவிடினும், தமிழ் அரசியலுடன் பின் னிப் பிணைந்து வருபவர்களுக்கு நன்கு விளங்கும்.

ஒரு மூடன் கூட தனது கழுத்தில் தானே சுருக்குப்போட (அது தங்கக் கயிறானாலும்) விரும்பமாட்டான். எனவே இந்த விடயத்தில் (சமாதான நடிவடிக்கைகளில்) பிரபாகரன் பாடசாலையில் படிக்கும்போது சக மாண வர்களால் அழைக்கப்பட்டவாறு 'மோட்டுத் தம்பி' அல்ல.

இன்று முழு உலகையும் நோக்கினாலும் மேலிருந்து கீழ்வரை தனது இயக்கத்தை நேரடியாக வழிநடத்தும் கெரில்லா தலை வர்களில் பிரபாகரனே முதன்மையானவர் என்று கூடச் சொல்லலாம். அப்படியான ஒருவர் தனது இயக்கம் கடந்தகாலத்தில் செய்த அத்தனை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாளர் ஆவார் என்பதை எல்லோ ரும் ஒப்புக்கொள்வர்.

அவ்வகையில் பார்க்கும்போது, புலிகள் இயக்கம் இதுவரை காலமும் பல்லாயிரக் கணக்கானோரைக் கொலை செய்துள்ளது. அவர்கள் எல்லோரும் சாதாரணமானவர் கள் அல்ல. இலங்கை,



**ஒரு மூடன் கூட தனது கழுத்தில் தானே (அது தங்கக் கயிறானாலும்) சுருக்குப் போட விரும்ப மாட்டான். எனவே இந்த விடயத்தில் (சமாதான நடிவடிக்கைகளில்) பிரபா-கரன் பாடசாலையில் படிக்கும்போது சக மாணவர்களால் அழைக்கப்பட்டவாறு 'மோட்டுத்தம்பி' அல்ல.**

இந்திய அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், விடுதலை இயக்கத் தலைவர்கள், மதகுருமார், கல்விமான்கள், உயர் உதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் என பல முக்கியஸ்தர்களும் அவர்களுள் அடங்குவர்.

இதற்காக இலங்கை இந்திய அரசுகளா லும், சர்வதேச பொலீசான இன்டர்போலா லும் தேடப்படுபவர் பிரபாகரன். அரசுகளால் மட்டுமன்றி பல்வேறு எதிர்க்குழுக்களாலும் வேண்டப்படும் ஒரு நபராகவும் அவர் இருக் கின்றார். ஒரு உடன்பாடு ஏற்பட்டு அவர் பகிரங்க அரசியலுக்கும் வாழ்க்கைக்கும் வந்தால் அவர்மீது நீதிகோரி நீதி மன்றங் களில் நியாயம் கேட்க எத்தனையோ தமிழ் பொதுமக்களே காத்திருக்கின்றனர்.

உலகநாடுகளில் நடைபெற்ற சம்பவங் களை பிரபாகரனோ அவரது இயக்கமோ அறியாமல் இல்லை. சர்வாதிகாரிகளாக இருந்து தமது சொந்த மக்களையே வகைதொகையின்றிக் கொன்று குவித்த பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரி மார்க்கோஸ், ஈரானிய மன்னர் ஷா, சிலி சர்வாதிகாரி பினோச்சே, இந்தோனேஷிய சர்வாதி காரி சுஹார்ட்டோ, கம்போடியாவின் பொல்பொட் போன்றோருக்கு நடந்த நிகழ்வுகள் சமீபத்திய உதாரணங்க ளாக இருக்கின்றன.

மிகச்சமீபத்திய உதாரணமாக பொஸ் னிய மக்களைக் கொன்றொழித்த யூகோஸ்லோவாக்கிய ஜனாதிபதி மிலோசெவிச்சின் உதாரணம் இருக் கின்றது. அவரை இன்றைய யூகோ அரசு கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதுடன் ஹேக்கிலுள்ள சர்வதேச யுத்தக் குற்றவாளிகள் நீதி மன்றத்திலும் விசாரிக்கப்படவுள்ளார்.

இவர்கள் எல்லோரும் அரசாங்கத் தலை வர்களாக சகல அதிகாரங்களுடனும் இருந்து கொண்டே இக்கொடுமைகளைச் செய்துள்ளனர். ஆனால் பிரபாகரனும் அவரது இயக்கமும் 'விடுதலை இயக்கம்' என்ற போர்வையில் இருந்து கொண்டே அவர்களைவிடக் கூடுதலான பாதகச் செ யல்களைச் செய்து முடித்துள்ளனர்.

இவ்வளவு வரலாற்று நிகழ்வுகளுக்கும் உரித்தாளர்களான புலிகள் சமாதானத்துக்கு வருவரென்பதற்கும் சாதாரண ஜனநாயக வாழ்வில் ஈடுபடுவார்கள் என்று நம்புவதற் கும் எந்த முகாந்திரமும் இல்லை. அத னால்தான் புலிகள் சமாதானம் பேசினாலும் அவர்களது கட்டுப்பாட்டிலிருக்கும் மக்களே அதை நம்பவோ ஏற்க வோ மறுக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அரசுகள், தலைவர் உட்பட புலிக ளுக்கு பொதுமன்னிப்பு வழங்கினா லும் கூட மக்கள் மத்தியில் தமக்கு என்ன பாதுகாப்பு உண்டு என்று புலிகள் யோசிப்பதில் நியாயமு ண்டு. தலைவர்களுக்கு மிக உச்ச பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தாலும் கூட அது இலங்கை அரசினதோ, வடக்குகிழக்கு அரசினதோ பொரு ளாதாரத்தைக் கணிசமான அளவு உறிஞ்சும் என்பதுடன்,



*எந்த நாட்டிலும் சென்று வசிக்கத் தயார்*
*எந்த நகரத்திலும் குடியேற அச்சமில்லை*
*எந்த மனிதரோடும் பேச தைரியம் உண்டு*
*எங்கள் ஊரைத் தவிர.*

**ஓவர் லோட்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பாதுகாப்பு விடயத்தில் தன்னைத் தவிர இரண்டாவது நபர் எவரையும் நம்பாத பிரபாகரன் அதை ஏற்றுக்கொள்வாரா என்பதும் இன்னொரு தீர்வுகாண முடியாத விடயமாகும்.

உலகில் மக்கள் தொடர்பு இல்லாத ஒரேயொரு 'விடுதலை இயக்கத்' தலைவராக இருப்பதாலும், தனக்கு எதிராக தானே ஏராளமான வலைகளைப் பின்னியுள்ளதாலும் உள்நாட்டு யுத்தம் நடைபெறும் மற்றைய நாடுகளின் சமாதான முயற்சிகளைவிட இங்குள்ள பிரச்சினை முற்றிலும் வித்தியாசமானதும் சிக்கலானதுமாகும்.

எனவே சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தினால் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரப்பட்டாலும் அதைக் குழப்புவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். ஏற்கனவே தமது தன்னிச்சையான யுத்த நிறுத்தத்திற்கு அரசு இணங்க வேண்டும், தம்மீதான தடையை நீக்க வேண்டும், தம்மை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கவேண்டும், பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்ற நிபந்தனைகளையும் நோர்வே மீதான அவநம்பிக்கை பிரச்சாரத்தையும் புலிகள் ஆரம்பித்துவிட்டனர்.

புலிகளின் எதிர் வேலைகள், சீர்குலைப்புகள் எடுபடாத நேரத்தில் அவர்கள் விழுந்துவிடாமல் தாங்கிப் பிடிக்கும் தாங்கியாக ஐ.தே.க. தலைவர் முன்வைத்துள்ள நிபந்தனைகள் இருக்கின்றன. இந்த இருவரதும் தடைகளைத் தாண்டினாலும் ஏதோ ஒருவகையில் புலிகள் தீர்வைக் குழப்பவே முயல்வர். ஏனெனில் அந்த தனிமனித இயக்கத்திற்கு அதன் தலைவரின் பாதுகாப்பே எப்பொழுதும் முக்கியமானது.

பிரபாகரன் என்ற அந்தத் தனிமனிதனைச் சுற்றிக் கட்டி எழுப்பப்பட்டுள்ள பாஸிச அமைப்பும் அதன் ஆதரவாளர்களான தமிழ் சமூகத்திடையே உள்ள பிற்போக்காளர்களும், ஒரு சமாதானத் தீர்வு வந்து பிரபாகரனின் தலைமைத்துவம் அழிவதை இலேசில் விரும்பமாட்டார்கள்.

எனவே உலகம் முழுவதும் திரண்டு எதிரணியில் நின்றாலும் சமாதானத் தீர்வைக் குழப்பவே அவர்கள் இறுதியில் முயல்வர்.

ஒரு தனிமனிதனின் தலைவிதியிலேயே இலங்கையில் சமாதான எதிர்காலம் தங்கியுள்ளது என்ற ஒரு உண்மை எதிர்வரும் மாதங்களில் மீண்டுமொரு முறை நிருபணமாகப் போவது மட்டும் உண்மை.

– குருஷேத்திரன்

# பனிப்போர் ஆரம்பம்?

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் தற்போழுது ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை மீண்டும் ஒரு பனிப் போர் யுகம் உருவாகி வருகிறதா என்ற அச்சத்தை உலக மக்களிடையே ஏற்படுத்தி இருக்கிறது.

1949ல் சீனாவில் மாசேதுங் தலைமையில் கம்யூனிஸப் புரட்சி வெற்றி பெற்ற நாளிலிருந்து தீவிரமடைந்து வந்த அமெரிக்க - சீன முரண்பாடு ஜனாதிபதி நிக்சன் காலத்தில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹென்றி கீசிங்கர் வகுத்த 'பிங் பொங்' ராஜதந்திரத்தின் மூலம் ஓரளவு இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.



1972ல் இருநாடுகளுக்கு மிடையில் ஏற்பட்ட 'ஷங்காய் உடன்படிக்கை'யின் மூலம் தாய்வான் தீவை சீனாவின் ஒரு பகுதியாக ஏற்ற அமெரிக்கா, கடந்த காலத்தில் அதை ஓரளவு கௌரவித்து நடந்து வந்தது. ஆனால் ''கில்லாடி ஜனாதிபதி" என பெயர் பெற்ற புஷ் பதவிக்கு வந்ததும் பழையபடி இருநாடுகளுக்குமிடையில் மோதல் நிலை உருவாகி வருகிறது.

அமெரிக்க உளவு விமானம் சீனாவின் சண்டை விமானத்தை மோதி வீழ்த்திய சம்பவமும், தாய்வானுக்கு நவீன ஆயுதங்களை அமெரிக்கா விற்க எடுத்த முடிவும் சீன மக்களின் தேச பக்தியை மீண்டுமொரு முறை கிளறிவிட்டுள்ளது.

கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக சர்வாதிகாரி சியாங்கை ஷேக்குக்கு உதவப்போய் 1949ல் தோல்விகண்ட அமெரிக்காவை சீன மக்கள் இன்னும் மறக்கவில்லை. அதன்பின் 1950ல் வடகொரியாவிலும் 1975ல் வியட்நாம், லாவோஸ், கம்போடியா நாடுகளிலும் அமெரிக்க இராணுவம் தோற்றதிற்கு சீனாவின் பங்களிப்பும் முக்கிய காரணம். அப்படியான சீனாவுடன், அதுவும் இன்று மிகப் பலம் வாய்ந்த நிலையில் இருக்கும் சூழலில் புஷ் நேரடியாக முட்டி மோதி தன் மண்டையைத் தான் உடைப்பாரோ என்னவோ?

1962ல் இந்தியாவும் 1967ல் சோவியத் ரஷ்யாவும், 1979ல் வியட்நாமும் சீனாவுடன் மோதி பெற்ற கெட்ட அனுபவங்களை அமெரிக்காவும் புஷ்ஷின் காலத்தில் பெறும் என்பதே அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது.

1960 களில் இவ்வாறான ஒரு நிலை அமெரிக்கா வியட்நாமில் தலையிட்ட சூழலில் ஏற்பட்டபோது அப்போதைய சீன வெளிநாட்டு மந்திரி சென்யீ, அமெரிக்காவின் நியூயோர்க், சிக்காக்கோ போன்ற நகரங்கள் உலகப் படத்திலிருந்து இல்லாமல் ஆக்கப்படும் என்று அமெரிக்காவை எச்சரித்திருந்தார் என்பது இந்நேரத்தில் நினைவுகூரத்தக்க சுவாரசியமாகும்.

அமெரிக்கா தனது தலைவிதியை சீன மண்ணில் புதைக்க விரும்பினால் ஆசியர்களான எமக்கும் பெருமைதான்.

# ஓவர் லோட்

*தலையைச் சொறி!*
*நாக்கைக் கடி!*
*பல்லை இளி!*
*முதுகை வளை!*
*கையைக் கட்டு!*
*காலைச் சேர்!*
*என்ன இது?*
*வயிற்றைக் கேள்*
*சொல்லுமது.*

*- ஷண்முகசுப்பையா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வின் வெற்றி நோர்வேயின் கைகளில் இல்லை





## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேட்டி

*நேர்கண்டவர்:*
**தே. செந்தில்வேலவர்**

**அமுது:** இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் புலிகள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள் எனத் தாங்கள் கருதுகிறீர்களா?

**அமைச்சர் டக்ளஸ்:** அரசுக்கு நம்பிக்கை தரும் எந்தவொரு நடவடிக்கையையும் புலிகள் இதுவரை மேற்கொள்ளவில்லை. எனவே முதலில் அவர்கள் ஏற்கனவே தம் பக்கமுள்ள நம்பிக்கையின்மையை இல்லாதொழிக்க வேண்டும். அப்போதுதான் பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக அமையும். இல்லாவிடில் பேச்சுவார்த்தைக்கு வருவதும் பின்னர் குழப்பியடிப்பதுமாகவே இருக்கும். கடந்த காலங்களில் நடந்ததும் இதுவே.

புலிகள் தம்மீது நம்பிக்கை ஏற்படும்வரையில் அரசுக்கு தமது நடவடிக்கைகளை வெளிக்காட்ட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் அரசியல், பொருளாதார மற்றும் சகல விடயங்களிலும் சம உரிமைகளைப் பெற்று நிம்மதியாக வாழவேண்டுமென்பதே தமிழ் பேசும் மக்களது விருப்பமாகும்.

**அமுது:** சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் புலிகள் வந்துவிட்டால் தங்களது கட்சி (EPDP) நிலைப்பாடு எவ்வாறு அமையும்?

**அமை:** நாங்கள் சமாதானத்திற்கு எதிரானவர்கள் இல்லை. அத்தகையதோர் பேச்சுவார்த்தை நடைபெறுமாயின் எமது கட்சி அதனை நிச்சயம் வரவேற்கும். அதேவேளை தமிழ் பேசும் மக்களின் ஆதரவிலான கட்சி எனும் வகையிலும், மக்கள் எமக்கு அளித்த ஆணையின் அடிப்படையிலும் அம்மக்களின் பிரதிநிதிகளாக நாமும் அப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு தீர்வினைக் காண எமது பங்களிப்பையும் வழங்குவோம். ஒருபோதும் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்க மாட்டோம்.

**அமுது:** தீர்வு விடயத்தில் நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தில் தங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?

**அமை:** நோர்வேயின் முயற்சிகளை வரவேற்கிறோம். அவர்கள் மத்தியஸ்தர்களாக இல்லை, ஏற்பாட்டாளர்களாகவே பங்காற்றுகின்றனர். இதில் அவர்களது நல்லெண்ணத்தையும் அக்கறையையும் நாம் பாராட்டுவது அவசியம்.

எனினும் ஏற்பாட்டாளர்கள் எனும் வகையில் அவர்களது பங்களிப்பு ஒரு வரையறைக்குட்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இம்முயற்சி வெற்றி பெறுவதென்பது நோர்வேயின் கைகளில் இல்லை. அது புலிகளின் நம்பிக்கை தரும் செயற்பாடுகளிலேயே உள்ளது.

**அமுது:** புலிகளின் பிரதிநிதிகள் போன்று செயற்படும் சில அமைப்புகள், மதகுருமார்கள் மற்றும் ஒருசில பிரமுகர்கள் பற்றிய தங்களது அபிப்பிராயம்...?


**அமை:** புலிகளின் பேச்சாளர்கள் போலப் பலர் தற்போது கருத்துக்களை வெளியிட்டாலும் இவர்கள் எவரையும் புலிகள் தமது பேச்சாளர்களாக ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. இவர்களால் புலிகளைத் தமது கருத்துக்கள் மூலம் மாற்றிவிடவும் முடியவில்லை. புலிகள் செய்யும் பாதகச் செயல்களுக்கு புலிகளுக்கே தெரியாத காரணங்களைச் சொல்லி அவற்றை நியாயப்படுத்தும் வேலையையே இவர்கள் செய்து வருகிறார்கள்.

புலிகளுக்கோ அல்லது தமிழ்ச் சமுதாயத்திற்கோ உண்மையாகவே எவரேனும் நன்மை செய்வதாக இருந்தால் அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்த முனைய வேண்டுமேயன்றி, அவர்களது தவறுகளை எல்லாம் உடனுக்குடன் நியாயப்படுத்திமென்மேலும் அவர்களைத் தவறிழைக்க வைக்கக்கூடாது.

**அமுது:** எந்தப் பெரியவர் என்றாலும் அது கடவுளாக இருந்தாலும் சரி, தமது தவறைச் சுட்டிக்காட்டுவதை புலிகள் அனுமதிக்க மாட்டார்களே? அதனால் இவர்கள் பயப்படக்கூடும்....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பேச்சுவார்த்தை நடைபெறுமாயின் எமது கட்சி அதனை நிச்சயம் வரவேற்கும். அதேவேளை தமிழ் பேசும் மக்களின் ஆதரவிலான கட்சி எனும் வகையிலும், மக்கள் எமக்கு அளித்த ஆணையின் அடிப்படையிலும் அம் மக்களின் பிரதிநிதிகளாக நாமும் அப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு தீர்க்கமான ஒரு தீர்வினைக் காண எமது பங்களிப்பையும் வழங்குவோம்.**



**அமை:** அது தெரியும்தானே! அப்ப பேசாமல் இருப்பதுதானே. இவர்க ளது ஒருபக்க பிரச்சாரத்தினால் புலிகள் நன்மை பெறுகிறார்கள். இவர்கள் பிரபல்யம் பெறும் ஆசை யில் புலிகளுக்கும், செய்தி ஊட கங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் தம்மை அடையாளம் காட்டிக் கொள்கிறார்கள். இதன்மூலம் மீள முடியாத ஒரு பொறிக்குள் தாமா கவே வீழ்வதை இவர்கள் உணர் வதில்லை.

**அமுது:** இத்தகைய பிரமுகர்கள், மதகுருமார்களை நீங்கள் கொழும் புக்கு அழைத்து உண்மையான நிலை இதுவென விளக்க முயற் சித்தீர்களா?

**அமை:** கொழும்பில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திற்கு நான் சென்று வரும் போதெல்லாம் இத்தகைய வர்களை அழைத்து விளக்கமளிப் பேன். இவர்களில் பலர் தூங்குப வர்கள் போல் நடிப்பவர்கள். அவர் களை எழுப்பமுடியாது. அப்படியா னவர்களுக்கு வரலாறு மட்டுமே பாடம் புகட்ட முடியும்.

**அமுது:** பிரித்தானியா புலிகள் அமைப்பைத் தடைசெய்தமை குறி த்து...?

**அமை:** சர்வதேச ரீதியாக பயங் கரவாதச் செயற்பாடுகளை கட்டுப் படுத்தும் விழிப்புணர்வு உலகநாடு களில் தற்போது தோன்றியுள்ளது. அதன் ஒரு அங்கமே பிரித்தானி யாவின் இந்தத் தடை ஏற்பாடு.

புலிகள் தாங்கள் விதைத்ததை தாங்களே அறுவடை செய்துள்ள னர் என்பதே உண்மை. புலிகளை பயங்கரவாதிகளாகக் கருதும் உல கம் தமிழ் மக்களையும் பயங்கர வாதிகளாகக் கருதும் நிலைக்கு, நாம் நிலைமையை மோசமாக்கிவி டக் கூடாது என்பதில் தமிழ் பேசும் மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

**அமுது:** இலங்கை அரசாங்கம் தம்மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டுமெ னப் புலிகள் கோருவது சரியா?

**அமை:** பேச்சுவார்த்தைக்கு தடையை ஒரு தடையாக புலிகள் இறுதி நேரத்தில் கூறு வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. பேச் சுவார்த்தையை முன்னெடுக்க இந்தத் தடை ஒருபோதும் தடையாக இருக்க முடியாது. தடையை ஒரு சாட்டாக வைத்து பேச்சை இழுத்தடிப்பதே புலிகளது உள்நோக்கம். அயர்லாந்திலும், பாலஸ்தீனத்திலும் இத் தகைய தடைச்சட்டம் அமுலில் இருந்த போதுதான் பேச்சுவார்த்தை நடைபெற்று தீர்வும் காணப்பட்டது.

**அமுது:** வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழும் மக்கள் பலவிதமான துன்புறுத்தல்களை அனுபவித்து வருகின்ற னர். நிவாரணங்கள் முறையாக கிடைப்ப தில்லை. இவர்களுக்கு உதவ உங்களிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

**அமை:** நீங்கள் குறிப்பிட்டதுபோல அங்கு மக்கள் படும் துயர அவஸ்தைகள் பற்றி அப்பகுதியிலிருந்து வருவோர் கூறுவதுண்டு. பொது மக்களுக்கு என நாம் அப்பகுதிக்கு எவ்வளவுதான் நிவாரணப் பொருட் களை அனுப்பினாலும் அது புலிக ளைத் தாண்டித்தான் போய்ச்சேர வேண்டும். அதனால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய முழுத்தொகை யும் கிடைப்பதில்லை. அத்துடன் நஷ்டஈடுகள் வழங்குவதிலும் பல சட்டச் சிக்கல்கள் உள்ளன. அத்தி யாவசிய சேவைகள் ஆணைக்குழு எமது அமைச்சின் கீழ் வந்த பின்னர் இப்போது நிலவும் குறைபாடுகளை இல்லாதொழிக்க முடியுமெனும் நம் பிக்கை உண்டு.

அண்மையில் கூட முல்லைத்தீவில் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு வரின் மனைவி யாழ்ப்பாணத்திற்கு எப்படியோ தப்பியோடி வந்து நஷ்ட ஈடு கோரி விண்ணப்பித்தார். ஆனால் அந்நபர் புலிகளால் கொல்லப்பட்ட தற்கு ஆதாரமான மரணச் சான்றித ழை அங்கிருந்து அவரால் பெற முடி யவில்லை. இதனால் உண்மையாக வே அவர் நஷ்டஈடு பெற உரித்து டையவராகக் காணப்படினும் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளார். இது ஒரு உதாரணம். இப்படி பலர் உள்ளனர். கணவனை இழந்த மனைவிமார், பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள் ளைகள் எனப் பலர் உள்ளனர்.

எனவே புலிகள் இத்தகைய செயல் களை நிறுத்த வேண்டும். அப்பாவிப் பொதுமக்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடத்த அரசு அப்பகுதிகளை மீட்க வேண்டும் அல்லது புலிகள் பேச்சு வார்த்தைக்கு வந்து ஒரு தீர்வைக் காணவேண்டும்.

**அமுது:** தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி கள் புலிகள்தான் என பாராளுமன் றத்தில் சில தமிழ் உறுப்பினர்கள் கூறிவருகிறார்கள். இது ஏன்?

**அமை:** இத்தகைய கூற்று அவர்கள் தம்மைத் தெரிவுசெய்த மக்களுக்கு இழைக்கும் மிகப்பெரிய அவமதிப் பாக அல்லது துரோகமாகவே இருக்கும்.

**அமுது:** தங்களது கட்சிமீது தமிழர் விடுத லைக் கூட்டணியினர் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி அல்லது வசைபாடி வருவது பற்றி..

**அமை:** எமது கட்சியை எதிர்ப்பதன் மூல மோ அல்லது விமர்சிப்பதன் மூலமோ புலி கள் தம்மைக் கொலை செய்வதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியு மென இவர்கள் நம்புகிறார்கள். அத்துடன் இத்தகைய எதிர்ப்புப் பிரச்சாரம் மூலமாக முக்கிய பொறுப்புக்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதும் இவர்களது எண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை எதிர்க்கும் இவர்கள் தமது தலைவர்கள் புலிகளால் கொல்லப்பட்டமைக்கு சின்ன விரலைத்தானும் உயர்த்த முடியவில்லை. மாறாக புலிகளால் தமது தலைவர்கள் கொல்லப்பட்டதை மறைத்து வருகிறார்கள்.
ஆனால் கூட்டணியில் அங்கம் வகிக்கும் எல்லோரும் எம்மை எதிர்க்கவில்லை. சில முக்கிய உறுப்பினர்கள் மட்டுமே கடுமையான எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

**அமுது:** வடக்கிலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

**அமை:** வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அம் மக்களின் அமைப்புக்கள் இன்னும் புலிகளின் அனுமதிக்காக காத்திருக்கின்றன. ஆனால் நாம், புலிகளின் அனுமதிக்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை, உங்களது சொந்த இருப்பிடங்களில் சென்று மீண்டும் வாழ முன்வாருங்கள் என்று அவர்களை வலியுறுத்தி வருகிறோம். அதற்கான ஏற்பாடுகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றித்தர நாம் தயாராகவே உள்ளோம்.

**அமுது:** பிரச்சினை தீர்ந்து யாழுக்கு ரயில், பஸ் ஓடும் காலம் விரைவில் வருமா?

**அமை:** விரைவில் வரவேண்டுமென்பதே அனைத்து தமிழ் பேசும் மக்களதும் விருப்பமாகும். அதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு மிக அவசியம்.

**அமுது:** எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை தொடர்பாக இறுதி நேரத்தில் அரசுக்கு முன்வைத்த நிபந்தனைகள் குறித்து...?

**அமை:** இது ஒரு எதிர்பார்த்த விடயமே. என்ன இன்னமும் குழப்பாமல் இருக்கிறார்கள் என விஷயமறிந்தவர்கள் சிந்தித்திருந்த வேளையில், எதிர்பார்த்தது போலவே சாத்தியமாகாத விடயங்களை முன்வைத்து குழப்பிவிட்டார்கள்.
ரணில் முன்வைத்த கோரிக்கைகள் நியாயமானவையாக இருக்கலாம். ஆனால் அதற்கு இதுவல்ல நேரம். சமாதான முயற்சிக்கு தடை ஏற்படுத்தவே இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதா எனச் சந்தேகம் ஏற்படுகிறது.

**அமுது:** யாழில் புலிகள் வரி கேட்டு வர்த்தகர்களை வற்புறுத்தும் விடயம் அம்பலமாகிவிட்டது பற்றி..

**அமை:** ஆம், இதுவரை இரகசியமாக நடைபெற்று வந்த விடயம் இது. இப்போது தமது பகுதிக்கும் ஜனநாயகச் சூழ்நிலை மலரப்போகுது என்றோ அல்லது புலிகள் இனித் தமக்குத் தேவையில்லை எனக் கருதியோ மக்கள் தமது கருத்தை வெளிப்படுத்த முனைந்துள்ளனர். இது ஒரு நல்ல ஆரம்ப சகுனம்.

மக்கள் ஒருமித்து குரல்கொடுக்க முனைந்தால் புலிகளுக்கு அங்கே இரகசியமாக ஈடுபடமுடியாது. இதுவரை காலமும் புலிகளின் மிரட்டல், வற்புறுத்தல் காரணமாகப் பல வர்த்தகர்கள் தமது பணத்தை தாரை வார்த்துள்ளனர். இவ்வாறு கொடுக்கும் பணம் அப்பாவி ஏழைப் பொது மக்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்தி வாழ்க்கைச் சுமையைத் திணித்தது.

**அமுது:** மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியை நீங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து பல்கலைக்கழக அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுத்துள்ளீர்கள் இதுபற்றி...?

**அமை:** ஆம், இது அந்த மாணவர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்தது. ஆனால் இதனை அமுல்படுத்துவதில் பலவிதமான சட்டச் சிக்கல்கள் இருந்து வந்தன. நான் இந்த அமைச்சர் பொறுப்பை ஏற்றதும் அதுகுறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகள், உயர் கல்வி அமைச்சர், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோருடன் கலந்துரையாடி இந்த நல்ல முடிவினை எடுத்தேன்.

**அமுது:** தங்களது அமைச்சினால் இதுவரை வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடிவடிக்கைகள் எவை?

**அமை:** இந்த அமைச்சைப் பொறுப்பேற்பதற்கு முன்னரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதே எனது நிதி மூலமாக பல அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டுள்ளேன். இப்போது இந்த அமைச்சினூடாக பல திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். கணனி அறிவை மேம்படுத்தும் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை யாழில் நிறுவியுள்ளோம். இது குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான வீட்டுத்திட்டங்களை யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அமைத்து வருகிறோம். எமது அமைச்சின் கீழ் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, பனை அபிவிருத்திச் சபை, இந்து சமய கலாசார திணைக்களம், உப்பளங்கள், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை போன்ற பல சபைகள் வருகின்றன. இவற்றினூடாக நாம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தியுள்ளோம்.

அமைச்சின் அபிவிருத்தி செயற்பாடுகளையும் மற்றும் எமது மக்களின் வாழ்நிலை மேம்பாட்டையும் பற்றி இன்னும் ஓரிரு வருடங்கள் சென்றதும் அனைவரும் புரிந்து கொள்வர்.
தற்போது நாம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளிலேயே உள்ளோம்.



Pix by: R. Maduraiveeran

**வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட அம் மக்களின் அமைப்புக்கள் இன்னும் புலிகளின் அனுமதிக்காக காத்திருக்கின்றன. ஆனால் நாம் புலிகளின் அனுமதிக்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை, உங்களது சொந்த இருப்பிடங்களில் சென்று மீண்டும் வாழ முன்வாருங்கள் என்று அவர்களை வலியுறுத்தி வருகிறோம். அதற்கான ஏற்பாடுகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றித்தர நாம் தயாராகவே உள்ளோம்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வேயின் விசேட தூதுவர் வருகிறார் போகிறார். போகிறார் வருகிறார். இந்தியா என்னதான் நடக்கிறது? இலங்கை வருகிறார். அடுத்தமாத போகிறார். பிரிட்டன் போகிறார். நோர்வே வருகிறார். முற்பகுதியில், நடுப்பகுதியில், கடைசிப்பகுதியில் பேச்சுவார்த்தை...

அடடா, அடடா நல்ல காலம் வருகுது. நல்ல காலம் வருகுது. சண்டை நீங்கி சமாதானம் மலர்ந்து புதுவாழ்வு வரப்போகுது. காலை எழுந்தவுடன் பேப்பர் படிப்பு. பின்பு கனிவு கெடுக்கும் அரசியல் பேச்சு. மாலை முழுவதும் வரும் சமாதானத்தை எண்ணி படக்காட்சி...

''இந்த முறை ஏதோ ஒன்று நடக்கத்தான் போகுது."
''நெடுகலும் பேக்காட்ட முடியுமே?"
''ரண்டு பேரும் நல்லா மாட்டுப்பட்டுப் போட்டினம்".
''உலக நாடுகள் விடாது".
''இந்தியாதான் பேச்சுவார்த்தையை குழப்புது எண்டு சொல்லினம்"...
கற்பனைகள்... கற்பனைகள்... நல்லது நடக்கும் என்ற நம்பிக்கைகள்...

இனப்பிரச்சினை தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையா? எங்களால் பேசித் தீர்த்துக்கொள்ள முடியாதா? சரி விட்டுத் தள்ளுங்கள். ஏன் மூளையைப் போட்டுக் குழப்புவான் (மூளை இல்லாதவர்களுக்கு இது பிரச்சினை இல்லை).

'சம்பந்தப்பட்ட இரு பகுதியினரையும் அழைத்து வந்து உங்களிடம் மத்தியஸ்தம் செய்யும் வேலை தரப்பட்டால் நீங்கள் எப்படி பிரச்சி னையைத் தீர்த்து வைப்பீர்கள்?' என்று சிலரிடம் கேட்டுப் பார்த்தோம். (கற்பனையில்தான்!)

இதோ அவர்கள் சொன்ன பதில்கள்.

# நாங்கள் மத்தியஸ்தம் செய்தால்....

கற்பனை : சி. கதிர்காமநாதன்



**கிரிக்கெற் மத்தியஸ்தர்**
(க. புண்ணியமூர்த்தி).

எத்தனையோ டெஸ்ட் போட்டிகளிலும், ஒரு நாள் போட்டிகளிலும் மத்தியஸ்தனா கக் கடமை ஆற்றி உள்ளேன். இந்த இனப்பிரச்சினையை இலகுவாகத் தீர்த்து விடலாம். இரு பகுதியினரும் சண்டை நிறுத்தம் செய்தால் உயிர்ப்பலிகள் இன்றி இரத்த ஆறு ஓடாமல் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

இரு பகுதியினருக்கும் 50 ஓவர் கொண்ட ஒரு நாள் போட்டி வைக்கலாம். கட்ட ணம் அறவிடாமல் உலக ரசிகர்கள் எல் லோரையும் பார்க்க அழைக்கலாம். என் னோடு மத்தயஸ்த வேலை செய்வதற்கு பிரிட்டன், இந்தியா, நோர்வே ஆகிய நாடுகளில் இருந்து ஆட்களை தருவிக்க லாம். யார் திறமையாக விளையாடி போட் டியை வெல்கிறாரோ அவர்களது கோரி க்கைகளை நிறைவேற்றி வைக்கலாம்.

(போட்டியின் கடைசி ஓவர் பந்து வீசும் போது நான் எந்த நாட்டில் தஞ்சம் அடை வேனோ அது எனக்கே தெரியாது).

* * *



**பாடசாலை ஆசிரியர்**
(க. மணிமேகலை)

என் இருபதாண்டுகால ஆசிரிய சேவை யில் எத்தனை அதிபர்களை, ஆசிரியர்க ளை, மாணவர்களைச் சமாளித்துக்கொ ண்டு இருக்கிறேன். இனப் பிரச்சினையை தீர்ப்பதானால் இப்படிச் செய்யலாம். இப்போது எல்லா ஆசிரியர்களும் கணிப் பீடு, கணிப்பீடு என்று புலம்பி மாரடிக்கின் றார்கள். படிப்பிக்கும் வேலையோடு இந் தக் கணிப்பீட்டு வேலையையும் செய்யப் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். மோதிக் கொள்ளும் இரு பகுதியினரையும் அழை த்து இந்த வேலையை பங்கிட்டுக் கொடு க்கலாம். யார் அழகாக வேலையைச் செய்து முடிக்கின்றார்களோ அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றலாம்.

(கடவுளே விரைவில் இந்த மாதிரி நடப்ப தற்கு அருள் புரிவாயாக!)



**யாழ்ப்பாணத் தமிழ்மகன்**
(ப.கந்தசாமி - விவசாயி)

... என்ன, நான் எப்படி மத்தியஸ்தம் செய்வேன் என்று கேட்கிறீர்களா? (ஹா... ஹா... ஹா... சிரிப்பு. பின்னர் கன்னத்தில் படர்ந்திருந்த தாடியை சொறிந்தபடி பதில் சொல்கிறார்.)

வாழ்க்கை எப்படிப் போகப்போகுது என்று நாங்கள் மண்டையைக் குழப்பிக் கொண்டு நிக்கிறம். இப்பவே வீட்டுச் சாமான்களை எல்லாம் உரபாக்கில போட்டு கட்டிவைச் சுப் போட்டம். பிறகு சண்டை தொடங்க ஓடேக்க சுகமாயெல்லே இருக்கும்.

இப்பதான் நீங்கள் கேட்ட கேள்வி ஞாப கம் வருகுது. என்ர மகன் வாற கிழமை சுவிசில இருந்து கொழும்புக்கு வாறான். கெதியில கொழும்புக்கு போக வேணும். ஒரு மாதமாய் நான் ரிக்கெற் எடுக்க அலைஞ்சு கொண்டு இருக்கிறன். இன்னும் ரிக்கெற் கிடைக்கேல்ல. நான் கொழும்பு போறதுக்கு யார் உடன எனக்கு அலு வல் பாத்துத் தருகினமோ அவையின்ர விருப்பத்தை உடன் நிறைவேற்றலாம்.

(இந்த ஏழையின் கனவு நிறைவேறுமா?)

* * *

**தமிழ் அரசியல்வாதி**
(பெயர் குறிப்பிட விரும்பவில்லை)

இந்த அருமையான கேள்வியை என்னி டம் கேட்பதையிட்டு நான் மிகவும் மகிழ் ச்சி அடைகிறேன். இந்த பதவியை எனக் களித்த தமிழ்மக்களுக்கு நான் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்க ளுக்கு இப்போதுதான் காலங்கடந்து இந்த யோசனை வந்துள்ளது. எமது கட்சி எனது தலைமையில் எத்தனையோ களங் களைக் கண்டுள்ளது. எத்தனை மேடைக ளில் பேசி எவ்வளவு வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு அளித்திருப்போம்.

இப்போது ஒன்றை உறுதியாகச் சொல்கி றேன். இந்த வருடம் முடிவதற்குள் நானும் எனது கட்சியினரும் எம் மக்கள் நிம்மதி யாக வாழ்வதற்கு அமெரிக்காவிடம் சொ ல்லி செவ்வாய்க் கிரகத்தில் வசிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து தருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எனது தாய் நாட்டின் மீது சத்தியம்.
சரி, சரி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாங்கள் யார்? எதையும் சண்டை பிடிக்கிறவையெல்லோ ஒத்துக்கொள்ள வேணும். சண்டை பிடிக்கிறவை மனம் வைச்சால்தான் சமாதானத்தைக் கொண்டுவர ஏலும். நாங்கள் என்ன செய்யிறது? சண்டை பிடிக்காமல் இருக்கிற ஆக்களோடை வேணுமெண்டால் சண்டையை நிப்பாட்டுறதுக்குத் தடங்கலாய் இருக்கிறது ஆரெண்டு சண்டை பிடிச்சுக் கொண்டிருக்கலாம்.

(தலைவரே கெதியாய் வெளிக்கிடுங்கோ. அண்டைக்கு கூட்டத்தில சனங்கள் கல் எறிஞ்ச மாதிரி இண்டைக்கும் கல் எறியலாம் கெதியாய் வெளிக்கிடுங்கோ.)

பெரியவர்களின் பேட்டிகளை முடித்து வரும்போது வழியில் இளம் தலைமுறையைச் சேர்ந்த ஒருவரிடம் இந்த கேள்வியைக் கேட்க நினைத்து, வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு பாடசாலை மாணவனை அணுகினோம். அவன் எங்களைக் கண்டு பயந்து ஓட்டம் பிடித்தான். நாங்கள் விடாது துரத்திப் பிடித்துக் கேள்வியைக் கேட்டோம்.

* * *



மாணவன்
(பிரதீபன் - தரம் 5.)

நீங்கள் எனக்கு பாடம் சொல்லித்தர இருக்கிற புது ரியூசன் மாஸ்ரர் என்று நினைத்துத்தான் பயந்து ஓடினனான். எனக்கு படிச்சுப் படிச்சு சலிச்சுப்போச்சு. ஓரே படிப்பு. விடிஞ்சா, பொழுதுபட்டா ஒரே படிப்பு. அம்மா அப்பா எந்த நேரமும் கதைக்கிறது படிப்புத்தான். பள்ளிக்கூடம் போனா படிப்பு. வந்தா ரியூசனுக்கு ஓட வேணும். பின்னேரத்தில சந்தோஷமாய் விளையாட நேரமில்லை. அடுத்து 5ம் ஆண்டுக்கு ஸ்கொலர்சிப் பரீட்சை வருகுது. அவ்வளவுதான். எனக்கு விசர்தான் பிடிக்கப் போகுது.

நான் பிரச்சினைக்குத் தீர்வு காணுறதெண்டால் யார் இந்த பரீட்சைகளை, ரியூசன் வகுப்புக்களை நிப்பாட்டி எங்களை சுயமாய் சிந்திக்க விடுகினமோ அவையளின்ர பிரச்சினைகளை முதலில் தீர்க்கலாம் என்று சொல்வேன்.
(கடவுளே 5ம் தரத்திலிருந்து 8ம் தரத்திற்கு ஸ்கொலர்ஷிப் மாறுதாமே. உண்மைதானோ).



## "விஸ்கி" பாலசிங்க விக்கல்!



***நிருபர் விடாக்கண்டன்:***
*பிரிட்டன் தடைசெய்தால் நடக்கிறது வேறை என்று சொன்னீர்களே? இப்போ தடை வந்து விட்டது. உங்கள் சவால் என்ன ஆச்சுது?*

***'விஸ்கி' பாலசிங்க:***
*சத்தம் போட்டுக் கதைக்காதேயும். வெள்ளைக்காரன் சுவருக்கும் காது வைச்சிருப்பான்.*
***வி.க.:*** *சரி சரி, அது போகட்டும். சமாதானப் பேச்சுவார்த்தை என்ன கட்டத்தில் இருக்கின்றது?*
***பா.சி.:*** *ஓ... அதுவா.... (கிளாசில் உள்ளதை அருந்துகிறார். சிகரட்டை பற்ற வைக்கிறார். பிஸ்கட் ஒன்றை தனது செல்ல நாய்க்கு ஊட்டியவாறே) அதைப்பற்றியும் யோசிக்கத் தான் வேணும். ஆனால் இப்பொழுது எமது சமாதான முயற்சிகள் எல்லாம் அரசின் சமாதான நடவடிக்கையை அம்பலப்படுத்துவதிலேயே நடைபெறுகின்றது. பொறுத்த நேரத்தில் தம்பி குண்டை வீசுவார்.*

***வி.க.:*** *நோர்வேயின் அனுசரணையை நம்புகின்றீர்களா?*
***பா.சி.:*** *யு நோ மிஸ்டர் விடாக்கண்டன். இந்த நாடுகளிலை உள்ள றோட்டுகளைப் பாருங்கோ.... வெள்ளைக்காரன் நேர் கோட்டிலை போறதை விரும்புவதைக் காட்டுதோ இல்லையோ? சமாதானப் பேச்சுவார்த்தை என்று தொடங்கினால், யாழ்ப்பாண ஒழுங்கைகளைப் போல நாங்கள் சுத்தி சுத்தி பாதை காட்டுவம். உதவிக்கு வாற மச்சான் இடையிலையே களைச்சுப் போவார்.*

***வி.க.:*** *உங்கடை மாவீரர் தினப் பேச்சு 'பிளே போய்' (Play Boy) வாசிச்ச மாதிரி றொம்ப கிளுகிளுப்பா இருந்தது.*

***பா.சி.:*** *(சிரிக்கிறார். மீண்டும் கிளாசில் ஊற்றிக் குடிக்கிறார்). ''எல்லாம் இந்த கிளாசுக்கை இருந்த சாமான் செய்த வேலை. ஒரு பெண்ணைப் பற்றிப் பேசும்போது யாருக்கும் சின்ன சின்ன ஆசை வாறது இயல்புதானே. (நாயை வருடுகிறார்) ஆனால் ஆரோ தமிழ் துரோகிகள் என்ரை பேச்சைப்பற்றி மகாராணியிட்டைக் கூட அண்டி வைச்சிட்டான்கள். ஆனால் சும்மா சொல்லக்கூடாது. லண்டனிலை உள்ள தமிழ் சனங்கள் என்ரை பேச்சைக் கேட்டு நல்லா கைதட்டி விசிலடித்து ஆரவாரம் செய்து வரவேற்றதுகள். அது ஒரு வெற்றிதானே?*

***வி.க.:*** *மீண்டும் எப்பொழுது வன்னி செல்ல உத்தேசம்?*
***பா.சி.:*** *(பதற்றத்துடன் கிளாசை எடுக்க அது தவறி விழுந்து உடைகிறது) யார் சொன்னது? பேச்சுவார்த்தை எத்தனை வருடம் இழுபடுமோ தெரியாது. அதுவரையில் நான் இங்குதான் இருப்பேன். அங்கையிருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு (தப்பி)வந்தேன். (வாய்க்குள்ளாக ஏதோ முணுமுணுக்கிறார்.)*

***வி.க.:*** *'தடை செய்தால் இங்கிலாந்து பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரும்' என்று முதலில் மிரட்டினீர்கள். பிறகு, 'செய்யட்டுமே... அமெரிக்கா தடைசெய்தது எங்களைப் பாதித்ததா?' என்று கேட்டீர்கள்...?*

***பா.சி.:*** *ஹா..ஹா.. (சிரிக்கிறார்) அதெல்லாம் தம்பிக்குப் புத்திவரப் பண்ணுவதற்குத்தான். இறங்கிவரச் சொல்லி எத்தனைமுறை கேட்டுப்பாத்தன்... அறுவான் அழிச்சு முடிப்பானே தவிர, எடுக்கிறதை எடுத்துக்கொண்டு தப்பிவிட இணங்கான். இந்தத் தடைக்குப் பிறகாவது என்ர வழிக்கு வாறானா எண்டு பாக்கிறன்...*
***வி.க.:*** *அவரது பிள்ளைகள் இருவரும் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருக்கிறார்களே?*

***பா.சி.:*** *உந்த ஆங்கிலத்துக்காகத்தான் தம்பி என்னை வைச்சிருந்தவன் எண்டு தெரியும். அதையும் பிள்ளையள் படிச்சிட்டுதெண்டால் என்னைக் கழட்டி விடலாம்தான். ஆனால் நான் விடமாட்டன். எல்லா நாட்டுத் தடையையும் எப்பிடிக் கொண்டுவாறதெண்டு எனக்குத் தெரியும். இவனுக்காகத்தானே கலாநிதிப் பட்டப் படிப்பையும் இடையில குழப்பிப்போட்டு வந்தனான். என்ர ஆங்கிலம் இல்லாமல் என்ன செய்வான் பாக்கிறன்...*

*ஒரு செருமலுக்குப் பிறகு கையிலிருந்த கிளாஸைத் தூக்கி ஒரே மடக்கில் குடித்துத் தீர்க்கிறார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குட்டிக் கதை

# குணம் பணத்தில் இல்லை

கிருஷ்ணமூர்த்தி சேரன்

படார், படார் என உடுப்பு தோய்க்கும் சத்தம் கேட்டு ஜன்னலை திறந்தான். நித்திரை குழம்பியதால் கோபம் பொங்கியது. அவள் உடுப்புகளை உதறி காயவிட்டுக்கொண்டு இருந்தாள். இரண்டு உடுப்புகள்தான்.

''எனக்கு வாற கோவத்தில் சனியனை வெளுத்துவிடலாம்'' என்று முணுமுணுத்த வாறு ஜன்னலை இழுத்து மூடினான்.

ராகேஷ் பரம்பரையாகவே பணக்காரன். அதனால் ஏழைகளை அவன் மதிக்காத தில் என்ன வியப்பு? முகம் கழுவிவிட்டு வந்து தன் டெனிம் ரௌசரையும் பனியனை யும் போட்டவாறு கண்ணாடி முன்நின்று தன்னை ஆராய்ந்தான். திருப்தியாக சீட்டி யடித்துக்கொண்டு புறப்பட்டான். தன் உப் பிய பேர்சை எடுத்து திறந்து பார்த்தான். அப்பாவின் கடிதம் கிடந்தது. கடிதத்தை எடுத்து மேசையில் எறிந்தவாறு சிரித்துக் கொண்டான். அப்பாவுக்கு எப்பவும் கல் யாண யோசனைதான் என்று எண் ணியவாறு படியிறங்கி நடந்தான்.

ராகேஷ் பஸ்ஸரை அமுக்கி விட்டு நின்றான். நண்பன் கார்த்திக் கதவைத் திறந்து வரவேற்றான்.

''வாடா மச்சான், அண்ண இது யார் தெரியுமே, பேர் ராகேஷ், ஊர் யாழ்ப்பாணம், படிப்புக்காண்டி இஞ்ச நிக்கிறான்''. என்று அங்கிருந்தவர்களுக்கு அவ னை அறிமுகப்படுத்தினான் கார்த்திக்.

சிறிதுநேரம் கதைத்துவிட்டு ''சரி மச்சான் நேரமாகுது போட்டு வாறன்'' என்று சொல்லி படியிறங்கினான் ராகேஷ்.

அவன் வாசலுக்கு இறங்கேக்க அவள் அவனைக் கடந்து போனாள். கிழிந்த உடையும் அழுக்கு முகமும். ராகேஷிற்கு மனதிற்குள் சினம் துளிர்த்தது. ''நல்ல சகுனம்தான் போ'' என்று காறித் துப்பி விட்டு நடந்து போனான்.

முடக்கால திரும்பி ரெலிபோன் பூத்திற்கு போய் பின்பொக்கற்றுள் கைவிட்டான். தேள் கொட்டியது போல் நின்றான். பரபரப்பாக மற்ற பொக்கற்றுள்ளும் கையைவிட்டுத் துழாவினான். இல்லை.

இவன் நெளிந்ததை கண்ட பூத் பொடி யன் ''என்ன சேர் எதையாவது துலைச் சிட்டியளோ?'' என்று வினவினான். இவன் திரும்பிப் பார்க்காமல் வந்த வழியெல் லாம் தேடினான்.

இல்லை. பேஸ் துலைந்து போச்சுது. அது மட்டுமாகவா தொலைந்தது அவன் உயிர் 'ஐ.சி.'யுமல்லவா தொலைந்தது.

என்ன செய்வதென்று சிறிதுநேரம் முழிசி விட்டு பொலீஸ் ஸ்ரேசனில் 'என்றி' போட் டான். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி போதும் போதும் என்றாகி விட்டது. முகத்தால் வியர்த்து கொட்டி யது. ஒரு மாதிரி அவன் குடுத்த துண்டை வாங்கி கொண்டு வீடு சென்றான்.

வீட்டில் சாப்பிடவுமில்லை. தனியாக இருந் ததால் கேட்கிறதுக்கும் யாருமில்லை. கொழும்பிலை 'ஐடின்ரி' இல்லாட்டி உயிர் இல்லாத மாதிரிதானே. கையை பின்னால் கட்டியவாறு குறுக்கும் நெடு க்கும் நடந்தான். ''டொக், டொக்'' கதவு தட்டப்பட்டது. ஆமியோ என நினைத்து திறந்தான் ராகேஷ். அவள் நின்றிருந்தாள்.

''மிஸ்ரர் ராகேஷ் இந்தாருங் கள் உங்கட பேஸ். றோட்டி லை போட்டிட்டியள். நான் எடுத்து திறந்து பார்த்தன். உங்கட 'ஐசி' கிடந்தது. அதுதான் கொண்டு வந்த னான்''. குனிந்து கொண்டு சொல்லிய அவள் நிமிர்ந்து பார்த்தாள். ராகேஷின் கண்கள் குளமாகி இருந்தன.

அவன் தழுத்தழுத்த குரலில் சொன் னான். ''இவ்வளவு நாளும் நான் உங்க ளை கேவலமாய் நினைச்சு அலட்சியப் படுத்தீற்ரன். ஆனால் நீங்கள் என் உயி ரையே எனக்கு காப்பாற்றித் தந்திருக்கிறி யள். உங்களுக்கு எப்பிடித் 'தாங்' பண் ணிறதெண்டு எனக்கு தெரியேல்ல...''

''என்ன, நீங்கள் இதற்கெல்லாம் அழுது கொண்டு? குணம் என்பது பணத்திலில்லை என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். எனக்கு அதுபோதும் இனி நாங்கள் நல்ல நண்பர்களாய் இருப்போம். நான் வாறன்'' என அவள் விடைபெற்றாள்.

ராகேஷ் அவளை பார்த்தான். ஆனால் அவன் பார்வையில் பழைய குரோதமில் லை.

## ஓவர் லோட்

ஏழ்மையில் மக்களைத்
தள்ளுவதோ – இதை
இன்பமெனச் சிலர்
கொள்ளுவதோ?

– பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாய் எல்லாம் நாய் அல்ல

நன்றியுணர்வுக்கும் நாய்தான், நன்றி மறந்தவர்களுக்கும் உதாரணம் நாய் தான். 'நன்றி கெட்ட நாயே' என்று திட்டவும் மனிதர் தவறுவதில்லை. உண்மையில், தான் நேசிப்பவர்களுக்கு ஆபத்து நேரிட்டால், தன் உயிரைக்கூட துச்சமாக மதித்து அவர்களை காப்பாற்றும் பண்பு கொண்டது நாய். இதை மனிதர்கள் தம் அனுபவத்திலும், ஆய்வுகள் மூலமும் கண்டறிந்துள்ளனர்.


நாயைப்பற்றி கதைகள் ஏராளம். இலக்கியங்களிலும், பழமொழிகளிலும் அதற்கு முக்கிய இடமுண்டு.

பழக்கி வேட்டையாடலாம்; விளையாட்டுகளில் ஈடுபடுத்தலாம்; வழிகாட்டும்; காவலிலும் ஈடுபடும்; இராணுவத்திலும் உண்டு. குதிரைப் படையை போல நாய்களும் ஒரு படையணியாகக் கருதப்படுகின்றது.

கள்ளக்கடத்தல், கொலை, கொள்ளைச் சம்பவங்கள், போதைவஸ்து, வெடிகுண்டுகள் என்பவற்றைக் கண்டுபிடிப்பதில் நாய்களின் பங்கு மகத்தானது. சோதனைச் சாவடிகளில் படையினருடன் நாயும் கடமைகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.



இரண்டு கால்களில் நிமிர்ந்து குரைக்கும் தனது 'ஜெர்மன் ஷெப்பேர்ட்' நாயுடன் பனிச் சரிவில் ரஷ்யச் சிறுவன் விளையாடுகிறான்.




நாய்தானே முதல் முதலில் சந்திரமண்டலத்திற்கே போனது. ஆம்! 'லைக்கா' என்ற ரஷ்ய நாய்.

நாய்க்கு உயில் எழுதப்பட்டது, மரண ஊர்வலம் சென்றது, நல்லடக்கம் செய்யப்பட்டமை... இப்படிப் பல சம்பவங்கள் இன்றும் தொடர்ந்து நடக்கின்றன.

நாயின் அளவுக்கு மனிதனுடன் நெருக்கமான செல்லப்பிராணிகள் எதுவும் இல்லை.

**- விவிதா -**

பூனை, கிளி என்பவற்றைக்கூட அது விஞ்சி விட்டது. உலக அழகுராணிப் போட்டிகள் போல நாய்களுக்கும் அழகுராணிப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

நாய் விளம்பரங்களையும் ஊடகங்களில் காணலாம். 'காணவில்லை' பகுதியில் குழந்தைகளே காணாமல் போய்விட்டது போல இதற்கு விளம்பரம் செய்வார்கள்.

அதற்கென்று கிளினிக்குகள், மருத்துவமனைகள் இருக்கின்றன. மருத்துவ நிபுணர்கள் இருக்கின்றார்கள்.

நாயின் தோற்றம் 10,000 வருடங்களுக்கும் முன். பொதுவாக எல்லா நாடுகளிலும் நாய்கள் வாழ்கின்றன.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன் நாய்கள் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றன. விஜயனின் கப்பல் இலங்கைக் கரையை அடைந்தபோது அவன் கண்டது ஒரு பெண் நாயைத்தான். அந்த நாயைத் தொடர்ந்து சென்றுதான் குவேனியைச் சந்தித்ததாக வரலாறு. இலங்கையில் 80-90 வகையான நாய்கள் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இலங்கையின் மக்கள் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது 10 பேருக்கு 8 நாய்கள் என்ற விகிதத்தில் காணப்படுகின்றன.

சென்ட் பேர்னாட் Send Bernard என்ற நாய் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவையும் தாண்டிவிடுமாம். பொக்ஷர் என்பன 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 75 ஆயிரம் ரூபா வரை.

இவைதவிர இலங்கையில் டொபமொன் - Dobomon, டல்மேஷன் - Dalmation, டாஸ் ஹவுன்ட் - Dash Hount, கிரே ஹவுண்ட் - Gray Haunt, கிரேட் என் - Grad en, போமனேரியன்-Formanarian, அல்சேஷன் போன்ற நாய்கள் அதிகமாகவும் எல்லோராலும் விரும்பி வளர்க்கப்படுகின்றன.



கஜகிஸ்தானில் சண்டைக்கென வளர்க்கப்பட்ட நாய்கள், ரத்தம் வழிய சண்டையிடுவதை பார்த்து ரசிக்கும் மனிதர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சியோல் விமான நிலையத்தில் பயணிகள் பொதிகளைப் பரிசோதனையிடும் நாய்.



லண்டன் - 'உலக நாய்க் கண்காட்சி'க்குக் கொண்டுவர சீனாவில் அலங்கரித்து ஆயத்தப்படுத்தப்படும் 'சீனக் கொண்டை நாய்'. கண்காட்சியில் 1 லட்சம் பார்வையாளர்கள்.



தன் செல்ல நாயை அணைத்தபடி பிரபல ஹொலிவூட் நடிகை ஷனொன் எலிசபெத்.



இரு நாய்க் குட்டிகளும் ஜப்பானின் பிரபல 'டொஜோசுகுயி' என்ற நடனத்தை ஆடுகின்றன. மீனவர் உடையணிந்து மீன் பிடிக்கும் கூடைகளை வைத்து ஆடும் நடனம்.

அது மட்டுமல்ல சுயதொழில் வேலை வாய்ப்பாகவும் நாய் வளர்ப்பு இலங்கையில் பிரபலம் பெற்று வருகின்றது.

நாய், ஓநாய், நரி, எல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவைதான். முலையூட்டிகள் எனும் பிரிவுக்குள் வருகின்றன.

இதில் பெரிய இனம் ஓநாய்தான். நான்கு கால்களில் இருக்கும்போது அதன் உயரம் 33 அங்குலம் இருக்கும். பொதுவாக சாம்பல் நிறம் அல்லது இளம் சிவப்பு சார்ந்த கபில நிறமாக இவை இருக்கும்.

கிரீன்லாந்து, சைபீரியா போன்ற பகுதிகளில் ஓநாய்கள் அதிகமாக காணப்படுகின்றன. இங்கு இவற்றின் நிறம் வெள்ளை. அமெரிக்காவில் இதன் நிறம் கறுப்பு. மான், மரை, ஆடு, மாடு, செம்மறி ஆடு என்பவற்றோடு அது மனிதர்களையும் தாக்கி கொன்றுவிடும்.

வேட்டையாடுவதில் நாய்க்கு உள்ள திறமையைக் கண்ட கற்கால மனிதர்கள் நாயைப் பிடித்து வளர்த்து வேட்டைக்குப் பயன்படுத்தினார்கள்.

நாய் - மனிதன் உறவு உருவானது. காட்டு நாய்கள் வீட்டு நாய்களாக செல்லப் பிராணிகளாக மாறியது இப்படித்தான்.




புஷ் தனது நாயுடன்



தொலைந்த ஆலோசக(ர்) நாயைத் தேடித் தகவல் தரும்படி ஸ்பீக்கர் கட்டிச் சொல்லித் திரிந்தார்கள் யாழ்ப்பாணத்தில்.

நாகரிகம் இல்லாத மனிதர் மட்டுமல்ல நாகரிகத்தின் உச்சாணிக்கொம்பில் இருப்பதாகச் சொல்லிக்கொள்பவர்கள் கூட நாய்களை செல்லப் பிராணிகளாக வளர்க்கிறார்கள். மன்னர்கள், தலைவர்கள் எல்லாம் இதற்கு விதிவிலக்கல்ல. பட்டுமெத்தை, பஞ்சணை, உயர் ரக பால், பிஸ்கட் வகை... நினைக்கவே பொறாமையாக இருக்கிறது.

நாய்களால் பலவிதமான நோய்கள் பரவுகின்றன. நாய் வளர்ப்பவர்கள் நாயை மட்டுமல்ல. தம்மையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம்.

கட்டாக்காலி நாய்கள் அரசாங்கத்திற்கு பெரும் பிரச்சினை. ஜலபீதிகை நோய் விசர் கடி நாய்களால் பரப்பப்படுகின்றன.

சுகாதார அமைச்சிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு, ஒழிப்பதற்கு விசேட ஏற்பாடுகளும் உண்டு. ●

## என்னைச் சுற்றிலும்

எல்லா நாய்களும் அலைகின்றன
எல்லா நாய்களும்
மோப்பம் பிடிக்கின்றன.
முகத்தை முகத்தைப் பார்க்கின்றன.
பின்னாலேயே வருகின்றன
பயந்து ஓடினால் துரத்துகின்றன
கொஞ்சம் பழகிவிட்டாலும் போதும்
நக்கத் தொடங்கி விடுகின்றன.

தெரு நாய்களுக்குப் பெயரில்லை
வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவை
வீட்டு நாய்களும்....
என்றாலும், எல்லா நாய்களும்
ஒரே நாய்கள்தான்.

பார்க்க சாது மாதிரித் திரிகிற
*Belt* போட்ட நாய்களிடம்
எப்போதும் ஜாக்கிரதையாகவே
இருக்க வேண்டியிருக்கிறது.

யாராக இருந்தாலும்
கண்டுகொள்ளாமல் இருக்கிற
ஓரிருவரைத் தவிர
எல்லோரையும் விரோதியாகப் பார்க்கிற
நாய்களும் உண்டு.

இந்தத் தெரு நாய்களுக்கு
அந்தத் தெரு நாய்கள்
பெரும்பாலும் சினேகிதமாய் இருந்ததில்லை.

ஒத்த குணத்தில்தான் இருக்கின்றன
எல்லா ஜாதி நாய்களும்!
இருந்தாலும், ஒதுங்கிப் போகிற
தெருநாயைப் பார்த்து
காரணமில்லாமல் குரைப்பதில்தான்
*Balcony* நாய்க்கு பரமசந்தோஷம்.

என்ன செய்ய .....?
எப்போதோ விரட்டி விரட்டி
கடித்த அல்லது கடிக்க வந்த
நாய்க்காக, எல்லா நாய்களையும்
விரோதம் பாராட்ட வேண்டியிருக்கிறது.

- மா. காளிதாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் இசைத்தட்டு

## காதல் தொடர்



என்னைப் பொறுத்தவரை பல்லவன் படிக்கட்டுகள்தான் என் காதல் படிக்கட்டுகளின் முதல் படி!

'ரன்னிங்ல ஃபுட்போர்ட்ல ஏறி இறங்கத் தெரியுமா?' என்று ராகிங் நேரத்தில் என்னிடம் கேட்டார்கள்.

'தெரியாது சார்!'

'அட.... குழந்தைப் பையா...' என்று தங்கள் சாகசங்களைப் பட்டியல் போட்டார்கள். பிற்காலத்தில் அதே சீனியர்கள் என்னிடம்தான் தங்கள் முயற்சிகளுக்கு ஆலோசனை கேட்டு வந்தார்கள்.

எனது பல்லவன் என்சைக்ளோபீடியா விலிருந்து ஒரு ஓலைச்சுவடி உங்கள் பார்வைக்கு....
கல்லூரி மாணவர்களுக்கான வானிலை எச்சரிக்கை:

'கிண்டியிலிருந்து புறப்பட்டிருக்கிற 45-பி என்ற பல்லவப் புயல் இன்னும் சற்று நேரத்தில் செல்லம்மாள் கல்லூரி, எஸ்.ஐ.இ.டி கல்லூரி வழியாகச் சுமார் முப்பது முப்பத்தைந்து ஃபிகர்களை ஏற்றிக்கொண்டு சிறிய ஃபிகரழுத்த மண்டலமாக உருவாகியிருக்கிறது. அது லஸ் கார்னரை அடையும்போது வழக்கமாக அங்கே நிற்கும் ஐந்து வெயிட் ஃபிகர்கள் அதில் ஏறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காயிதே மில்லத்தில் அது சற்று வலுப்பெற்று மீண்டும் இருபது ஃபிகர்களை ஏற்றி மாபெரும் ஜொள்ளழுத்த மண்டலமாக உருவாகக்கூடும். ஐஸ் ஹவுஸில் லேடீஸ் ஸ்பெஷலோ என்று அச்சுறுத்தும் வகையில் தீவிரமாகும் இந்தச் சூறாவளி, இன்னும் சற்று நேரத்தில் வங்காள விரிகுடாக் கடற்கரையில் அமைந்திருக்கும் மாநிலக் கல்லூரியைக் கடக்கவிருக்கிறது. எனவே, பஸ் ஸ்டாப்பில் சைட் அடித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் அவசரமாகத் தங்களை அழகுபடுத்திக் கொள்வது நல்லது. சற்றே குள்ளமான மாணவர்கள் தாழ்வான இடங்களில் நிற்காமல் உயரமான இடங்களில் பாதுகாப்பாக நிற்கும்படி ஜொள்ளாராய்ச்சி நிலையம் எச்சரிக்கிறது.

வருகின்ற இந்தப் புயல்காற்றில் சுடிதாருடன் கூடிய மிதமான ஃபிகர்களோ, மிடியுடன் கூடிய தீவிரமான ஃபிகர்களோ வரக்கூடும். ஆங்காங்கே பூப்போட்ட சில சேலைகளும் தென்படலாம். ஃபுட்போர்டில் ஃபிகர் நடமாட்டம் இராது.

அதிகபட்ச ஃபிகர்நிலை - 35 என்பதால் பாதிப்பு சற்று பலமாகவே இருக்கும் என்று அதற்குமுன் வந்த பஸ்ஸிலிருந்த எமது நிருபர் தெரிவிக்கிறார்.'

- கல்லூரி விழா என்றில் நான் இதைச் சொல்ல, பேராசிரியர்கள் முதல் பெருக்குபவர்கள் வரை எல்லோரும் கைதட்டினார்கள்.

அவசரமாகச் சிலர் குறிப்பெடுத்துக் கொண்டார்கள். ஒரு புள்ளிமான் கும்பலே என் பக்கத்தில் வந்து சிந்தஸைஸர் குரலில் சிரித்தது.

'ஹே.... கலக்கீட்டிங்க... கிரேட்யா... வெரி நைஸ்மா...' என்று ஆளாளுக்குச் சொன்னார்கள்.
திடீரென ஒரு பெண் என் கையைப் பிடித்து 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்று சொன்ன விநாடியில் மறைந்து போக... தம்தன.... தம்தன... என்று வெள்ளை கவுன் போட்ட குரூப் டான்ஸர்கள் வரைக்கும் வந்தாச்சு!

எங்கள் சபை கூடியது.

'மாமூ... உனக்குக் கை குடுத்துச்சே.... அதான் இருக்கிறதுலேயே வெயிட் ஃபிகரு'. நான் திரும்பிப் பார்த்தேன். பாராட்டி விட்டுப்போன கூட்டம் பக்கத்திலேயே வட்டமாநாடு நடத்த, கூட்டத்தில் அவளைத் தேடினேன். அப்போதைக்கு ஒரு சாதா பார்வைதான் கிடைத்தது.

பல்லவனில் பொழுதுபோக்குகளில் ஒன்றாகவும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் நம்பர் ஒன்றாகவும் நான் பயன்படுத்தியது மிமிக்ரியைத்தான். எம்.ஜி.ஆர், கலைஞர், ரஜினி என்று எல்லா பிரபலங்களையும் எங்கள் பஸ் டிரைவர், கண்டக்டர்களாக வைத்து நகைச்சுவையாகப் பேசிப்பேசி அதில் ஓரளவு தேறியிருந்த நேரம். கல்லூரித் தேர்தலில் எனது நண்பன் போட்டியிட்டான். எல்லா வகுப்புகளுக்கும் போய்ப் பலகுரலில் பேசி 'வோட்' கேட்பதென்று ஐடியா! அவளது வகுப்புக்கும் போக நேர்ந்தது.

ஏற்கனவே சாதா பார்வை அனுபவம் இருந்ததால் அன்று எனக்குக் கிடைத்தது 'சம்திங் ஸ்பெஷல்' கலந்த எக்ஸ்ரே பார்வை என்று பட்சி சொல்ல, 'ஆத்தா.... நான் பாஸாயிட்டேன்!' என்று நான் அலறாத குறை.

அவளுக்குப் பழக்கமான என் நண்பனைத் தூது அனுப்பி விட்டு உட்கார்ந்திருந்த நேரத்தில் அதே கும்பலில் இன்னொரு பெண் என்னை விரும்புகிறாள். அவளிடம் பேச வேண்டும் என்று எனக்கு ஓலை வந்தது. தமிழ் சினிமாக்களில்தான் இதெல்லாம் நடக்கும் என்று நான் மறுப்பு தெரிவித்து எனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தி தூது அனுப்பினேன்.

பேச்சுவார்த்தைக்கு முகூர்த்தம் குறிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏன் அவளைப் பிடிக்கலை?' - இதுதான் அவள் கேட்டது.

'உங்களைப் பிடிச்சிருக்கே. அதான்...' - நான் சொன்ன விநாடியில் அவள் சிரித்துவிட... அது போதாதா என்ன...?

அந்த ஒற்றைச் சிரிப்பையே சம்மதத்தின் சாவியாக எடுத்துக் கொண்டுவிட்டேன்.

எங்கள் காதலுக்குத் தூதுவனாக, உதவியாளனாக என்று பல நேரங்களில் நின்ற என் நண்பனை நினைத்துப் பார்க்கிறேன்.

'த... லவ்வு... மண்ணாங்கட்டின்னு அலையறீங்களேப்பா.... இதெல்லாம் நமக்குப் புடிக்காத மேட்டரு... ஆனா, நீ என் ஃப்ரெண்ட். அதனாலதான் வர்றேன்' என்பான். காதல்மீது துளிகூட மரியாதை இல்லாதவன் அவன்.

சில வருடங்கள் நகர்ந்தன. கல்லூரியில் நாங்கள் துவக்கிய இசைக்குழு, வியாபாரரீதியாக வெற்றி பெற்று படுபிஸியாகி விட்டோம். அதே நேரத்தில் அவள் கவலைகொள்ள ஆரம்பித்தாள்.

'ஓகே. மன்டே ஈவினிங் மீட் பண்ணலாம்' என்று சொல்லிவிட்டுப் போயிருப்பேன். சரியான நேரத்தில் அவள் மட்டும் வந்து நிற்பாள். நான் ஏதாவதொரு கோயில் கச்சேரியில் மிமிக்ரி பண்ணிக்கொண்டிருப்பேன்.

'இதுதான் வாழ்க்கைன்னு முடிவாயிருச்சு. நாம் இப்படி ஓடி ஓடி உழைக்கிறதே அந்தப் பொண்ணுக்காகத்தானே' என்று என் நினைப்பெல்லாம் அவள்மீதிருக்க, அவளை மையமாக வைத்து நான் ஓடிக் கொண்டிருக்க.... நான் அவளை விட்டு விலகிக் கொண்டிருக்கிறேன் என்று அவள் நினைத்துக்கொள்ள... எல்லாமே விட்டுப்போயிற்று. என்னை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்து 'நான் அவளைப் பார்ப்பதையே தவிர்க்கப் பார்க்கிறேன்' என்று அவள் புரிந்து கொண்டதுதான் எதிர்பாராத சோகம்.

சந்திக்கக்கூட முடியாமல் போய்க்கிடந்த நேரத்தில் ஒருநாள் அவளை நான் மீண்டும் பார்த்தேன். கொடுமையான நினைவு அது!

எங்கள் காதலுக்கு எல்லாமுமாக நின்றான் என்று நான் சொன்னேனே... காதல்மீது துளி அளவுகூட மரியாதை இல்லாத நண்பன் என்று. அவனுக்கும் காதல் வந்தது. மிகத்தீவிரமாக அலைந்து திரிந்தான். எல்லாம் சரியாகவே போய்க் கொண்டிருந்த நேரத்தில் ஏதோ ஒன்று பிசக, அவன் காதல் முறிந்து போயிற்று. தோல்வியின் வலி தாளமுடியாமல் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

அவனது இறுதிச் சடங்கில்தான் அவளை நான் இறுதியாகச் சந்தித்தது. அவள் இறுக்கமாக மௌனம் காக்க... உடைந்து போயிருந்த நான் அங்கே ஊமையாகிப் போனேன். அந்தச் சந்திப்புக்குப் பிறகு எங்களுக்குள் இருந்த உறவே தொலைந்து போயிற்று! என் நிலைமையை எடுத்துச் சொல்ல எவ்வளவோ முறை முயன்றேன். அவள் வீடு தீவானது.

நாலைந்து வருஷங்களுக்குப் பிறகும் தவிப்போடு எத்தனை விதமான முயற்சிகள். சரி, யாராவது ஒரு பெண்ணை அனுப்பிப் பேசிப் பார்க்கலாம் என்றுதான் என் இசைக்குழுவில் பாடும் மாலதியிடம் தயக்கத்தோடு எல்லாம் சொன்னேன். மௌனமாகக் கேட்டுக்கொண்டு மாலதி போய்விட, 'சொன்னது தப்போ?' என்று நான் குழம்பி விட்டேன்.

மாலதியின் மௌனத்துக்குக் காரணம் எனக்கு அன்று மாலையே ரிகர்சலில் புரிந்தது, 'மாலதி மனசுக்குள் என்னை விரும்புகிறாள்' என்று. என் நண்பர் ஒருவரிடம் சொல்லி வைத்திருக்கிறாள். எனக்கு அது தெரியவந்தபோது ஆடிப்போய்விட்டேன்!.

கடகடவென பழசெல்லாம் நினைவுக்கு வந்தது. கல்லூரியில் என்னை ஒருதலை ராகமாக நேசித்த ஒரு பெண்ணைத் தட்டிக்கழித்தேனே. அதே மாதிரி இது செகண்ட் ரவுண்டா...?

'நீ விரும்பற பொண்ணைக் காட்டிலும் உன்னை விரும்பற பொண்ணைக் கட்டிக்கோ... நல்லா இருப்பே' என்று பின்னாளில் ரஜினி சொன்னதை எனக்கு அப்போதே நண்பர்கள் சொன்னார்கள்.

மாலதியிடம் 'உன்னோட பேசணும்' என்றேன். வந்தாள். 'நான் கேள்விப்பட்டது நெஜமா?' என்றேன். 'ஆமா' என்றாள்.

அந்த முதல் சந்திப்பிலேயே, 'என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குச் சம்மதமா?' என்று கேட்க, நிமிர்ந்து என் முகம் பார்த்து மலர்ச்சியாகத் தலையசைத்தாள்.

அவள் 'சரி'யென்று சொன்னாலும் இருவர் வீட்டிலும் தவறு என்றார்கள். 'காதல்' என்ற ஒரே விஷயம் அத்தனை உறவுகளையும் கலைத்துப் போட்டு விட்டது. பத்திரிகையடித்துப் பந்தல் எழுப்பி, மேளம் கொட்டி, சுற்றமும் நட்பும் சூழ நடத்த முடியாமல் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம்.

இதோ எங்கள் வாழ்க்கை!

என் மனைவி மாலதி என் இசைக்குழுவிலும் பிரதான பாடகி. என் தொழிலும் புரிந்து கொண்டதால் அத்தனை சிரமங்களிலும் என்னோடு சேர்ந்து அவள் நிற்கிற ஒரே ஆறுதல் போதும். என் காதல் இனிதாக இசைக்கிறது.

இருந்தாலும், முதல் முத்தமும் முதல் காதலும் முதுமையிலும் நினைவுக்கு வரும் என்பார்கள். முத்தமே இல்லாத என் முதல் காதல், சத்தமே இல்லாமல் என்னைக் கொல்கிறது.

இங்கே காதல் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இன்றும் அதை விரசமாகத்தான் பார்க்கிறார்கள். வியாதியாகத்தான் நினைக்கிறார்கள் செய்தியாகத்தான் பரப்புகிறார்கள். காதல் யாரை விட்டது? இதோ இந்நேரம் உங்கள் வீட்டிலும் யாராவது காதல் படிக்கட்டுகளில் ஏறிக்கொண்டு இருக்கலாம்.

'காதல் கீதல்னு அலைஞ்சே.... வெட்டிப் புடுவேன். உனக்கெல்லாம் காதல் கேக்குதோ? மீறி எதுனா பண்ண நினைச்சே... என் பிணத்தைத் தாண்டித்தான் போக வேண்டி இருக்கும்' என்று அதகளம் பண்ணியிருக்கிறீர்களா?

உங்கள் ஞாபகத் திரையை ஓட்டிப் பாருங்கள். வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் நீங்களும் சத்தியமாக... சத்தியமாகக் காதலித்தவர்தானே? உங்களுக்குள்ளேயே பட்டிமன்றம் நடக்கட்டும். காரணம், காதலிக்காத மனிதன் என்று எவரும் கிடையாது. காதலிக்காத எவரும் மனிதனே கிடையாது.

தப்பு எனும்போது தலையில் குட்டிச் சுட்டிக்காட்டலாம். ஆனால், அதெல்லாம் தப்பு என்று தப்பான முடிவுக்கு முன்கூட்டியே வந்து தடுப்பதெல்லாம் சரிதானா?

காதலுக்கு எதிரானவர்களே... உங்கள் எண்ணங்களை வடிகட்டுங்கள். முடிந்தால் காதலுக்கு ஒரு படி கட்டுங்கள். அந்த தாஜ்மஹால் மீது அன்புக்கொடி கட்டுங்கள்!

*(நன்றி : காதல் படிக்கட்டுகள்.)*



**லக்ஷ்மன் (ஸ்ருதி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PICASSO பிகாஸோ PICASSO

'மகனே, நான் ஒரு புறாவின் ஓவியத்தை வரைந்து கொண்டிருக்கிறேன். இது இன்னும் முடிந்தபாடில்லை. நான் ஒரு பயணம் செல்ல வேண்டும், நீ அந்த புறாவை வரைந்து முடித்துவை' என்று மகனிடம் கூறிவிட்டு தந்தை வீட்டிலிருந்து வெளியேறினார்.


பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் வீட்டுக்கு வந்த போது ''அப்பா! இதோ வரைந்து முடித்து விட்டேன்'' என்று கூறியவாறு ஒன்பது வயது மகன் புறாவின் சித்திரத்தை தந்தையிடம் கொடுத்தான்.

ஆச்சரியத்தால் அகலத் திறந்த கண்களை மூடவில்லை தந்தை. புதுமை... புதுமை! புறா ஒன்று அப்படியே உயிரோடு இருப்பது போல் இருக்கின்றது. திறமை வாய்ந்த ஓவியரும், சித்திர ஆசிரியருமான அந்த தந்தை தனது மகனின் அபார திறமை கண்டு அதிசயித்தார்.

''மகனே! நீ மிகவும் கெட்டிக்காரன். இனிமேல் நான் தூரிகை பிடிக்கமாட்டேன். எனது கலர்கள், தூரிகைகள், கன்வாஸ் துணி, பலகை எல்லாவற்றையும் நீயே எடுத்துக் கொள்... நீ உலகமே வியக்கும் ஓவியனாகத் திகழ்வாய்'' என்று கூறினார்.

ஜோசே ருயிஸ் பிளஸ்கோ (Jose Rutz Blasco) என்ற அந்த ஓவியர், ஓவியம் வரைவதிலிருந்து விடைபெற்றுக்கொண்டார்.

அவரது கெட்டிக்கார மகன், ஓவிய உலகின் போக்கையே மாற்றியவன் ஆனான். அவன் தான் 20ம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மக்கள் ஓவியன் பிகாஸோ.



பப்லோ ருயிஸ் (Pablo Rutz Picasso) என்ற ஓவியன் 1881 அக்டோபர் 25ம் திகதி ஸ்பெயின் நாட்டின் 'மலாகா' (Malaga) என்ற கிராமத்தில் பிறந்தான்.

அவனது பிறப்பு கூட புதுமையானதுதான். மரியா பிகாசோ லொபெக்ஸ் (Maria Picasso Lopex), குழந்தையை பிரசவிக்கும் வேளையில் கடுமையான வேதனைக்கு உள்ளானாள். குழந்தை பிறக்கும்போது அதன் நாடி ஓட்டம் இருக்கவில்லை.

''குழந்தை இறந்து விட்டது. எப்படியாவது தாயைக் காப்பாற்றுவோம்'' என்று கூறியவாறு மருத்துவிச்சி குழந்தையை விட்டு தாயைக் கரைசேர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டாள்.

அவ்வேளை, எதிர்பாராத விதமாக அவளது சகோதரரான டாக்டர் 'டொன் சல்வடோர்' தமது சகோதரியின் நலன் விசாரிக்க அங்கு வந்து சேர்ந்தார்.

**- வித்யாபதி -**

அவர், இறந்துவிட்டது என்று கிடத்தப்பட்டிருந்த குழந்தையை பரிசோதித்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! நாடி ஓட்டம் இருந்தது. இதயம் துடிக்க ஆரம்பித்தது. அவசர முதலுதவிகள் செய்தார். குழந்தை பிழைத்து விட்டது.

இப்படித்தான் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்றுத்திகழ்ந்த 'பிகாசோ' உயிர்வாழும் பாக்கியம் பெற்றான். இச்சம்பவம் பிற்காலத்தில் தாம் வரைந்த ஓவியங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதாக பிகாசோ ஒருமுறை குறிப்பிட்டார்.

பிகாசோவின் தந்தை மகனை லாலொன்ஜா நுண்கலைக் கல்லூரி (La Lonja fine Art Academy)யில் சேர்த்தார். அங்கு ஒரு பாடம் உயிரோவியங்களை வரைவதாகும். ஏனைய மாணவர்களுக்கு ஒருமாதம் எடுக்கும் அந்த பாடத்தை பிகாசோ ஒரே வாரத்தில் முடித்துவிட்டதால் ஆசிரியர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானார்.


எப்படியோ 1897ஆகும்போது அதாவது அவரது 16வது வயதில் லாலொன்ஜோ கல்லூரியில் படிப்பதற்கு ஏதும் எஞ்சியிருக்கவில்லை. ஆசிரியர்களுக்கும் அவருக்குப் படிப்பிப்பதற்கு எதுவுமே இருக்கவில்லை. பின்னர் சேர்ந்த ரோயல் அகடமியிலும் நடந்தது இதேதான்.

'பிகாசோ'வின் ஆரம்பகால ஓவியங்கள் இயற்கைக்கு முன்னுரிமை கொடுத்து தீட்டப்பட்டதாக காணப்பட்டது. எப்போதுமே வறிய மக்களின் எண்ணங்களுக்கும் அபிலாசைகளுக்கும் அவர் மதிப்பளித்தார். அப்பாவி மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படும்போது உண்மையாகவே அவர் துன்பத்துக்குள்ளானார். அடுத்தவர்களின் துயரங்களை தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி இல்லை என்று அவர் ஒருமுறை கூறினார். அந்த துன்பங்களை அவர் சித்திரங்களாக வடித்தார்.

பிகாசோவின் ஆரம்ப யுகத்தின் படைப்புக்களை முக்கியமாக இரு பிரிவுகளாக வேறுபடுத்திப் பார்க்கலாம். அது நீல யுகம் (Blue Period), இளஞ்சிவப்பு யுகம் (Pink Period) என்பனவாகும்.

நீலயுகத்திற்குரிய ஓவியங்கள் 1901 காலப்பகுதியில் ஆரம்பித்தது. கூடுதலாக நீல நிறத்தைப் பயன்படுத்தியதால் இப்பெயர். 1904 காலப் பகுதியில் முடிவடைந்த நீலயுகத்தின் படைப்புக்கள் சோகத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருந்தன. இருள், சோகம், துயரம் என்பன சித்திரங்களின் மூலம் உயிர் பெற்றன. மகிழ்ச்சியற்ற வாழ்க்கையின் சில பகுதிகளை அந்த யுகத்தில் வரைந்ததாக பிகாசோ கூறியுள்ளார்.

எல்கிரகோ (EL Greco) என்ற ஓவியரது படைப்புக்களினால் பிகாசோ பாதிப்பு பெற்றது இந்த யுகத்தில்தான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**'கவலையில் இருந்து கலை பிறக்கிறது' என்பது ஆரம்பகாலத்திய பிகாசோ வாசகமாகும். அக்கட்டத்தில் நோயாளிகள், ஏழை எளியோர், ஊனமுற்றோர், பைத்தியக்காரர்கள், முதியோர் போன்ற சமூக அவலங்களையும் துயரில் உழல்வோரையும் தீட்டியிருக்கிறார். அவர்கள் குனிந்த தலைகளுடன் சந்திக்கின்றனர்; வெறிச்சோடிய விடுதிகளில் அமர்கின்றனர்; அற்பசொற்ப உணவை பகிர்ந்து கொள்கின்றனர்; யாரும் நேருக்கு நேராக பார்த்துக் கொள்வதில்லை. 'பார்வையற்ற கிட்டார் கலைஞன்', 'இரு சகோதரர்கள்', 'குதிரையை நடத்திச் செல்லும் சிறுவன்', 'துயரம்' என்ற அவரது ஓவியங்கள் முக்கியமானவை.**

பிகாசோவின் நீல யுகத்தின் படைப்புக்கள் பெரும்பாலும் எல்கிரகோவின் சித்திரங்களை ஒத்தவையாக அமைந்தன. இந்த யுகத்தில் பிகாசோவின் படைப்புகளுக்கு நல்லதோர் உதாரணமாக கஸகேமாஸ் நல்லடக்கம் (Burial of Casagemas) சித்திரத்தைக் கூறலாம். 1901ல் வரையப்பட்ட இந்த ஓவியம் பிரதிபலிப்பது அவரது நண்பரின் தற்கொலையை.

பிகாசோ தமது உள்ளத்திலுள்ள கவலைகள் கருணை என்பவற்றை அடையாளப்படுத்தியது இப்படித்தான். இந்த யுக சித்திரங்களுக்கு உதாரணங்களாக 'பெண்ணோடு காகம்' (Woman with Crow), தாயும் நோயுற்ற குழந்தையும் (Mother and Sick Child) ஆகிய ஓவியங்களை குறிப்பிடலாம்.

இளஞ்சிவப்பு யுகத்தில் அவருடைய தொனிப்பொருள் சர்க்கஸ்காரர்கள், முகமூடிக்காரர்கள், கோமாளிகள் போன்றவர்களே. அந்த குழுக்களோடு பிகாசோ ஒன்றாக வாழ்ந்தார். இதனாலேயே அவர்கள் தொடர்பான விஷயங்கள் அதிகமாக சித்திரங்களில் இடம்பெற்றன. சுழியோடியின் குடும்பமும் வானரமும் (The Family of Acorabats with Ape) இளஞ்சிவப்பு யுகத்தில் பிகாசோவினால் படைக்கப்பட்ட சிறப்பான படைப்பாகும்.

**அம்பலப்படுத்துதல் மற்றும் படைத்தல் என்னும் இரு பணிகளையும் அவரது படைப்புகள் ஆற்றக்கூடியவை. இரு உலகப்போர்கள், ஸ்பெயினின் உள்நாட்டுப் போர் என அரசியல் உலகிலும், எக்ஸ்பிரஷனிஸம், சர்ரியலிஸம், கியூபிஸம் என் கலை உலகிலும் தாக்கங்களும் வளர்ச்சிப் போக்குகளும் நிகழ்ந்த காலகட்டம் அவருடையது. ஸ்பானிஷ்காரரான அவர் பாதி ஆயுளை பாரிஸில் கழித்தவர். கலைஞர் என்ற ரீதியிலும் மனிதர் என்ற ரீதியிலும் மிகுந்த சர்ச்சைகளுக்கு ஆளானவர். ஆயினும் நவீன ஓவியத்திற்கு அவரது படைப்பு பிரவாகம் நிறையவே வழங்கியிருக்கிறது.**



இந்திய மை, பெஸ்டல், சாயம் என்பவற்றைப் பயன்படுத்தி கனமான அட்டையின்மீது தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியம் குழந்தைகள்மீது கொண்டுள்ள அன்பின் அடையாளமாக விமர்சகர்களால் குறிப்பிடப்படுகிறது. காரணம், இதன் கதாநாயகன் சிறிய குழந்தை என்பதுடன் அதன் பெற்றோரினதும் குரங்கினதும் கவனம் குழந்தையின் மீதே இருக்கிறது.



'கோமாளியின் மரணம்' (The Death of Harlquin), 'தாயும் குழந்தையும்' ஆகிய இரு ஓவியங்களும் இந்த யுகத்தவை.


இளஞ்சிவப்பு யுகத்தில் பிகாசோவின் வாழ்வு மாற்றங்கள் 'பர்னடே ஒலிவியர்' என்ற யுவதியின் காரணமாக ஏற்பட்டவை. முதல் சந்திப்பின் பின் மிகவும் நெருக்கமாக பழகியதோடு அவரது ஓவியங்களுக்குத் தேவையான எண்ணங்களையும் ஏற்படுத்த உதவினாள்.

1907ல் இயற்கை ஓவியங்களை வரைவதில் திளைத்திருந்த பிகாசோ புதுமாதிரியான ஓவியமொன்றை வரைந்து முடித்தார். பல்வேறு கேத்திரகணித (Geomatric) கோணவடிவமைப்பைக் கொண்ட அவிக்நோனில் இளம் பெண்கள் (The Young Ladies of Avignon) என்ற சித்திரத்தை உருக்களித்தார். இந்த ஓவிய சம்பிரதாயம் பிற்காலத்தில் கியூபிஷம் (Cubism) என்ற பெயரில் உலகப்பிரசித்தி பெற்றது. இதனால் கியூபிஷத்தின் தந்தை என பிகாசோ போற்றப்படுகின்றார்.

இந்த படைப்பை வெளியிட்ட வேளையில் எல்லா நாடுகளிலுமுள்ள ஓவியர்கள் விமர்சகர்கள் மட்டுமல்ல பொதுமக்களும் அந்த ஓவியத்தை நிராகரித்து விட்டார்கள். ஏனைய ஓவியர்களில் பெரும்பாலோர் அவரை அவமானப்படுத்தினார்கள். பைத்தியக்காரன் என்று இழிவு படுத்தினர். எனினும் பிகாசோ அமைதியாக தமது பணிகளை தொடர்ந்தும் மேற்கொண்டார். ஓவியக்கலைஞன் புதிய படைப்பொன்றை வெளியிடும்போது பரபரப்பு ஏற்படுவது இயல்பான விஷயம் என்பதை அவர் புரிந்து வைத்திருந்தார்.

குறுகிய காலத்திற்குள்ளேயே கியூபிஷம் பொதுமக்களின் வரவேற்பைப் பெற்ற ஓவிய பாணியாக மாறியதோடு 'அவிக்நோனில் இளம் பெண்கள்' படைப்புக்குப் பின் பிகாசோவின் கியூபிஷ படைப்புக்களினுள் விருட்சதேவதை, நின்று கொண்டிருக்கும் பெண், அமர்ந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கியூபிஸம் ஒரு புதிய பாஷை. புலன்களை எட்டுவதற்கு - தொடுவதற்கு பிகாசோவும் சக ஓவியர் பராக்கும் கண்ட புதிய அணுகுமுறை. ஒரு பொருளை பல கோணப் பார்வையால்தான் முழுமையாக அறிய முடியும் என்பது கியூபிஸ்டுகளின் வாதம். நீக்ரோ சிற்பங்களில் தான் கண்ட சில அடிப்படை அம்சங்களைத் தனது ஓவியத்தில் பிகாசோ பயன்படுத்திக் கொண்டார். வளைகோடுகளை விடுத்து ஒரு பொருளின் அர்த்த உருவத்தை, அப்பொருளின் ஆத்மாவை கேத்திரகணித வடிவில் காண்பித்தார். ஒரு மனித முகத்தை பக்கவாட்டில் சித்தரித்தாலும், மறுபக்கம் இருக்க வேண்டிய கண்ணையும் காதையும் புத்தகத்தை விரித்தாற் போல பக்கத்திலேயே கியூபிஸ சித்திரங்களை தீட்டினார். அவரது பார்வை ஆத்மார்த்தமான பார்வை. "I Paint what I see." என்றார் பிகாசோ.**

பெண், நிர்வாணப் பெண் என்பன பல்வேறு அசையாப் பொருட்களின் கலவைகளான ஓவியங்கள் சிலவாகும்.

பிகாசோ தன் வாழ்க்கையில் படைத்த மிக அரிய ஓவியம் குவேர்னிகா (Quernica). 1937ல் யுத்தத்தின் காரணமாக ஸ்பெயினின் குவேர்னிகா நகரம் ஜெர்மனியின் குண்டுத் தாக்குதல்களினால் அழிந்து போனதை நேரில் பார்க்க நேர்ந்த அவர் மிகவும் அதிர்ச்சியடைந்தார்.

வயோதிபர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், உயிரினங்கள் அழிவதைக் கண்ட பிகாசோவுக்கு ஏற்பட்டது கடும் அதிர்ச்சியும் பீதியுமே. பொதுமக்கள் மத்தியில் நடமாடிய ஓவியன் என்ற வகையில் அவருக்கு இதனைத் தாங்கிக் கொள்ளும் திராணி இருக்கவில்லை. நூறு ஆயிரம் மீட்டர்கள் புகைமண்டலத்தால் மூடப்பட்ட பூமியில் சிதைவுகளுக்கு நடுவில் அவரது காதுகளுக்கு தெளிவாகக் கேட்டது மரண ஓலங்கள் மட்டுமே.

இதன் காரணமாக 'குவேர்னிகா' என்ற அரிய கலைப் பொக்கிஷம் உலகுக்கு கிடைத்தது. அவர் அந்த ஓவியத்தில் காட்டுவது அன்றிருந்த மக்கள், மிருகங்கள், உபகரணங்கள் என்பன யுத்தத்தால் அழிவுக்குள்ளான முறையையே.

மனிதர்களால் மனிதர்களுக்கு ஏற்படும் அநீதிக்கு எதிரான கலைஞராக பிகாசோவை மதிப்பதற்கு நல்லதோர் உதாரணம் குவேர்னிகாதான்.

இன்று நாம் பேசுகின்ற 'கொலாஜ்' (Collage) என்ற சித்திர ஊடகத்தை உலகுக்குத் தந்தவரே பிகாசோதான்.

கழிக்கப்பட்ட கடதாசித்துண்டுகள், துணிவகைகளின் துண்டுகள், சாக்கு, ஓலை, மரத்துண்டுகள்... இப்படி எந்தப் பொருளையும் பெரும் கலைப்படைப்பாக அவர் மாற்றினார். இது இன்று பாடசாலைகளில் சிறுவர்களுக்கு சித்திரம் கற்பிக்கும் ஒரு முறையாக காணப்படுகின்றது.

மேலும் ஒரு சிற்பியாகவும் கிரா∴பிக் கலைஞராகவும், மட்பாண்ட வடிவமைப்பாளராகவும் அவர் புகழ்பெற்றுத் திகழ்ந்தார். வாழ்வின் அந்திப் பொழுதில் பிகாசோ பெரும் பணக் குவியலுக்கு உரிமையாளராக இருந்தார். எனினும் எப்போதுமே செல்வந்த வாழ்க்கை வாழாதது அவருடைய குறிப்பிடத்தக்க பண்பாகும்.





அவர் பணத்திற்கு ஆசைப்பட்ட மனிதரல்லர். எப்போதுமே பொதுமக்களின் தரப்பில் இருந்தார். இதன் காரணமாக சமூக மேல்மட்டத்தில் அவருக்கு எதிராக ஏற்பட்ட எதிர்ப்புக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் அவை எதனையும் பொருட்படுத்தாமல் ஏதாவது ஒரு சிந்தனையுடன் புதிய ஆய்வுகளை அல்லது நிர்மாணங்களை மேற்கொண்டார். முன்வைத்த காலைப் பின் வைக்காது உத்வேகத்துடனும் வீரியத்துடனும் செயல்பட்டார். அதுதான் அவரது வெற்றியின் இரகசியமே.


1973 ஏப்ரல் 8ம் திகதி முழு உலகிலுமே விலைமதிக்கமுடியாத பல அரிய படைப்புக்களை தந்துவிட்டு கண்களை மூடிக் கொண்டபோது உலகம் அவரது ஓவிய சம்பிரதாயத்தை ஏற்று அங்கீகரித்துவிட்டது.

அதாவது 20ம் நூற்றாண்டின் இணையற்ற ஓவியராக அவரை முழு உலகும் ஏற்றுக்கொண்டது. இன்றும் அவரை ஒரு ஓவிய யுகமாகவே கௌரவிக்கின்றது.

கோடீஸ்வரராக இருந்தாலும் சாதாரண ஒரு ஏழையைப் போலவே வாழ்ந்த இந்த அரிய, அபூர்வ ஓவியன் மரணித்ததும் ஒரு ஏழையைப் போலவே. இறுதி உயிலைக்கூட எழுதி வைக்காமல் மறைந்தார் அந்த மாபெரும் ஓவிய மேதை. •

**அழகாக இருந்தாலும், அருமையாக இருந்தாலும், ஆபாசமாக இருந்தாலும், அருவருப்பாக இருந்தாலும் அதில் தன்னையே காணக்கூடிய பக்குவம் பிகாசோவுக்கு இருந்திருக்கிறது. ஒருவகை 'தன் மோகம்'தான் இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்க வேண்டும். ''அழகுதான் எத்துணை விந்தையானது! என்னைப் பொறுத்தவரையில் அழகு என்பது பொருளற்ற ஒரு சொல். அதன் முக்கியத்துவம் எங்கிருந்து வருகிறது? அது எங்கே வழிநடத்துகிறது? இது எனக்குத் தெரியவில்லை. அழகின் எதிர்மறை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?" இதுவே அவரது வினாவும் சந்தேகமுமாக இருந்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரோமில் நடைபெற்ற ஒரு சிற்பக் கண்காட்சியைப் பார்வையிடும் ஒரு மேட்டுக்குடிப் பெண் சிற்பக் கலைஞர் ஒகஸ்ரே ரொடின். கண்காட்சியின் பெயர் ''Rodin and The Lesson From Italy''. அருகே கல்கத்தா சேற்றில் மிதக்கும் பையன்களையும் பாருங்கள்! இரு படங்களுக்கும் இடையே ஒரு ஒற்றுமை தெரியவில்லையா? இருவேறு உலகம்!



இந்திய நகரான கல்கத்தாவின் வெப்பநிலை 36° சென்ரிகிரேட்டுக்கு உயர்ந்தபடியால் சேரிப்புறச் சிறுவர்கள் சேற்றுக்குள் குதித்து சூட்டைத் தணிக்க முயல்கின்றனர். பார்க்க கலையம்சமாக இருந்தாலும் இதன் பின்னணியில் மறைந்திருப்பது வறுமையின் கொடுமையே.



றீசெப் கார்சிஹான் துருக்கி நாட்டின் தென் நகரொன்றில் வாழும் ஒரு ஐஸ்கிறீம் வியாபாரி. எடை 300 கிலோ (600 இறாத்தலுக்கு மேல்) தன் உடல் கொழுப்பைக் குறைப்பதற்கு சத்திரசிகிச்சை செய்யப் போகிறார். நலன்விரும்பிகளிடமிருந்து பண உதவி எதிர்பார்க்கிறார்.

சேர்க்கஸ் என்றால், அது சீனர்களுக்குக் கிடைத்த பிறவித் திறமையா என்ன? Chineese Circus உலகெங்கும் பிரபலம் தான். ஜகார்த்தா நகருக்கு வந்து இரண்டரை மணிநேரம் நடனக்காட்சியோடும் வர்ண ஒளிகளோடும் பார்வையாளரை மயிர்க்கூச்செறிய வைத்து சீனர்கள் அசத்தும் காட்சி.





அமெரிக்காவில் வெலிங்டன் நகரில் பறக்கவிடப்பட்டுள்ள பனிக் கரடி வடிவ பலூன் இது. போட்டிக்காக 5 நாட்களாக தொடர்ந்து பறக்கவிடப் பட்டுள்ளது. இப்போட்டிக்கு பல்வேறு நாடுகளில் இருந்தும் வரும் போட்டி யாளர்களால் இதுபோன்று பெரிய பலூன்கள் பறக்கவிடப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுது

மே 2001



**சியட் கணிப்பீட்டில் இன்று முதலாம் இடத்தில் இருக்கும்**
**மாயப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மே 03ம் திகதி

# சர்வதேச ஊடக சுதந்திர தினம்

மே 3ம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினமாகும். இத்தினம் இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் 1991 மே 3ல் நமீபியாவின் தலைநகரான வின்டொக் (Windhoek)கில் ஐக்கிய நாடுகள் சபையும் யுனெஸ்கோ நிறுவனமும் நடாத்திய மாநாட்டின் அறிக்கையாக ஆபிரிக்க வெளியீட்டாளர்கள் - பத்திரிகையாளர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிரகடனம் வெளியிடப்பட்ட சில மாதங்களுக்குள்ளாகவே இத்தினத்தை உலக பத்திரிகை சுதந்திர தினமாக ஐ. நா. பிரகடனப்படுத்தியது.

நாடுகளின் ஜனநாயக பூர்வமான பொருளாதார அபிவிருத்திக்கு சுதந்திரமான பன்முகத்தன்மை வாய்ந்த கட்டுப்பாடுகளற்ற பத்திரிகைச் சுதந்திரம் அவசியம் என்பதை இப்பிரகடனம் வலியுறுத்துகின்றது. இந்தப் பிரகடனத்தை அநேகமாக எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. கொள்கையளவில் எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் வெவ்வேறு அணுகுமுறைகளும் அளவுகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கின்ற அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தாரான பத்திரிகைச் சுதந்திரத்தால் பெரிய பாதிப்புகள் ஏதும் வர வாய்ப்பில்லை. ஆனால் பொருளாதார ரீதியாகவும் கல்வி கலாசார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற வளர்முக நாடுகளில் இச் சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியுமா என்ற கேள்வி தொடர்ந்து விவாதிக்கப்பட்டே வருகின்றது.

வளர்ச்சியுள்ள மேற்கு நாடுகள், குறிப்பாக அமெரிக்கா இன்று தனது மேலாதிக்கத்தை உலகம் முழுவதும் நிறுவுவதற்காக 'உலக மயமாக்கல்' என்ற திட்டத்தை வைத்து செயற்படுத்துகின்றது. எனவே அதன் மூலதனம் போல அறிவியல் கலாசார விடயங்களும் எல்லை தாண்டிச் செல்வதற்கு ஏதுவாக பூரண பத்திரிகைச் சுதந்திரத்தை வலியுறுத்துவது வியப்பானதல்ல.

அதேபோல சீனா, வியட்நாம், கியூபா, வடகொரியா போன்ற சோஷலிச நாடுகள் தமது பத்திரிகைச் சுதந்திரக் கொள்கையை 'மக்களுக்கு சுதந்திரம் - எதிரிக்குக் கட்டுப்பாடு' என்று வரையறுத்துச் செயலாற்றுகின்றன. பல மூன்றாம் உலக நாடுகளும் இவ் வடிச்சுவட்டையே பின்பற்றுகின்றன.

மறுபக்கத்தில் இராணுவ ஆட்சி அல்லது மன்னராட்சி நடைபெறும் நாடுகளில் மக்களுக்கு எவ்விதமான பத்திரிகைச் சுதந்திரங்களும் வழங்கப்படுவதில்லை.

இந்த வகையறாவுக்குள் நமது நாட்டு விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட 'விடுதலை' என்ற போர்வையில் செயற்படும் பல பயங்கரவாத இயக்கங்களும் சேர்மதியாக இருக்கின்றன.

ஆக, பிரகடனம் அலங்காரமாக இருந்தாலும், நடைமுறைகள் வேறுபடுவது தான் யதார்த்தமாக இருக்கின்றது. உலகில் ஒரே அம்சம், ஒரே கொள்கை, ஒரே கண்ணோட்டம் என்பது இருக்க முடியாது என்ற பிரபஞ்சத்தின் விஞ்ஞான பூர்வமான அடிப்படை உண்மையை இந்நிலை வேறொரு வகையில் நிரூபிக்கின்றது.

இந்த உண்மையை மிக எளிமையாக விளக்குவதானால், வயது முதிர்ந்த ஒருவருக்கும் சிறு குழந்தைக்கும் ஒரே நோய்க்குக் கூட, ஒரே மருந்தைக்கூட, ஒரே அளவில் கொடுப்பது கூடாது என்ற உதாரணத்தின் மூலம் விளக்கலாம்.

எது எப்படியிருப்பினும், உண்மையை வெளிக்கொணர்வதற்காக மட்டுமின்றி அவற்றை மறைப்பதற்காகவும் பத்திரிகையாளர்கள் பயன்படுகின்றார்கள் என்ற கசப்பான உண்மையையும் நக்கீர நடுநிலை நின்று ஏற்கத்தான் வேண்டும்.

ஆனால் அதற்கான தண்டனை அரச பயங்கரவாதமும் 'விடுதலை'ப் பயங்கரவாதமும் செய்வது போல மரணதண்டனை அல்ல. அதை எதிர்கொள்வதற்கு பத்திரிகையாளர்கள் உண்மை என்ற நெருப்பாற்றில் தமது பேனாக்களைத் தோய்த்தெடுக்க வேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரியனை எரிக்கப் போய் கையைச் சுட்டுக்கொண்டு...!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினுள் விடுதலைப்புலிகளால் திட்டமிட்டு அனுப்பப்பட்ட சில மாணவர்கள் ஏப்ரல் மாத ''அமுது'' சஞ்சிகையை பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள விற்பனை நிலையங்களில் இருந்தும், யாழ் நகரம் மற்றும் நெல்லியடி போன்ற இடங்களில் உள்ள விற்பனை நிலையங்களில் இருந்தும் பலாத்காரமாக எடுத்து தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். அத்துடன் நில்லாது இனி மேல் ''அமுது''வை விற்பனை செய்யக் கூடாது என எச்சரிக்கை செய்தும் உள்ளனர். இச்சம்பவமானது பல உண்மைகளை வெளிக்கொணர்ந்து உள்ளதுடன், எம்மத்தியில் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

**இதனைக் கண்டு தமிழ்ச் சமூகத்தில் எவருமே ஆத்திரப்பட்டு 'அமுது'' சஞ்சிகையை எரிக்க முன்வரவில்லை. காரணம் இந்த இரண்டு விடயங்களும் முற்றுமுழுதும் உண்மையானது என்பதும் அதேவேளை இதைப்பற்றி பேசினால் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாக வேண்டுமென்பதையும் பொதுவாக தமிழ்ச் சமூகம் புரிந்தே வைத்திருக்கிறது.**



**முதலாவது உண்மை.** யாழ்ப்பாணப் பல்கழைக்கழகத்தில் 'கல்வி கற்பதற்கென' வன்னியிலிருந்து வந்துள்ள சில மாணவர்கள் விடுதலைப் புலிகளால் திட்டமிட்ட முறையில் அனுப்பப்பட்டவர்கள்தான் என்பது. (அமைதியாக இருந்த யாழ். பல்கலைக்கழகத்தில் இம் மாணவர்கள் வந்த பின்னர்தான் பகிடிவதை அதிகரிப்பு, பத்திரிகையாளர் மீதான தாக்குதல், 'பொங்கு தமிழ்' என்ற சமாதான எதிர்ப்புக் குழப்பம், தற்பொழுதைய ''அமுது'' எரிப்பு என்பன நடந்துள்ளமை இதை நிரூபிக்கின்றது).

**இரண்டாவது உண்மை.** புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியில் பத்திரிகைச் சுதந்திரமோ, கருத்துத் தெரிவிக்கின்ற சுதந்திரமோ, சிந்தனைச் சுதந்திரமோ இல்லை என்ற விடயம். அரசாங்க கட்டுப்பாட்டிலிருக்கும் யாழ்ப்பாணத்திலேயே புலிகளின் 'மாணவர்கள்' இத்தகைய அடாவடித் தனங்களில் ஈடுபடுகின்றார்கள் என்றால் புலிகளின் முள்ளுச் சப்பாத்தின் கீழ் இருக்கும் வன்னியில் மக்களின் சுதந்திரங்கள் எப்படியிருக்கும் என்கின்ற உண்மை.

இவை ஒருபுறமிருக்க, ''அமுது'' சஞ்சிகையை எரித்த மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சில விடயங்கள் உண்டு. ஒரு கருத்தை தீவைத்துக் கொளுத்துவதன் மூலம் அதனை முற்றாக அழித்துவிட முடியாதென்பதும், அத்தோடு இன்னொருவரின் கருத்தை எரிப்பது தனது சொந்த கருத்துக்கு தானே தீவைத்துக் கொள்வதற்கு சமன் என்பதுமாகும்.

என்று ஒரு புத்திஜீவிச் சமூகம் துப்பாக்கிகளுக்குப் பயந்து தன் சுயமான சிந்தனை ஓட்டத்தை நிறுத்திக் கொள்ளுகிறதோ, சுயமாக சிந்திப்பவர்களை அப்படிச் சிந்திக்காதே என அச்சுறுத்தி தடை போட முனைகிறதோ அந்தக் கணமே அது தனது சமூகத்தின் அடுத்த கட்ட பரிணாம வளர்ச்சியை குழிதோண்டிப் புதைக்க ஆரம்பித்துவிட்டது என்பதும் உண்மை.

ஒரு சமூகம் தன் சுதந்திரத்திற்காக போராடிக்கொண்டிருக்கின்ற அதேவேளை அப்போராட்டத்தின் வெற்றியின் பின்னர் அமையப்போகின்ற சுதந்திரச் சூழ்நிலையில் சாதாரண மக்களின் ஜனநாயக வாழ்வைப்பற்றிச் சிந்திக்க மறந்தால், அச்சமூகத்தின் எதிர்காலம் எக்கதிக்கு உள்ளாகும் என்பதற்கு உலகில் எம் கண்முன் பல உதாரணங்கள் உள்ளன.

## 'அமுது' ஏன் எரிக்கப்பட்டது?

ஏப்ரல் மாத 'அமுது' சஞ்சிகையில் 'நெற்றிக்கண்' பகுதியில் *'யுத்த களத்தில் தமிழின வாரிசுகள்! பரீட்சைக் களத்தில் தலைவரின் வாரிசுகள்!!'* என்ற தலைப்பில் ஒரு விமர்சனக் கண்ணோட்டம் எழுதப்பட்டிருந்தது. அவ்விமர்சனத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் அடுத்த பக்கத்தில் ஒரு கேலிச்சித்திரம் வரையப்பட்டிருந்தது. இவ்விரண்டு விடயங்களும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்கு கீழ் உள்ள வன்னிப்பிரதேசத்தில் சாதாரண மக்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தை கவனத்திற்கொண்டே பிரசுரிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'தமிழ் நெற்'றுக்கு கொழும்பில் இருந்து செய்திகளைத் தொகுத்து எழுதுபவர் டி. சிவராம். இவர் முன்பு புளொட் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர். 1989 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் புளொட்டின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு மொத்தமாக 338 வாக்குகளைப் பெற்றவர். அவ் அமைப்பின் பல உள் அராஜகங்களில் ஈடுபட்டவர்.**

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தனது பிள்ளைகள் கற்பதற்கு சகல வாய்ப்புக்களையும் செய்துகொடுத்திருக்கின்ற அதேவேளை, தான் பரம எதிரியென கருதும் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு தனது பிள்ளைகளை தோற்றச்செய்து அரசாங்கம் வழங்கும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்ற - ஒரு விடுதலை இயக்கத்தலைவனுக்கு ஒவ்வாத - கீழ்த்தரமான செயலை இவ்விமர்சனம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதேவேளை பக்கத்திலே வரையப்பட்டிருக்கின்ற கேலிச்சித்திரம், எவ்வாறு தனது பிள்ளைகளை மட்டும் அவர் நன்றாக கற்பித்து ஒப்பேற்றிவிட்டு, ஏனைய சின்னஞ்சிறு பாலகர்கள் கல்வி கற்க முடியாத ஒரு யுத்தச்சூழலை உருவாக்கி, அவர்களையெல்லாம் பலவந்தமாக யுத்த களத்திற்கு அனுப்பி கொன்று மாவீரர் மயானங்களில் புதைத்துவிட்டு, உலகநாடுகளுக்கு தான் சிறுவர்களை படையில் சேர்ப்பதே கிடையாது என்று பொய்யுரைக்கும் கடைகெட்ட செயலை விமர்சித்திருக்கின்றது.

இதனைக்கண்டு தமிழ்ச் சமூகத்தில் எவருமே ஆத்திரப்பட்டு 'அமுது' சஞ்சிகையை எரிக்க முன்வரவில்லை. காரணம் இந்த இரண்டு விடயங்களும் முற்றும் முழுதும் உண்மையானது என்பதும், அதேவேளை இதைப்பற்றி பேசினால் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாக வேண்டுமென்பதையும் பொதுவாக தமிழ்ச்சமூகம் புரிந்தே வைத்திருக்கிறது.

ஆனால் புலிகளால் யாழ் பல்கலைக் கழகத்திற்குள் அனுப்பப்பட்ட இம்மாணவர்கள் இச்சஞ்சிகையை தீயிட்டுக் கொளுத்தியதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை. காரணம் அவர்கள் தமிழ்ச்சமூகத்தின் நலனை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அல்ல. அவர்களை 'அமுது' சஞ்சிகை எழுதிய இவ் உண்மை நிச்சயம் சுட்டிருக்கும் என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இம்மாணவர்களை ஆத்திரமூட்டிய இன்னுமொரு விடயம் இவ் 'அமுது' இதழில் வெளிவந்த அரசியல் கட்டுரையாகும். *'பக்குவமான ராஜதந்திரமும் பயில்வான் அரசியலும்'* எனும் தலைப்பில் எழுதப்பட்ட அக்கட்டுரையில் தமிழ் அரசியல் சமூகம் இன்று புரிந்துகொள்ள வேண்டிய தேசிய, பிராந்திய, சர்வதேசிய யதார்த்தம் என்ன என்பது அழுத்திக் கூறப்பட்டுள்ளது. அதேவேளை புலிகளின் கடந்தகால அரசியல், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை எவ்வாறு சிதைத்துச் சீரழித்து தலைப்பாகைக்காக கனவு கண்ட எம்மை கோவணத்தோடு நடுச் சந்தியிலே நிற்பாட்டியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட முனைந்திருக்கிறது. அதுமட்டுமன்றி தனது சொந்த தற்கொலை அரசியலால் பிரபாகரன் தானும் அம்மணமாகி தமிழ்ச் சமூகத்தையும் உலக அரங்கில் அம்மணமாக்கிவிட்டிருப்பதை சகலருக்கும் எளிதில் புரியும்படியாக அக்கட்டுரையில் ஒரு கேலிச்சித்திரத்தின் மூலம் சொல்லமுற்பட்டிருக்கிறது.

## 'தமிழ் நெற்'றும் டி. சிவராமும்!

'அமுது'வின் கூரிய சரியான விமர்சனங்களை புறம்தள்ளமுடியாமல் போனதால் இன்று புலிகள், தமது சர்வதேச பிரச்சார ஊடகமான 'தமிழ்நெற்' மூலம் 'அமுது' சஞ்சிகையின் ஆசிரியரும், அதன் ஆசிரியர் குழுவும் 'கொல்லப்படக்கூடிய துரோகிகள்' என்ற தொனிப்பட தன் செய்தி அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

'தமிழ் நெற்'றுக்கு கொழும்பில் இருந்து செய்திகளைத் தொகுத்து எழுதுபவர் டி. சிவராம். இவர் முன்பு புளொட் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர். 1989 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் புளொட்டின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு மொத்தமாக 338 வாக்குகளைப் பெற்றவர். அவ் அமைப்பின் பல உள் அராஜகங்களில் ஈடுபட்டவர். 1985ல் அமைப்பின் சார்பில் தானே நேரடியாகச் சென்று திருகோணமலையில் வைத்து அகிலன், செல்வம் ஆகிய இரு புளொட் அமைப்பின் உறுப்பினர்களை சுட்டுக்கொன்றவர் டி. சிவராம் தான் என புளொட் உறுப்பினர்களே சொல்கிறார்கள். புலிகள் இயக்கம் புளொட் அமைப்பை தடை செய்த பின்னர் கொழும்புக்கு தப்பி ஓடிவந்து தனது ஆங்கிலப் புலமையைப் பயன்படுத்தி The Island பத்திரிகையில் 'தராக்கி' என்ற பெயரில் கட்டுரைகளை எழுதி வந்தார்.

அப்போதே தன் கட்டுரைகளுக்காக தகவல் சேகரிக்கும் சாக்கில் இலங்கை ராணுவ உளவுப்பிரிவு அதிகாரிகளுடனும், வெளிநாட்டுத் தூதரகங்களிலுள்ள உளவுத்துறை அதிகாரிகளுடனும் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும் 'ஏஜெண்டாக' தொடர்புகளை வைத்திருந்தார். பின்னர் 'தமிழோசை' ஆனந்தியுடன் வன்னி சென்று புலிகளின் தலைவரைச் சந்தித்து வந்தபிறகு 'தமிழ் நெற்' வேலைகளை ஆரம்பித்தார். இப்போது சகல உளவுப்பிரிவுகளோடும் தகவல்களைப் பங்கிட்டுக் கொள்ளும் 'டபுள் ஏஜெண்டாக' கொழும்பிலிருந்து செயற்பட்டு வருகிறார்.

இந்த டி. சிவராம் அவர்களின் 'தமிழ் நெற்', 'அமுது' எரிப்பு தொடர்பான தனது செய்திக் குறிப்பில், 'அமுது'வின் பிரதம ஆசிரியர் ஜனாதிபதியின் நெருங்கிய சகா என்றும், UTHR (J) என்ற மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்கள் அமைப்பின் உறுப்பினர் என்றும், 'அமுது' ஆசிரியர் குழு இராணுவத்துடன் தொடர்புள்ளது என்றும் தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் 'அமுது' பிரதம ஆசிரியரையும் ஆசிரிய குழுவையும் 'துரோகிகள்' பட்டியலில் சேர்த்துக் கொள்ளும்படி புலிகளுக்கு குறிப்புக் காட்ட டி. சிவராம் செய்துள்ள முயற்சியே இது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

*(தொடர்ச்சி VIIIம் பக்கம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் ஒரு சக்கரவர்த்தி வாழ்ந்தார். ஏழைகளை மதியாத அவர் மிகுந்த கோழையாக இருந்தார். எப்போதும் யாராவது தன்னைக் கொன்றுவிட்டோ கவிழ்த்துவிட்டோ பதவிக்கு வந்துவிடலாம் என எல்லோரையும் சந்தேகப்படுபவராக இருந்தார்.

ஒவ்வொரு அசைவிலும் எதிரியைக் கண்டார். அதிகாரமுள்ள கோழை மன்னன் ஆதலால், சின்னதாக கருத்து வேறுபடுபவர்களையும் அழித்துவிடுவதுதான் தன் பதவிக்கு பாதுகாப்பானது என்று எண்ணினார்.

எனவே, தன்னைப் பற்றி அவதூறு பேசுபவர்களுக்கும், இவர்கள் அவதூறாகத்தான் பேசுவார்கள் என்று தான் கருதியவர்களுக்கும் தண்டனைகள் அளித்து வந்தார்.

மன்னர் கருத்துக்கு மறுபேச்சுப் பேசுபவர்களை எல்லாம் அந்தச் சக்கரவர்த்தி துரோகிகளாக அறிவித்தார். தன் உளவுப்படை வீரர்களை நாடெங்கும் அனுப்பி, அவ்வாறு மன்னரின் மண்டுகத்தனங்களை எண்ணி மனதுக்குள் சிரிப்பவர்களையும் அவதானித்து, அவர்களைக் கொன்றுவிட ஆக்ஞையிட்டிருந்தார்.

இரண்டு பேர் அல்லது அதற்கு மேற்பட்டோர் சேர்ந்து கதைத்துக் கொள்வதும், தனியே ஒருவர் சிரித்துக் கொள்வதும் தேசத் துரோகமாக அறிவிக்கப்பட்டிருந்தது. மக்கள் தங்கள் மனதுக்குள் நினைப்பதைக் கூட, ஒற்றர் படையினர் கண்காணித்து கொலைத் தீர்ப்பளித்து விடுவார்கள் என்ற பயத்தில், மன்னனைப் பாராட்டிப் பேசுவதற்கு மட்டுமே அவர்கள் வாய் திறந்தார்கள்.

தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக வாய் திறந்து சொன்னவர்களுக்கு வாய்க்குள்ளேயே ஈட்டியைச் செருகி தெருவோர மரங்களில் குத்தி நிறுத்திவிடுவதன் மூலம் எல்லோர் மனங்களிலும் பயங்கரத்தை ஏற்படுத்தியிருந்தார் மன்னர்.

எதிர்த்துப் பேசியவர்களெல்லாம் எப்படி விதவிதமாகக் கொல்லப்பட்டார்கள் என மக்களிடையே வாய்மொழிக் கதைகள் நிலவின.

எந்த ஒரு மூலையில் பயங் குறைந்தாலும் தன் பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று உணர்ந்திருந்த சக்கரவர்த்தி கூசாமல் கொலைகள் செய்து, ஒரு பயங்கரச் சூழ்நிலையில் தன் பதவியைக் காப்பாற்றி வந்தார்.

இருந்தபோதும், தன்னைச் சேர்ந்தவர்களோ அல்லது பொதுமக்களில் யாருமோ தனக்கு எதிராகச் செயற்பட்டுத் தன்னைக் கவிழ்த்துவிடக் கூடும் என்ற பயம் மன்னரிடம் குறையாமலிருந்தது. நிம்மதியும் உறக்கமுமின்றித் தவித்தார்.

ஒரு நாள் வேறு தேசத்திலிருந்து வருவதாகக் கூறிய இரு யாத்திரிகர்கள் அரச சபைக்கு வந்தார்கள். விதவிதமாக ஆடை நெய்வதில் வல்லவர்கள் என்று கூறிக்கொண்ட அவர்களைச் சக்கரவர்த்தி விருந்தினர்களாகத் தன் அரண்மனையில் தங்க வைத்தார். சில நாட்களிலேயே மன்னர் மனதிலுள்ள குழப்பத்தை அந்த நெசவாளர்கள் இருவரும் அறிந்துகொண்டார்கள்.

**எந்த ஒரு மூலையில் பயங் குறைந்தாலும் தன் பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று உணர்ந்திருந்த சக்கரவர்த்தி கூசாமல் கொலைகள் செய்து, ஒரு பயங்கரச் சூழ்நிலையில் தன் பதவியைக் காப்பாற்றி வந்தார்.**

மன்னரிடம் சென்று, யாரும் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத அழகான ஆடை ஒன்றைச் சக்கரவர்த்திக்கு நெய்து தர விரும்புவதாகக் கூறினார்கள்.

"அதில் அப்படியென்ன விசேஷம்?" என்று அசுவாரசியமாகக் கேட்டார் சக்கரவர்த்தி.

அந்த ஆடையை நெய்யப் பயன்படும் பொருளுக்கு அதி அற்புதமான குணம் உண்டென்றும், அது பதவியாசை பிடித்தவர்களுக்கும், சதி எண்ணம் கொண்டவர்களுக்கும், திருத்த முடியாத முட்டாள்களுக்கும் கண்ணுக்குத் தெரியாது என்றும் சொன்னார்கள் நெசவாளர்கள்.

# அம்மணச் சக்கரவர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்திக்கு ஆர்வம் உண்டாயிற்று.

'ஹும், அப்படியென்றால் நல்லதுதான். அந்த ஆடையை நான் அணிந்து கொண்டால், என்னுடனிருப்பவர்களில் யார் யார் சதிகார எண்ணத்தோடு இருக்கிறார்கள், யார் என்னைக் கவிழ்க்க நினைக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்துவிட முடியும். உடனடியாக அந்த ஆடையை எனக்காகத் தயார் செய்யச் சொல்ல வேண்டும்' என்று மனதுக்குள் நினைத்தார்.

**சக்கரவர்த்தி நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். நம்பிக்கையானவர்களிடமெல்லாம் பரிசோதித்துப் பார்த்தாகிவிட்டது. இனிமேல் வெளியே சென்று என் படைத் தளபதிகள் மற்றும் அதிகாரிகளிலெல்லாம் யார் யார் சதிகாரன் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்று வெளியே புறப்பட்டார்.**

பிறகு அவர்கள் இருவரது தோள்மீதும் கை போட்டுத் தன் ரகசிய அறைக்கு அழைத்துச் சென்றார்.

''அந்த ஆடையைத் தயாரிக்க உங்களுக்கு என்னென்ன வேண்டும், சொல்லுங்கள்?'' என்றார்.

தனியான இடம் ஒன்றும், சிறிது பணமும் தரும்படி கூறிப் பெற்றுக் கொண்டார்கள் நெசவாளர்கள்.

அப்படியே ஏற்பாடு செய்தார் சக்கரவர்த்தி.

அந்த அற்புத ஆடையை நெய்யும் வேலை ஆரம்பமாகியது.

இதற்குள் அந்த ஆடையின் சிறப்பு பற்றியும் சக்கரவர்த்திக்காக அது தயாராவது பற்றியும் மக்களுக்குச் செய்தி பரவியது. 'எங்கள் முட்டாள் மகாராஜா இன்னும் எத்தனை தலைகளை உருட்டப் போகிறானோ' என்று மக்கள் மேலும் பயந்தார்கள்.

நெசவாளர்கள் இருவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட தனியிடத்தில் உல்லாசமாக இருந்துகொண்டு, ஆடை நெய்யும் வேலையில் மும்முரமாக இருப்பதாகப் பாவனை காட்டினார்கள். அந்தவழியால் யாராவது வருவதைக் கண்டால், தறியில் வேலை செய்வது போலக் காட்டிக் கொண்டார்கள்.

ஆடை எப்படித் தயாராகிறது என்று பார்த்துவர சக்கரவர்த்தி ஆசைப்பட்டார். ஆனால் பதவியாசை பிடித்தவர்களுக்கும் முட்டாள்களுக்கும் அந்த ஆடை கண்ணுக்குத் தெரியாது என்பது நினைவுக்கு வந்து அவருக்குச் சங்கடமளித்தது.

மக்களும் அந்த மந்திர சக்தி வாய்ந்த ஆடையைப் பார்ப்பதற்கு ஆவலாயிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த ஆடையின் மூலம், தங்கள் அயலவர்களில் யார் யார் முட்டாள்கள், யாரெல்லாம் பதவிக்கு அலைகிறார்கள் என்பதையறியவும் ஆவலாயிருந்தனர்.

இரண்டு மாதங்களின் பின்னர், அந்த நெசவாளர்கள் 'வேலை முடிந்துவிட்டது' என்று மன்னருக்குச் செய்தியனுப்பினார்கள். சக்கரவர்த்தியின் ஆணைப்படி, அவர்களோடு அவர்கள் நெய்த ஆடையை வைத்திருந்த அழகிய பெட்டியும் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டது.

சக்கரவர்த்தியின் ரகசிய அறையில் அவருக்கு அந்த ஆடையை அணிவித்துவிடுவதற்காக நெசவாளர்கள் போனார்கள். இருவரும் பெட்டியைத் திறந்து ஓர் ஆடையை எடுப்பது போல் பாவனை செய்து, மன்னருக்கு ''எப்படியிருக்கிறது அரசே எங்கள் வேலைப்பாடு?'' என்று பெருமிதத்தோடு கேட்டார்கள்.

'என்ன இழவு இது! என்னால் எதையும் பார்க்க முடியவில்லையே...' என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்ட மன்னர் அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிரித்தார். அவருக்கு யோசனையாகிவிட்டது. 'என் கண்களுக்கு இந்த ஆடை தெரியவில்லையே... நான் முட்டாளாக இருக்கலாம், ஆனால் பதவிக்குத் தகுதியற்ற சதிகாரனா... இது வெளியே தெரியவந்தால் எவ்வளவு பெரிய அவமானம்!' என்றெல்லாம் மனதை ஓடவிட்ட மன்னர், மெல்லச் சமாளித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓ.. மிக அழகாயிருக்கிறதே! அற்புதம்!'' என்றார் நெசவாளர்களை மகிழ்ச்சியுடன் பார்த்து.

இருவரும் அந்த ஆடையைக் கையில் பிடித்திருப்பது போலப் பாவனையைத் தொடர்ந்தபடி, அதன் ஒவ்வொரு பகுதியையும் காட்டி, சிறப்புக்களை விளக்கி, 'மன்னர் பெரும் பாக்கியம் செய்தவர்' என்றார்கள்.

''ஆம்... ஆம்...'' என்று தலையசைத்தார் மன்னர்.
''நீங்கள் என் பாராட்டைப் பெறுகிறீர்கள்'' என்றும் சேர்த்துச் சொன்னார்.
சக்கரவர்த்தி உடுத்தியிருந்த ஆடைகளைக் களைந்து இந்தப் புதிய ஆடையை மாட்டிவிட்டார்கள் இருவரும். பிறகு இருவரும் மன்னரைப் பார்த்து ''கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது. இந்த ஆடை உங்கள் கம்பீரத்தை மேலும் அதிகப்படுத்திக் காட்டுகிறது'' என்றார்கள்.

என்றாலும் உள்ளே சிறிது சந்தேகமிருந்த சக்கரவர்த்தி வெளியே வர வெட்கப்பட்டு, முதலில் அரசியாரைத் தானிருந்த அறைக்குள் அழைத்தார்.

இந்த ஆடையின் சக்தி பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த பட்டமகிஷியாருக்கு, தன் கண்களுக்கும் அது தெரியவில்லை என்பது சற்று அதிர்ச்சியைத் அளித்தது. உடனேயே சமாளித்துக் கொண்டு ''நாதா இந்த ஆடை உங்களுக்கு மிகவும் எடுப்பாக இருக்கிறது'' என்று கண்களை அகல விரித்துச் சொன்னார்.

மன்னருக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது.

தனது மூத்த அமைச்சரை அழைத்தார். அவர் மிக வயதானவர் என்பதால் கடைசிக் காலத்தில் பதவிக்கெல்லாம் ஆசைப்படமாட்டார் என்பதுடன் மிகுந்த படிப்பறிவுமிக்க அவர் முட்டாளாகவும் இருக்கமாட்டார். எனவே, அவரையும் அழைத்துச் சோதித்துவிடலாம் என்று சக்கரவர்த்தி நினைத்தார்.

வந்து பார்த்த அமைச்சருக்கும் வியப்பாகிவிட்டது. ''கடவுளே நான் என்ன முட்டாளா? இந்த ஆடை என் கண்ணுக்குத் தெரியவில்லையே... ம்... கடைசிக் காலத்தில் என்னை முட்டாளென்றும், சதிகாரன் என்றும் ஒப்புக்கொண்டா விடைபெற வேண்டும்... வேண்டாம்'' என்று நினைத்துக் கொண்ட அமைச்சர், ''அடடா அற்புதமாயிருக்கிறது. அப்படியே நெஞ்சையள்ளுகிறது. ஆடை ஏறியிருப்பது மன்னரின் உடம்பிலல்லவா! அதுதான் அத்தனை பளபளப்பாயிருக்கிறது'' என்று வெளுத்துக் கட்டினார்.

சக்கரவர்த்தி நிம்மதிப் பெருமூச்சு விட்டார். நம்பிக்கையானவர்களிடமெல்லாம் பரிசோதித்துப் பார்த்தாகிவிட்டது. இனிமேல் வெளியே சென்று என் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளிலெல்லாம் யார் யார் சதிகாரன் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்' என்று புறப்பட்டார்.

படைத்தளபதிகளும், நம்பிக்கைக்குரிய அதிகாரிகளும் வரிசையாக இருபுறமும் நிற்க, சக்கரவர்த்தி நடுவே கம்பீரமாக நடந்து வந்தார். எல்லோரும் அதிர்ச்சியடைந்தார்கள். 'சக்கரவர்த்தியின் உடலில் எந்த ஆடையையும் காணவில்லையே. உடம்பில் ஒன்றுமில்லாமலே இந்த ஆர்ப்பாட்ட நடைபோடுகிறாரே... அசிங்கம் அசிங்கம்!' என்று மனதுக்குள் மன்னரின் கேவலத்தை நினைத்து வெட்கப்பட்டார்கள்.

ஆனால், மன்னரின் எந்த முடிவுகளுக்கும் மறுப்புச் சொல்லாத, மன்னரைப்பற்றி மனதுக்குள் கூட சந்தேகங்களை முளைக்கவிடாத அந்த 'வீரப்'பழக்கத்தில் எல்லோர் முகங்களும் சலனங்களை வெளிக்காட்டாதபடி இறுகிப் போயிருந்தன.

பல போர்களில் விழுப்புண்கள் பெற்று, கடைசிப் போரில் காலும் ஊனமாகி, இப்போது மன்னரின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராகிவிட்ட மூத்த முன்னாள் படைத்தளபதி முதலில் வாய் திறந்தார்.

''எப்போதும் எமது மக்களுக்காக உயிரைவிடத் தயாராயிருக்கும் நமது மாமன்னரின் நெஞ்சுறுதியைப் பறைசாற்றுவதாயிருக்கின்றது இந்த நேர்த்திமிகும் ஆடை'' என்றார்.

தன்னைவிட இளையவரான மூத்த தளபதி முந்திரிக்கொட்டை போல் முந்திக் கொண்டுவிட்டாரே என்று ஆத்திரமடைந்த ஒற்றர் தலைவர், மன்னரின் காதருகே நெருங்கி கிசுகிசுப்பான குரலில் சொன்னார்.

''மன்னரின் இரவுநேர நகர்வலத்திற்கும் ஏற்ற ஆடை இது. மக்கள் மத்தியிலிருந்து வந்த இரகசியத் தகவல்களும் இதைத்தான் தெரிவிக்கின்றன...''

''ஓ எவ்வளவு நன்றாகப் பொருந்தியிருக்கிறது ஆடை! வண்ணங்களும் குஞ்சங்களும்... ஆஹா அற்புதம்!.'' என்றார் கிழக்குப் பிராந்தியத்தின் தளபதி.

''மக்களின் நலன் கருதி, இத்தகைய அற்புதத் துணியில் இன்னும் சில ஆடைகளை மன்னர் தைத்துக்கொள்ள வேண்டும்'' என்றார் ஆயுதக் கொள்வனவு அதிகாரி.

''தேசத்தின் விஞ்ஞான ரீதியான முன்னேற்றத்திற்குச் சக்கரவர்த்தியவர்களின் இந்த ஆடைகள் பெரும் பங்களிப்பைச் செய்யப்போகின்றன...'' என்றார் நாட்டின் கலாசாரப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த புலவர் பெருமகன்.

''மக்களைப் புரக்கும் மாமன்னரின் ஆட்சியில்தான் இத்தகைய அற்புத ஆடைகளைத் தயாரிக்கும் நெசவாளர்கள் தோன்ற முடியும் என்பது நிரூபணமாகிவிட்டது'' என்றார் பிரச்சார வெளியீட்டுப் பணிகளுக்குப் பொறுப்பான அமைச்சர்.

''மக்களைப் புரக்கும் மாமன்னரின் ஆட்சியில்தான் இத்தகைய அற்புத ஆடைகளைத் தயாரிக்கும் நெசவாளர்கள் தோன்ற முடியும் என்பது நிரூபணமாகிவிட்டது'' என்றார் பிரச்சார வெளியீட்டுப் பணிகளுக்குப் பொறுப்பான அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அழகானது, அற்புதமானது, பரவசம் தருகிறது, கவர்ச்சிகரமானது, மன்னரின் மாண்பை அதிகப்படுத்துகிறது...'' போன்ற வார்த்தைகளைப் பலரும் சொல்லிக் கூச்சலிட்டார்கள்.

தளபதிகள், அமைச்சர்கள் மற்றும் தலைமைச் சீமான்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தை மன்னர் அவசரமாகக் கூட்டினார்.

**மக்களிடம் பயம் இருக்கும் வரைதான் நமக்கும் வாழ்வு, நான் பயப்படுவது தெரிந்துவிட்டால், அவ்வளவுதான்.... எல்லோருமாய்ச் சேர்ந்து என்னைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். எனவே பின்வாங்க முடியாது.**

நெசவாளர்கள் இருவருக்கும் மாமன்னரின் உருவம் பொறித்த வெற்றிப் பதக்கங்களும், 'மகா அரச நெசவாளர்' பட்டமும் அளிக்கவிருப்பதாக அறிவித்தார். மந்திரி பிரதானிகள் மகிழ்ச்சிக் கரகோஷம் செய்தார்கள்.

''குடிமக்களின் ஏகோபித்த கருத்தை ஏற்று மாமன்னர் இந்த முடிவை அறிவித்தமைக்காக மன்னருக்கு இந்த மந்திராலோசனைச் சபை மாபெரும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது'' என்று கூறி அமர்ந்தார் தலைமை அமைச்சர்.

''மன்னரின் இந்த அவையினுள்ளே சக்கரவர்த்திக்கு எதிரானவர்களும் முட்டாள்களும் எவருமில்லை என்பதை மன்னரின் இந்த ஆடைகள் தெளிவுபடுத்தி விட்டன. இனி மக்களிடையே யாராவது துரோகிகள் இருக்கிறார்களா என்பதையறிவதற்கு இந்த ஆடைகளோடு ஊர்வலம் வர சக்கரவர்த்தியவர்கள் சம்மதிக்க வேண்டும்'' என்று பணிவாக விண்ணப்பித்தார் விழாக்கள் மற்றும் வீரர் நடுகற்களுக்குப் பொறுப்பான அமைச்சர்.



மன்னர் சம்மதித்தார். வெண்கொற்றக்குடை கொண்டு வரப்பட்டது. வெளியே குதிரைகள் பூட்டிய ரதம் தயாரானது.

''ம்... நான் தயார்.'' என்று கூறிய சக்கரவர்த்தி, தன் உடைகளை மீண்டுமொருமுறை வடிவாக இருக்கிறதா என்று கண்ணாடி முன்னால் நின்று சுற்றிச்சுற்றிப் பார்த்துக் கொண்டார். ஆடை என்று எதுவும் அவர் கண்ணுக்குத் தெரியாதது அவரைத் துணுக்குற வைத்தது.

ஆனால் அதற்கிடையில், அந்த நெசவாளர்கள் இருவரும், மன்னரின் உடையைச் சரிசெய்வதுபோல அங்குமிங்கும் அசைத்து விட்டார்கள். காலருகே உடையைச் சரிசெய்து குஞ்சங்களை இழுத்துவிடுவது போல பாவனை காட்டினார்கள்.

மேலங்கியின் பின்பாகத்தைத் தூக்கிச் செல்லும் பணியாட்கள், கீழே குனிந்து அங்கியைக் கையில் எடுப்பதுபோல் எடுத்துக் கொண்டனர். தூக்கிப் பிடித்துக்கொண்டு மன்னரின் பின்னால் நடக்கத் தயாராகினர். தங்களுக்கு அது தெரியவில்லை என்பதை வெளியே காட்டிக்கொள்ள அவர்களுக்கும் துணிவில்லை.

வெண்கொற்றக் குடையின் கீழ் ரதத்தில் கம்பீரமாக நின்றபடி மன்னர் ஊர்வலம் புறப்பட்டார்.

தெருவில் நின்றவர்களும், வீட்டுக்குள்ளிருந்து ஜன்னல்கள் வழியாகப் பார்த்தவர்களும் ''ஆஹா அற்புதம்! நம்மையெல்லாம் தன் வீரத்தால் காக்கின்ற மன்னரின் புதிய ஆடைகள் எவ்வளவு அழகு!'' என கத்தினார்கள்.

''சக்கரவர்த்தியின் புதிய ஆடையின் பளபளப்பைப் பாருங்கள். மேலங்கிகூட பின்னே எவ்வளவு அழகாக நீண்டிருக்கிறது...'' என்று தங்கள் வியப்பையெல்லாம் வெளியிட்டார்கள்.

தாங்கள் பார்ப்பதையும், மனதில் நினைப்பதையும் மறைத்து, பயத்தில் அந்த ஆடையைப் பாராட்டிக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் மன்னர் கம்பீரமாய்ப் பவனி வந்தார்.

திடீரென கூட்டத்தில் நின்ற ஒரு குழந்தை, ''ஹையே... அவர் உரிஞ்சான் குண்டியாய்ப் போறாரே.....'' என்று கத்தியது.

அந்தக் குழந்தையைக் கையில் தூக்கி வைத்திருந்த தந்தை அதன் வாயை சட்டென்று பொத்தினான்.

அதற்குள் மற்றவர்கள் குசுகுசுப்பாய்ப் பேசத் தொடங்கினார்கள்.

''அந்தக் குழந்தை என்ன சொல்கிறது. உண்மையைத்தானே சொல்கிறது... குழந்தைக்குப் பதவியாசையும், சதி எண்ணமும் இருக்க முடியுமா... மன்னர் அம்மணமாய்ச் செல்வதைக் குழந்தை சொல்லிவிட்டதே... ஓமோம்... உடம்பில் ஒன்றுமில்லாமல்தானே அரசர் சென்று கொண்டிருக்கிறார்...'' என்று தங்களை மறந்து முணுமுணுத்தவர்கள் மன்னரின் முகத்தைப் பார்த்தார்கள். நிலைமையைப் புரிந்துகொண்டு பேச்சை நிறுத்தினார்கள். எல்லோரும் ஒரு முகமாகத் திரும்பி குழந்தையை எரித்துவிடுவதுபோல் பார்த்தார்கள்.

மன்னருக்கு நிலைமை விளங்கியது. 'இனி காலைப் பின் வைத்தால் நிலைமை விபரீதமாகிவிடும்.

மக்களிடம் பயம் இருக்கும் வரைதான் நமக்கும் வாழ்வு, நான் பயப்படுவது தெரிந்துவிட்டால், அவ்வளவுதான்.... எல்லோருமாய்ச் சேர்ந்து என்னைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். எனவே நான் பின்வாங்க முடியாது. மிடுக்கோடு இந்த ஊர்வலத்தில் அம்மணமாகப் போய்த்தான் ஆக வேண்டும்...'

என்று தனக்குள்ளாக நினைத்துக் கொண்ட சக்கரவர்த்தி, ஒற்றர்களுக்கு கண்ஜாடை காட்டினார். அவர்கள் மக்களிடையே ஊடுருவினார்கள்.

சில நிமிடங்களில், குழந்தையை அங்கே காணவில்லை. மக்கள் சக்கரவர்த்தியை வாழ்த்திப் பாடும் பாட்டொலி மட்டும் கேட்டது.

பணியாட்கள், அங்கே இல்லாத ஆடையை மேலும் தூக்கிப் பிடிப்பதாக அபிநயித்துக் கொண்டிருக்க, சக்கரவர்த்தி மேலும் கம்பீரமாக பவனியைத் தொடர்ந்தார்.

மாமன்னரும் மக்களும் சந்தோஷமாக வாழ்ந்து வரலாயினர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்ச் சமூகத்தை உயிரோட்டம் உள்ளதாக மாற்றி 'விடுதலைப் போராட்டத்'தினால் தமிழ்ச் சமூகத்திற்குள் அழிக்கப்பட்ட ஜனநாயக விழுமியத்தை மீண்டும் தூக்கி நிறுத்தி, எதிர்காலத்தில் புலிகளல்ல எவர் ஆண்டாலும் அவர்களின் கீழ் அடிமைகளாக இருந்துவிடக் கூடாது என தமிழ் மக்களை எச்சரிக்க வேண்டும் என்பதே 'அமுது' சஞ்சிகையின் அடிப்படை நோக்கமாகும்.

## 'அமுது' தமிழ் அரசியலை விமர்சிப்பது ஏன்?

'அமுது' ஒருபோதும் விமர்சனங்களை புறந்தள்ளிய ஒரு சஞ்சிகை அல்ல. நடுநிலைமையாக கருத்துக்களைக் கூறுவதுடன், புலிகளின் தீவிர ஆதரவாளர்களின் (அங்கத்தவர்களின்?) கண்டன விமர்சனக் கருத்துக்களையும் கூட பிரசுரித்து வருவதை அமுதின் தொடர்ந்த வாசகர்கள் அறிவர்.

தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைப் போராட்டம் ஆரம்பமானபோது தமிழ்ச் சமூகம் பாரிய நம்பிக்கையோடு அப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியது. சிங்கள இனவாதத்திற்கு எதிராகவும், அரச இயந்திரங்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடுவது மட்டும்தான் தமிழ் விடுதலை இயக்கங்களின் கடமை அல்ல.

அதற்கும் மேலாக தமிழ்ச் சமூகத்திற்குள் ஜனநாயக பண்புகளை பாதுகாப்பதும், வளர்த்தெடுப்பதும், மனித உரிமைகளை மேம்படுத்துவதும், பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை களைந்தெறிவதும், சாதி ஒடுக்குமுறையை ஒழிப்பதும் என பல்வேறு பரிமாணங்களுக்கு இது செல்ல வேண்டும் என்பதே அச்சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் கடந்த இருபது வருட தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை திரும்பிப் பார்க்கின்றபொழுது இனவாத சக்திகளும் இலங்கை அரசாங்கங்களின் அரச இயந்திரங்களும் தமிழர்களுக்கு செய்த அழிவுகளுக்கு பலமடங்கு மேலான அழிவை தமிழ் மக்களின் 'விடுதலைப் போராட்டம்' தமிழ்ச்சமூகத்திற்கு செய்திருக்கிறது என்ற உண்மை புலப்படுகின்றது.

'ஒன்றில் இவ் அழிவுகரமான அரசியலுக்கு ஒத்துப்போய் அதற்கு துதிபாடுவது' அல்லது 'நாட்டை விட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் புழுக்கள் போல வாழ்வது' அல்லது 'எதுவுமே பேசாது அடிமைகளாக உண்பதற்கும் கொட்டாவி விடுவதற்கும் வாய் திறப்பது' என்கின்ற மூன்று நிலமைகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ்ச்சமூகம் தள்ளப்பட்டது.

இந்த மூன்று நிலைகளையும் தாண்டி தமிழ்ச் சமூகத்தை உயிரோட்டம் உள்ளதாக மாற்றி 'விடுதலைப் போராட்டத்'தினால் தமிழ்ச் சமூகத்திற்குள் அழிக்கப்பட்ட ஜனநாயக விழுமியத்தை மீண்டும் தூக்கி நிறுத்தி, எதிர்காலத்தில் புலிகளல்ல எவர் ஆண்டாலும் அவர்களின் கீழ் அடிமைகளாக இருந்துவிடக்கூடாது என தமிழ் மக்களை எச்சரிக்க வேண்டும் என்பதே 'அமுது' சஞ்சிகையின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழ் சமூகத்திற்குள் இருந்த இவ் உயிரோட்டமான அரசியல் உணர்வின் காரணமாகத்தான் சிங்கள இனவாதமும் அரச இயந்திரமும் எம்மை ஒடுக்கிய பொழுது நாம் கிளர்ந்தெழுந்தோம் என்கின்ற உண்மை யாவரும் அறிந்ததே. ஜனநாயக அரசியலுக்கு எதிரான செயற்பாட்டை சிங்கள இனவாதிகளல்ல புலிகள் இயக்கமும் அதன் துதிபாடிகளும் செய்ய முன்வந்தாலும் தமிழ்ச்சமூகம் சோர்ந்து போகக்கூடாது என்பதை சுட்டிக்காட்டுவதே 'அமுது'வின் பணி என நாம் கருதுகிறோம்.

கருத்துச்சுதந்திர மறுப்பு குறித்து தமிழ்ச்சமூகம் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமானது. ஒரு இயக்கத்தை, ஒரு சம்பவத்தை, ஒரு தலைவரை விமர்சிப்பதற்கு ஒரு பத்திரிகைக்கு உரிமை இல்லை என்பது எந்த நியாயத்திற்குட்பட்டது? விமர்சனங்களை பொறுத்துக் கொள்ளாமையும் மாற்றுக் கருத்துக்களை அடக்குவதும் எந்த ஜனநாயக முறையைச் சார்ந்தது? மாற்றுக் கருத்துக்காகவும் கேலிச் சித்திரங்களுக்காகவும் பத்திரிகைகள் கொளுத்தப்படுவது சரியென்றால் பத்திரிகைத்துறை என்ற ஒன்றே இவ்வுலகில் இருந்திருக்காது.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு தமிழ் சமூகம் அனுமதித்தால் நாளைக்கு அச்சமூகம் என்னவிதமான சுதந்திரத்தை அனுபவிக்கப்போகிறது? வெறுமனே உண்பதும் உயிர்வாழ்வதும்தான் சுதந்திரம் என்றால் அதற்கேன் போராட்டம்?

உண்மையை எழுதுவது என்பது பத்திரிகா தர்மத்தின் உயிர்நாடி. உண்மை எப்போதும் கொதிப்பான தீயைப் போன்றது. அதை எந்தத் தீயினாலும் கருக்க முடியாது.

இறுதியாக, புலிகளின் அழுத்தத்தினாலும் ஆழ்ந்த அரசியல் ஆய்வின்மையாலும் 'அமுது' சஞ்சிகையை எரித்த அம் மாணவர்கள் மீது எமக்கு எவ்வித கோபமும் இல்லை. தமிழ் சமூகமும் அவர்கள்மீது ஆத்திரப்படுவதை தவிர்க்க வேண்டும். இன்று நாம் எல்லோரும் மீளமுடியாத அதலபாதாளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதற்கு அம்மாணவர்களை மட்டும் குறைசொல்வதில் அர்த்தமில்லை. அழிவுகரமான ஓர் அரசியல் எமது சமூகத்திற்குள் விருட்சமாய் வளர்வதற்கு வித்திட்ட மூத்த சந்ததியையும் தமிழ்ச் சமூகத்தின் புத்திஜீவிகளையும் அதிகார வெறியர்களையுமே நாம் சாட வேண்டும். இந்த மாணவர்கள் வெறும் அம்புகளே. எய்தவர்களோ வேறு சிலர்.

சரியானவை பலம்பெறும்போது அவர்கள் அதைப் பற்றிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை 'அமுது'க்கு நிறையவே உண்டு. அம் மாணவர்களின் கருத்துக்களை தாங்கி வருவதற்காக 'அமுது' தன் பக்கங்களை திறந்து வைத்திருக்கிறது.


அவர்கள் தம் கருத்துக்களை எழுத வேண்டும் என நாம் அன்போடு வேண்டுகோள் விடுக்கின்றோம். 'அமுது' சஞ்சிகையை எரித்து அதற்கு சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்கள் மத்தியிலும் நல்ல மதிப்பையும் பிரச்சாரத்தையும் பெற்றுத் தந்தமைக்கு மீண்டும் அம் மாணவர்களுக்கு நன்றிகூற கடமைப் பட்டுள்ளோம்.

**- எஸ். மனோரஞ்சன்**
**ஆசிரியர் - 'அமுது'**
**நிர்வாக ஆசிரியர் - லேக் ஹவுஸ் தமிழ் வெளியீடுகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

மே 2001




சாஜா கிண்ணத்தை சுவீகரித்த இலங்கை அணித்
தலைவர் சனத் ஜெயசூரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வண்ணங்களால் ஆடை வரைந்து கொள்ளும் ஆணும் பெண்ணும்

சிசிலி நாட்டுப் பண்டிகை ஒன்றின் போது, மின்னார் செஞ்சடை மேல் மிளிர் ஆபரணங்கள் சூடி தெருவில் வலம் வரும் பெண்கள்.



# பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டெம்மை...



இது மாலை நேர உடையாம்! சொல்பவர் பல்கேரியன் மொடல்.



ஆடையிழந்த இருவரைத் தன்னுடலில் அணிந்து செல்லும் ஒருத்தி!

இந்த சீனப்பெண் அணிந்திருப்பதும் ஒருவகை ஆடைதானாம்! பாதுகாப்பான படையெடுப்புக்கு உகந்ததுதான்.




புதுவித நீச்சலுடையாம் இது! கட ந்த 17ம் திகதி மொஸ்கோவில் நடைபெற்ற விதவிதமான நீச்சலுடைகளின் கண்காட்சியில் ஒரு மொடல்.



கெரில்லா போல் தோற்றமளிக்கும் மேலாடையை மிக விநோதமாக அணிந்துகொண்டு, அமெரிக்க வீதியில் நடந்து வருகிறார் விளையாட்டுவீரர் ஒருவர்.



தேசபக்தி வேண்டியதுதான். அதற்காக தேசியக்கொடியைக் கிழித்து இப்படியெல்லாமா அணிந்துகொள்வது? இங்கிலாந்து மொடல் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணிழந்த வேர்கள்

நேசித்ததையெல்லாம்
விட்டு, விரட்டியடிக்கப்பட்டு
ஒரு பத்தாண்டுகள்.
ஜீவ பயணத்தில் வீணே கழிந்த தசாப்தம்.

திசையறியா ஆழிப்பயணிகளாய்
மண்ணின் வாசனையை - எங்கள்
மனிதர்களின் சுவாசங்களை
பனையின் சலசலப்பை மனதில் சுமந்து
வாழ்ந்ததை தொலைத்து
நடைப்பிணங்களாய்
அகதி முகாம்களில்....
அறிவாளியும், அடிமுட்டாளும்
வாழ்வைத்தேடி வந்தவர்களிங்கு
பர்தாவுக்குள் வாழ்ந்திருந்த எங்களுக்கு
படுதாக்களே இல்லை.

வானத்துக் கூரையின் விரிசல்கள் வழியே
எங்களின் புதிய தங்குமிடங்களுக்கும்
வெளிச்சங்கள் வந்தன, விடியவில்லை
இருளைத்தான் துழாவுகிறோம்.
இன்னும் எத்தனை நாள்....?
மண்ணை இழந்து,
அயலவர்களின் - அருமை நண்பர்களின்
கல்லறையில் ஒரு மலரையேனும் வைத்து
அஞ்சலி செலுத்த முடியாத பாவிகளாய்...

விடுதலை விடியலுக்காய்
விதை போட்டது நாங்களும்தான்.
விருட்சமாய் வேரூன்றத்
தொடங்கியபோதே...
வேரோடு பிடுங்கியெறியப்பட்டு நாங்கள்....

*- றஸீனா புஹார்*

## கண்ணீர் சொல்லும் கதை

வானம் அரைப் பொழுது காட்டி
விழித்திருக்க
வெப்பத்திற்குப் பயந்து பதுங்கி
ஒரு சின்னத் துண்டுத் தாள் கிழித்து
இரவில் சிறையிருந்த பகலைத் தேடி
பட்டினியாய்க் கிடந்த வயிறை நிரப்ப
கண்ணீரையும் துடைக்க மாட்டேன்.

குடிசை வீடு தான் எனக்கு
அதற்குள் நானும் தூக்கணாங்குருவியும்
என் தூக்கத்தில் அதன் எச்சங்களால்
என் வயிறு புடைக்கலாம்...

கால்களில் மிதிபடும் புல்லின்
தலைநிமிர்ந்த திட்டல்கள்...
தொடரவில்லை என்
இரைதேடும் பயணங்கள்

இன்னொரு தடவை கண்ணீர் வந்து
வயிறு நிரம்பும் வரை
முட்கம்பியில் நடந்து கொள்வேன்

கிழித்த தாளினுள் நாளைய உணவுக்கு
சுருட்டி வைக்க கொஞ்சம்
மண் மட்டும்தான் இருக்கிறது.
நினைக்க உயிர் நோகுமெனக்கு...

*யசீன்பாவா ஹுஸைன், பொத்துவில்.*

## எங்கள் ஜனநாயகம்

இல்லமெல்லாம் இடிந்துவிழ
இடம்பெயர்வில் நாமுமோட
செல்கள் வந்து வீழ்வதனால்
'செல்'வந்த பூமி இதுவாச்சு!

போக்கு வரத்தில் பெருஞ் சிக்கல்
போசனம் கொள்வதில் பணச் சிக்கல்
வாக்குப் பெறுவதில் பெருவேட்டை
வாழ்வின் மேலே பெருஞ் சேட்டை!

வீதிகளெங்கும் வேகத்தடை
வீணே எம்மேல் வேறும் தடை
நீதிகள் எல்லாம் எங்கு போச்சு?
நீதானா எங்கள் ஜனநாயகம்?

*- ஆ.ஜென்சன் றொனால்ட், ஈச்சமோட்டை.*



## இறைச்சிக் கோழியும் இனப் படுகொலையும்...

உன் பிறப்பு திகதியுடனேயே
இறப்பு திகதியும் நிச்சயிக்கப்படுகிறது....!
உன் பிறப்பு பரிதாபம்
அதைவிட கொடுமை - உன் இறப்பு...!

தாயின் சுகமறியாத சேயே....
தாயாகாமலே சாவது உன் சாபமோ....!
நிறைவான ஆரோக்கியம் இருப்பினும்
குறைவான ஆயுளே உனக்கு...!

உன் உயிர்த்தியாகம் நிகரற்றது
அதில் எத்தனை உயிர்களின்
உயர்வு இருக்கிறது...!

இந்த உலகில் அதிகமாய்
வன்கொலைக்குள்ளாகும் உயிரினம்
மனிதனுக்கடுத்து உன் இனமே...!
உன் இனப் படுகொலைக்கு
இதுவரை எந்த மனித அமைப்பும்
எதிர்ப்பு தெரிவிக்காதது ஏன்...?

கொலைகார மனிதனிடம் கேள்...
"உரிமைக்காக போராட
உன்னால் மட்டுமா முடியும்" என்று...?

*- ராம்.யுவராஜ், கண்டி.*

## விழித்துப் பார்க்கின்றேன்

ஊமையாக வாய்பொத்தி நின்று
தாயகத்தின் ஒவ்வொரு மூலையையும்
விழித்துப் பார்க்கின்றேன்.

ஆனா ஆவன்னா எழுதி
கண்பொத்தி விளையாடிய
வீட்டுத் திண்ணையில் நாய் செத்து
எலும்புக் கூடுகள் மாத்திரம்
ஓரமாய் ஒதுங்கிக் கிடந்தன.

நான் ஒளித்து விளையாடிய
மரங்களிடையே
இரத்த துளிகள் சிதறுண்டு
வழிந்தோடிக் காய்ந்திருந்தன.

தம்பியோடு ஊஞ்சலாடிய
பழங்காலத்து மாமரத்தில் ஆந்தைகள்
வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்தன.

மண் வீட்டு முற்றத்தில்
பிண வாடையோடு
இரும்புக் கவச வாகனத்தின்
சக்கரங்கள் மேய்ந்து கொண்டிருந்தன.

நீண்ட பெருமூச்சுடன் ஜன்னல்களினூடே
என் வீட்டுத் திண்ணையை
உற்று நோக்குகிறேன்
அங்கு மரங்கள் மாத்திரமன்றி
மரணங்களும் முளைத்துக் கொண்டே...

*முஹம்மது றபீக், பொத்துவில்.*

## மலரட்டும் சமாதானம்

புற்றதில் மறைந்திருந்து
எட்டிப் பார்க்கும் பாம்பு போல
பதுங்கு குழிகளிலிருந்து
பார்க்கின்றார்கள் பாவி மக்கள்

சொந்த மண்ணில் அந்நியராய்
அனாதையாய் அடிமையாய் வாழ்வதற்கு
ஆண்டவனே ஏன் படைத்தாய்?

விளைகின்ற நிலங்களிலே
கனிதரும் தோப்பினிலேமிதிவெடி
விதைத்து அறுவடை செய்வதெல்லாம்
அப்பாவி உயிர்களே!

எமது நாட்டினிலே
நாம் சென்று வருவதற்கு
எதற்காக இந்த 'பாஸ்' என்னும் அனுமதி

உற்றார் உறவினர் அண்ணன் தங்கை
அப்பா அம்மா அனைவரும் அகதிகளே!

கல்விக் கூடங்களும் கலாசார
மையங்களும் குடிமனைகள் அத்தனையும்
கல்லறையாய் தெரிகிறது.

அரசியல் சதுரங்கத்தில் நகர்த்தப்படும்
காய்களாக அப்பாவி மக்கள் நாங்களே!

*மாணிக்கன் இளங்கோ, முன்னம்போடிவெட்டை (மூதூர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்களசினிமாவுக்கு அப்பன் தமிழன்!

இன்று மனிதர்களுக்குள் எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன. ஆனால் நானறிந்தவரையில் மனிதர்கள் ஒன்றுதான். மனித ஜாதி ஒன்றுதான். மனிதர்கள் வேறு தேவைகளுக்காக பிரிந்திருக்கின்றார்கள். மொழியால்தான் அவநம்பிக்கைகள் தோன்றின.

**இலங்கை எம்.ஜி.ஆர்.**

**காமினி பொன்சேகா**

**- தமிழில் பேட்டி -**

நேர்கண்டவர் :
எம். எச். பதி-யுஸ்-ஸமான்

**அமுது:** தாங்கள் சினிமாவிலிருந்தும் அரசியலிலிருந்தும் ஒதுங்கி மௌனமாக இருக்கின்றீர்கள். ஏனிந்த மௌனம்?

**காமினி:** நானொன்றும் மௌனமாக இல்லை. கடந்த வாரம்தான் ஒரு படத்தை முடித்தேன். அது இலங்கைப் படம் அல்ல. இயக்குனர் இலங்கைதான் என்றாலும் மலேஷிய பிரஜை. படத்தில் சிங்களம், ஆங்கிலம் இரு மொழிகளும் உண்டு.

**அமுது:** 'ஹே ராம்' படத்தில் கமலஹாசன் மூன்று மொழிகளை அறிமுகப் படுத்தியுள்ளாரே. அதுபோலவா?

**காமினி:** ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? அவர் பிறக்கும் முதலே பிறந்தவன் நான். 'பரசது மல்', 'சாகரய மெத' படங்களில் மும்மொழிகளைப் பயன்படுத்தியிருக்கிறேன்.

சினிமாவுக்குப் பேசும் மொழி இல்லையே. சினிமாவின் மொழி உருவங்களிலான மொழி - Visualதான்! உலகில் அதிகமானவர்கள் பேசக்கூடிய மொழி ஒன்றை கலைஞர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கார்ட்டூன் படங்களுக்கு எல்லோரும் தானே ரசிகர்கள்! வோல்ட் டிஸ்னி கார்ட்டூன் என்றால் அது உலகத்திற்கே பேசும் மொழி, Visual மொழி. அதை நோக்கித்தான் நாம் பயணிக்க வேண்டும்.

இன்று மனிதர்களுக்குள் எத்தனையோ ஜாதிகள் இருக்கின்றன. ஆனால் நானறிந்த வரையில் மனித ஜாதி ஒன்றுதான். கொம்பு உள்ள, வால் உள்ள மனிதர்கள் இல்லையே? மனிதர்கள் ஒன்றுதான், ஜாதி ஒன்றுதான், அது மனித ஜாதி.

மனிதர்கள் வேறு தேவைகளுக்காக பிரிந்திருக்கின்றார்கள். மொழியால்தான் அவநம்பிக்கைகள் தோன்றின.

நான் எக்ஸிமோ பாஷையில் பேசினால் உங்களுக்குப் புரியாதல்லவா? அதேபோல, எக்ஸிமோ இருவர் பேசிக்கொண்டால் அவர்களின் பாஷை தெரியாத நாம் 'இருவர் பேசிக்கொள்கிறார்கள். இவர்கள் நம்மைப் பற்றி, நமக்கு எதிராகத்தான் இரகசியம் பேசுகின்றார்கள் என்ற தவறான எண்ணத்தை உருவாக்கிக் கொள்கிறோம். உண்மையில் அவர்கள் பேசியது 'அட, புதுமையான மனிதர்கள், இவர்களின் நிறம் எம்மைப் போலில்லையே...' என்ற தமது ஆச்சரியத்தை!

மொழியினால் முதலாவது ஏற்பட்டிருப்பது அவநம்பிக்கை, சந்தேகம்தான். இந்த அவிசுவாசம்தானே யாழ்ப்பாணத்திலிருந்து இங்குவரை வந்திருக்கிறது.

இது முன்னர் இருக்கவில்லை. எனக்கு இன்னும் ஞாபகமிருக்கின்றது. 20 வருடங்களுக்கு முன் அப்போது நான் ரத்மலானையில் இருந்தேன். அந்தப் பகுதியில் டெலிபோன் வசதி இருக்கவில்லை. தமிழர் இருவர் வந்து, 'உங்களை தொல்லைப்படுத்துவதற்கு மன்னிக்கவும். ஒரு தொலைபேசி அழைப்பு எடுக்கமுடியுமா?' என்று தயங்கித் தயங்கி கேட்டனர். அவர்கள் போகும்போது, ''ஆ... பயப்படத்தேவையில்ல அவரு நம்ம ஆள்தான்'', என்று பேசிக்கொள்வது எனக்குக் கேட்டது.

இரு வருடங்கள் கழிந்தன. அப்பகுதியில் இனக்கலவரம் ஏற்பட்டது. அப்போது நான் வெளிநாட்டில். எனது பிள்ளைகள் அவர்களை வீட்டுக்கு அழைத்து தங்கவைத்து சாப்பிடக்கொடுத்து நல்ல முறையில் கவனித்திருக்கிறார்கள். சிங்களத்தில் பேசித்தான். இந்தப் பண்பு - quality மனிதர்களிடமிருந்து போய்விட்டது.

காடையர்கள் இருவர் ஒன்று சேர்கிறார்கள். அவர்களுக்கு ஜாதிப் பற்றும் இல்லை, மொழிப்பற்றும் இல்லை. இருப்பதெல்லாம் உங்கள் வீட்டிலுள்ள பொருட்கள் மீதான... தங்கம், வெள்ளி மீதுள்ள பற்றுதான்.

இப்படிச் செய்துதானே சினிமாத் தொழிலையும் நாசமாக்கினார்கள். 81ல் நாம் செய்து வைத்த, ஆரம்பத்திலிருந்தே செய்து வைத்த படங்கள் இன்று நெகடிவும் இல்லை பொசிடிவும் இல்லை. 300 படங்கள் வரை இருந்திருக்கும். 83வரை செய்த படங்களில் பாதிக்கு மேல் இன்று இல்லை பார்ப்பதற்கு.

வேறு நாடுகளில் 50 வருடங்களுக்கு முன் எடுத்த படங்களின் நெகடிவ் கொப்பிகள் இன்னும் இருக்கின்றன. நாட்டுப் பற்றின் காரணமாக இவர்கள் தீயிட்டிருப்பது சிங்கனப் படத்தை. காரணம், அந்தப் படங்களின் தந்தை தமிழர். இவர்கள் தீவைத்திருப்பது தமது வரலாற்றை, தமது நாட்டின் வரலாற்றை, சிங்கள சினிமாவின் வரலாற்றை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மையில் இலங்கை சினிமாவுக்கு அம்மா இல்லை. அப்பாக்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் நாயகம், குணரத்னம், சேர். சிற்றம்பலம் ஏ. காடினர். அம்மா என்று சொல்வதானால் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த டெசிடானியலைத்தான் சொல்ல வேண்டும். அதாவது ருக்மணிதேவியை.

**அமுது:** எல்லோரும் கொமர்ஷியல் படங்கள் எடுக்கின்ற ஒரு சூழலில் தாங்கள் மட்டும் அரசியல் படங்கள் எடுத்த மைக்கான காரணம் என்ன?



**காமினி:** எந்தப் படம் செய்தாலும் அது கொமர்ஷியலாகத்தான் இருக்க வேண்டும். கொமர்ஷியலாக ஒரு படம் வெற்றியடையவில்லை என்றால் அது மக்களைச் சென்றடையவில்லை என்பதுதான் அர்த்தம். படம் மக்களிடம் செல்லவில்லை என்றால் அந்தப் படம் எடுத்ததில் பிரயோசனம் இல்லை.

அரசியல் பற்றி இங்கும் பேசுகிறோம், பாராளுமன்றத்திலும் பேசுகின்றோம், 'பாபர் சொப்'பிலும் பேசுகின்றோம், ஃபைவ் ஸ்டார் ஹோட்டலிலும் பேசுகின்றோம். ஏனெனில் அரசியல் என்பது நாம் உள்ளே இழுக்கும், வெளியே விடும் மூச்சுக் காற்று போன்றது. காற்றுக்கு எவரும் பணம் கொடுப்பதில்லை. என்றாலும் நாம் மூச்சுவிடாவிட்டால் சில நிமிடங்களில் செத்து விடுவோம். இன்று எமது உரிமைகளைக் கூட அரசியலுக்கு தாரைவார்த்தாகி விட்டது. அரசியல் வாழ்க்கையில் ஒரு பகுதி.

இது சரியா, இது பிழையா என்று பேசுவது அடிப்படைச் சுதந்திரம். எமது பேச்சு, கருத்து வெளிப்பாடு சினிமா மூலம் நிகழ்கின்றது. எனவே அதுவும் மக்களை நோக்கிச் செல்ல வேண்டும். தனிமையில் பேசிக்கொண்டிருக்க முடியாது. அரசியல் எமது வாழ்க்கைக்குத் தேவையான விஷயம். அதை மோசமான முறையில் பாவிப்பது பற்றியும் நாம் பேச வேண்டும்.

சினிமாவை நாம் பாவிக்கிறோம். மற்றவர்களை சிரிக்கவைக்க, அழவைக்க, பயம் காட்ட... ஒவ்வொரு தலைப்பிலும் கதையை அமைத்துக் கொள்ளலாம். இதுவும் முக்கியமானது என்றால் இதுபற்றியும் வெளிப்படையாக பேச, அதிகமானவர்களுக்கு கேட்கும்படியாக உண்மையைச் சொல்ல இதையும் ஒரு ஊடகமாக பாவிக்க வேண்டும்.

**அமுது:** எம்.ஜி.ஆர். செய்த அரசியலைப் போலவா உங்களுடையதும்?

**காமினி:** எம்.ஜி.ஆர் ஒரு டெக்னீஷியன் இல்லையே. அவர் நேரடியாக நடிப்புக்கு வந்தவர். நான் அப்படி அல்ல. சினிமா எனது தொழில். சினிமாவிலுள்ள சகல துறைகளிலும் நான் வேலை செய்திருக்கின்றேன். நான் வந்தது கமெரா மேனாக - படப்பிடிப்பாளனாக. எனக்கு அந்த துறையை படிக்க வேண்டியிருந்தது. அதன் பின்னர் அடுத்தவர்களின் படங்களில் நடித்தேன். அதற்கு அவர்கள் பணம் தந்தார்கள்.

பின்னர் நான் நினைப்பதை எனக்கு விரும்பிய முறையில் சொல்ல விரும்பினேன். அதற்காக கதைகளை எழுதினேன், நடித்தேன், இயக்கினேன். 'பரசதுமல்' நான் உருவாக்கியது. 10 இலட்சம் மக்கள் பார்த்தனர். இதன் மூலம் நான் மக்களைச் சந்தித்தேன். எனது சிந்தனையை எனக்குரிய ஊடகத்தின் மூலம் மக்களுக்குச் சொன்னேன்.

**அமுது:** தங்கள் பார்வையில், இன்றைய இலங்கை சினிமாவின் நிலை என்ன?

**காமினி:** எனக்குக் காண்பதற்கும் ஒரு நிலை இல்லை. ஏனெனில் நாம் 1947ல் 'கடவுனு பொருந்துவ' என்றொரு படம் எடுத்தோம். இந்திய தயாரிப்பாளர். இலங்கை S.நாயகம் டைரக்டர். டெக்னீஷியன்ஸ் இலங்கையில் இருக்கவில்லை. நடிக நடிகையர் மட்டுமே இலங்கை. நம் பாடல்களுக்கும் தாயாக இருந்தவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான். ஏ.எம்.ராஜா மற்றும் தமிழ்ப் பாடகர்கள் சிங்களத்தில் பாடினார்கள்.

1947ல் இங்கே ஸ்டுடியோ இருக்கவில்லை.

**அந்தக் காலத்தில் படங்களை எடுப்பதற்குத் தேவையான வசதிகள் எமக்கு இலங்கையில் இருக்கவில்லை. இசையமைப்பாளர், இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள், கமெராமேன்கள் எல்லோரும் இந்தியாவில். ஏ.எம்.ராஜா மற்றும் தமிழ்ப் பாடகர்கள் சிங்களத்தில் பாடினார்கள்.**

இசையமைப்பாளர்கள் இருக்கவில்லை. டைரக்ஷன் விஷயமும் தெரியாதவர்கள்தான் இங்கிருந்தனர். எல்லாமே இந்தியாவிலிருந்துதான் வந்தது.

இங்கே படம் தயாரிக்க ஆரம்பித்தவர் S. நாயகம். சிற்றம்பலம் கார்டினர் நிதி வழங்கினார். குணரத்தினம், செல்லமுத்து, ஜாபிர். ஏ.காதர். இவர்கள்தான் இலங்கை சினிமாவின் ஆரம்பகர்த்தாக்கள்.

அப்பாமார்தான் இருந்தார்கள். அம்மா ஒருவர் இருக்கவில்லை என்று சொன்னது இதனாலேயே. அம்மா என்று சொல்லக்கூடிய டேசி டேனியல் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர். அவர் சிங்களத்தில் பாடினார்.



சிங்களம் அவரது தாய்மொழியுமல்ல - இனமுமல்ல. ஆனால் அவர் பாடியது "ஸ்ரீ புத்த கயா விகாரே". ருபசிங்கம் மாஸ்டருடன் இணைந்து பாடினார்.

அந்தக் காலத்தில் படங்களை எடுப்பதற்குத் தேவையான வசதிகள் எமக்கு இலங்கையில் இருக்கவில்லை. இசையமைப்பாளர், இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள், கமெராமேன்கள் எல்லோரும் இந்தியாவில். அவர்கள் இங்கு வந்து, அல்லது நாம் அங்கு சென்று படம் எடுக்க வேண்டியிருந்தது.

1956ல் வேறொரு சமூக மாற்றம் உண்டானது. இங்கிலீஸ் படித்தவர்கள், இங்கிலாந்தில் படித்தவர்கள் டொக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் போன்றவர்கள் இந்தப் படங்களைப் பார்த்து இவற்றில் ஸ்ரீலங்கா சினிமா, சிங்கள சினிமா ஒன்றுமில்லை. நடிக நடிகையர் மட்டும்தான் இலங்கை, மற்றெல்லாமே இந்தியாவிலிருந்து வந்தது...


எனவே அவற்றை இலங்கைப்படம் என்று சொல்ல முடியாது என்றார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்படம் செய்வதற்கும் யாரும் நினைக்கவில்லை. காரணம் இங்கு சிறிய ரசிகர் கூட்டமே இருக்கின்றது. இவ்வளவு செலவு செய்து படம் எடுத்து, அதை ஈடுசெய்ய ரசிகர்களை கொண்டுவர முடியாது. போட்டி தென்னிந்தியப் படங்களுடன் இருப்பதால் நல்ல தமிழ்ப் படம் பார்க்க விரும்பும் ரசி-

**மூளையில் ஒபரேஷன் என்றால் எல்லோரும் செல்வது டொக்டர் செல்லத்துரையிடம். 'அவர் தமிழன், நீ டொக்டர் பீரிஸிடம் போ' என்று சொன்னால் 'மூளை என்னுடையது, நீ வாயை மூடிக்கொண்டிரு' என்று சொல்லிவிடுவார்கள்.**



கர்களுக்கு உயர்தொழினுட்பத் தரத்துடனான படங்களைத் தரவேண்டும். அதற்காகும் செலவை ஈடுகட்ட இங்கு வருமானம் போதாது.

2ம் தர படமொன்றைப் பார்க்க ரசிகர்கள் விரும்பமாட்டார்கள். தியாகராஜ பகவதர், பி.யு.சின்னப்பா, என்.எஸ் கிருஸ்ணன், மதுரம், டீ.ஆர்.மகாலிங்கம் போன்றவர்களின் படங்களைப் பார்த்தார்கள். அடுத்த தலைமுறையினர் சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர், ஜெமினிகணேசன் படங்களைப் பார்த்தனர். அவர்கள் நல்ல படங்களையே பணம் கொடுத்து பார்க்க விரும்புவார்கள்.

இந்தியாவிலிருந்து வந்த தமிழ் படங்களை-சிங்களவர்களும் பார்த்தார்கள். அந்தக் காலத்தில் ரப்பர் மரங்களில், தேயிலை மரங்களில், பெரிய கற்களில் M.G.R என்று வெட்டியிருப்பார்கள். எம்.ஜி.ஆரை திரையில் கண்டவுடன் கைதட்டுவார்கள். விசில் அடிப்பார்கள். ஆனால் காமினியைக் கண்டோ, ஜோ அபேவிக்ரமவைக் கண்டோ கைதட்டவில்லை. அவர்களின் பெயர்களை எங்கும் வெட்டவில்லை, அந்த யுகத்தில்.

இவை பேதங்களின் அடிப்படையில் நடந்தவை அல்ல. அவர்கள் அந்தப் பொழுதுபோக்குக்கு முன்னுரிமை கொடுத்திருந்தார்கள். நாம் வேறு ஒரு தொழிலை எடுத்துக் கொள்வோமே. உதாரணமாக மருத்துவர் தொழிலில்... மூளையில் ஒபரேஷன் என்றால் எல்லோரும் செல்வது டொக்டர் செல்லத்துரையிடம். 'அவர் தமிழன், நீ டொக்டர் பீரிஸிடம் போ' என்று சொன்னால் 'மூளை என்னுடையது, நீ வாயை மூடிக்கொண்டிரு' என்று சொல்லிவிடுவார்கள். இதே தியரி தான் சினிமாவுக்கும்.

ஜாதி, பேதம், மொழி பேதம், மத பேதம் என்று ஆக்கிக் கொண்டவர்கள் யார்? அங்குமிங்கும் உள்ள பிரதேச சபை, மெம்பர்களும் பார்லிமென்ட் மெம்பர்களும் ஓட்டுக்காக இதனை மாற்றிக் கொண்டனர்.

இதுதான் பிலிம் இண்டஸ்ட்ரிக்கும் நடந்தது. 1950களின் பிற்பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்று சினிமாவைப் பற்றி படித்து வந்தவர்களுக்கு, இலங்கைப் படம் என்றால் இலங்கைக்குரிய அம்சம் இருக்க வேண்டும் என்ற கருத்து உருவானது. ஜப்பான் படம் என்றால் மொழி, அந்த நாடு, அந்த நாட்டு மனிதர்கள், பழக்கங்கள் வாழ்க்கைமுறைகளைப் பார்த்தே புரிந்து கொள்கிறோம்.

ஒரு நாட்டின் படம் என்றால் அந்த நாட்டிற்கான அந்த மக்களுக்கான அடையாளங்கள் இருக்க வேண்டும். இந்தியாவில் தயாரித்த இலங்கைப் படங்களுக்கு இந்த அடையாளங்கள் இருக்கவில்லை. கொந்துராத்துக்குச் செய்வது போல, கவனமும் இல்லை. மிகக்குறைந்த செலவிலேயே செய்யவும் பார்த்தார்கள். ''சிங்களப் படம் தானே அடிச்சுடு, அடிச்சுடு'' என்றார்கள். அவர்களுக்குத் தேவைப்பட்டது பணம். இதை வியாபாரமாக ஆக்கிக் கொண்டார்கள்.

இந்த வியாபாரத்தில் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்ப முடியுமா? அவசரமாக செய்யவும் வேண்டும். மலிவாகச் செய்ய வேண்டும். அதிகமாக செலவழிக்கவும் முடியாது. காரணம் சிறிய ரசிகர் கூட்டம். சிறிய மார்க்கட்.

வெளிநாடுகளில் சினிமாத் துறை பற்றிப் படித்து வந்தவர்கள் இந்தப் பாதையை மாற்றியமைத்தார்கள். இலங்கைப் படம் என்றால் இலங்கைத் தோற்றம் இருக்க வேண்டும். ஆனால், இவர்களும் படம் எடுப்பது அதிகமான ரசிகர்களுக்கல்லவா! இங்கு அதிகமான ரசிகர்கள் சிங்களவர்கள்தான். எனவே அவர்கள் சிங்களவர்களுக்கான படங்களை எடுத்தார்கள். ஆனால் நான் எடுக்கும் சிங்களப் படங்களை இலங்கைப்படம் என்று சொல்ல முடியும். சிங்கள, தமிழ், முஸ்லிம் எல்லோருமே எனது படங்களைப் பார்க்கின்றனர்.

ஆரம்பகாலச் சிங்களப் படங்கள் சிங்களவர்களினாலேயே புரிந்து கொள்ள முடியாத மொழியைப் பேசியது. கடுமையான வசனங்கள். 45-47 காலப்பகுதியில் வந்த படங்கள் உங்களுக்குப் புரியாது. ஆனால் உங்களுக்கு சிங்களம் தெரியும். இவ்வாறு கடுமையான, பெரிய வசனங்கள் கையாளப்பட்டிருப்பது இதனை எழுதிய சிங்களவர்களின் அறியாமையின் காரணமாகவே.

விளங்காத வசனங்களைப் பாவித்தால்தான் தமது இமேஜ் வளரும் என்று கருதினார்கள். கே.டபிள்யூ ஜயமானவின் படங்களில் இருந்ததும் இந்த மொழிதான்.

பத்திரிகையை சாதாரண மக்கள் பார்க்கின்றனர். எனவே அவர்களுக்குப் புரிகிற மாதிரிதான் எழுதவேண்டும். விளங்காத பாஷையில் எழுதினால் பத்திரிகை விற்காது. இலக்கியம், மொழி அபிவிருத்தி போன்றவற்றுக்குத் தனியான ஒரு பகுதி இருக்க வேண்டுமே தவிர முழுப் பத்திரிகையுமே இலக்கியமாக இருக்க முடியுமா?

இன்றைய பத்திரிகைக்காரர்கள் சிலரிடமும் இத்தகைய விளங்காமல் எழுதும் போக்கு இருக்கிறது.

சிங்களச் சினிமாவிலிருந்த இந்த முட்டாள்தனமான எண்ணத்தை களைவதற்கே 15-20 வருடங்கள் சென்றன.

சிங்கள சினிமாவை சிங்கள மனிதர்களும் பார்க்காமலிருந்தனர். ஏனெனில் ரோயல் கொலேஜ், சென்.தோமஸ் கொலேஜ் அல்லது ட்ரினிட்டி கொலேஜில் படித்து வெள்ளைக்காரன்போல ஆக வேண்டும் என்பதே அவர்களது விருப்பம்.



**நல்ல படங்களையே பணம் கொடுத்துப் பார்க்க விரும்புவார்கள். இந்தியாவிலிருந்து வந்த தமிழ்ப் படங்களை சிங்களவர்களும் பார்த்தார்கள். இவை பேதங்களின் அடிப்படையில் நடை-பெற்றவை அல்ல. அவர்கள் அந்தப் பொழுதுபோக்குக்கு முன்னுரிமை கொடுத்திருந்தார்கள்.**

இப்படியான விகாரமான மனப்போக்குகளின் காரணமாக, சிங்கள சினிமா பின்தள்ளப்பட்டது. வெட்கமில்லாத அகங்காரம் காரணமாக, வெட்கமில்லாத அடிமைத்தனத்தின் காரணமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்திற்கு மகாகவி வெல்லாள ஜயமகா வந்தார், சாரம் அணிந்து புஷ்கோர்ட் போட்டுக் கொண்டு.
''ஏய் யார் நீ?''
''நான்தான் மகாகவி வெல்லாள ஜயமஹா''
''என்ன பெயர் என்று சொல்லும்?''
''அதுதான் சொன்னேனே வெல்லாள ஜயமஹா''
''என்ன எதிர்த்தா பேசுகிறாய்?''

மலசலகூடம் கழுவும் வெள்ளைக்காரன் ஒருவன் கட்டைக் காற்சட்டை போட்டு அல்லது ஸ்டொக்கின்ஸ் போட்டு வந்தால்... ஏன் கோவணம் கட்டிக்கொண்டு வந்தால் கூட வாசலுக்கே சென்று 'குட்மோனிங் சேர்' என்று கைகட்டி நின்று வரவேற்பார்கள்.

இந்தப் போலி கௌரவம் காரணமாக தேசியம் என்ற அடிப்படையில் நாம் முன்னெடுத்துச் சென்ற, எமது பயணத்தில் பிரேக் விழுந்தது.
எமக்குள்ளேயே இந்த நாட்டில் பிறந்த மனிதர்களுக்குள்யே ''அட அவன் இங்கு என்ன செய்கிறான்? அவன் தமிழன்'' என்று பிரித்துப் பேசுகின்றனர்.

என்னிடமே கேட்டுள்ளனர், ''நீ சென் தோமஸ்க்கு வந்து ஏன் தமிழர்களுடனேயே அதிகமாகப் பழகுகின்றாய்?'' என்று.
இது அவனுக்குப் பிரச்சினை? காரணம் அவனது படிப்பறிவில்லாத்தனம்!

நாம் பெரிய கல்லூரிகளில் படிக்கின்றோம் என்றால் எம்மிடம் நல்ல பண்புகள் வரவேண்டும். எல்லோருடனும் பழக வேண்டும். பேச வேண்டும். மதிக்க வேண்டும். இங்கு தமிழ், சிங்களம் பிரச்சினையே அல்ல. ஏதாவது விஷயங்கள் இருந்தால் விவாதிக்க வேண்டும். 'ஏன் தமிழனுடன் பேசினாய்?' இது படித்தவன் கேட்கும் கேள்வி இல்லை.



எங்களிடமிருந்த தவறுகளின் காரணமாகவே நாம் பின்னுக்குப் போனோம். ஏற்றத் தாழ்வுகள் பார்த்தோம்.

தமிழர்களிடமும் இந்த 'அசிங்கம்' இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கதிரை கொடுக்க மாட்டார்கள். கேற்றுக்கு இப்பால் வர முடியாது... ஒரு வகுப்பில் படிக்கிறார்கள். வேறு ஜாதி. புத்தகம் வாங்க வீட்டுக்கு வந்தால் உள்ளே வரமுடியாது. 'கீழ் சாதிக்காரன்', 'சாதி குறைந்தவன்' இதுதான் அவர்களிடமும் இருந்தது.
இதனால்தான் பிரபாகரன்கள் தோன்றினார்கள். பிரபாகரன்கள் இப்படி மாறியதும் இதனால்தான். பிரபாகரனை உருவாக்கியது சிங்களவர்கள் அல்ல. தமிழர்கள்தான். அது ராமநாதனாக இருக்கலாம். பொன்னம்பலமாக இருக்கலாம்.

அவர்கள் தலைகுனிந்து கொண்டிருந்தார்கள். அடிபட்டார்கள். சிரட்டையில் தண்ணீர் குடித்தார்கள் கிணற்றில் தண்ணீர் எடுக்க விடமாட்டார்கள். அடிப்பார்கள். கிணற்றையே மூடிவிடுவார்கள்.

நான் படமொன்று எடுக்கிறேன். மூன்று மொழிகளில் நான் வெளிப்படுத்துவது இந்த நாட்டு இனங்கள் பற்றியே. இலங்கைப் படமொன்றில் இலங்கையிலுள்ளவர்கள், அவர்கள் பிரச்சினைகள் இருக்கவேண்டும். இவர்கள் சிங்களத்தில்தான் பேசவேண்டும் என்றால் அந்தப் படத்திற்குச் சிங்கள உருவத்தைக் கொடுத்துவிடுகிறோம். அது சிங்களப் படமாகிறது. இந்தப் படத்தைப் பார்க்க தமிழர்கள் வருவதில்லை. அதில் அவர்களுக்கும் நான் ஏதாவது சொல்லியிருப்பேன். வேறு மொழியில் சொன்னால் அது அவர்களைச் சென்றடையாது.

ஆரம்பத்தில் என் படங்களைக் காண்பிக்கக் கூடாது என்று சொன்னார்கள். தமிழனும் முஸ்லிமும் சிங்களவனும் பேசும் இவை சிங்களப் படமல்ல என்றார்கள்.

**எங்களிடமிருந்த தவறுகளின் காரணமாகவே நாம் பின்னுக்குப் போனோம். ஏற்றத்தாழ்வுகள் பார்த்தோம்.**

'இது இலங்கைப் படம். நீங்கள் பார்க்காவிட்டால், பார்ப்பதற்கு மனிதர்கள் இருக்கின்றார்கள். நான் நிரூபிப்பேன். ஏனைய படங்களை விட இதனைப் பார்க்க விரும்புகிறவர்கள் அதிகமானோர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு மொழி பேதம், ஜாதிபேதம், மதபேதம் இல்லை. அவர்களுக்கு பிரச்சினையாக இருப்பது இதனைப் புரிந்து கொள்ள முடியாமையே. சிங்களத்தில் காட்டினால் அவர்களுக்கு விளங்காது. 'அந்தரா தெமழ' என்று சொல்கின்றோமே? தெரியாத சிங்களத்தில் ஒருவர் பேசினால் 'நீ சிங்களமா பேசுகிறாய்? அந்தரா தெமழயா?' என்று. அதுபோலத்தான்.

நான் அக்காலத்தில் யாழ்ப்பாணம் போன போது என்னுடைய 'ரண்முத்துதுவ' படத்தைக் காண்பித்திருந்தார்கள். 'வெலிகதர' படத்தை எடுக்கவே சென்றிருந்தோம்.



மாலை நாம் ரெஸ்ட் ஹவுஸ்க்கு திரும்பி வரும்போது 400 - 500 பேரளவில் கூடியிருப்பார்கள். அசைய மாட்டார்கள். இருட்டாகும்போதுதான் வருவார்கள். நான் அங்கிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் கேட்டேன்.

''உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார்கள்... ஆனால் அவர்களுக்கு சிங்களம் பேசத் தெரியாதே சேர்...''
''நான் தமிழில் கதைப்பேன்.''
''ஆ உங்களுக்கு தமிழ் கதைக்கமுடியுமா?'' என்று அவர் ஆச்சரியப்பட்டு கூடியிருந்தவர்களிடமும் சொல்லிவிட்டார். மக்கள் வந்து என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள்.

அடுத்தநாள் மீன்கறி சமைத்துக் கொண்டு வந்து தந்தார்கள். இவ்வளவு மீனும் எனக்குச் சாப்பிடமுடியுமா? என்றால், ''நாளைக்குச் சாப்பிடலாம் வைத்திருங்கள்'' என்றார்கள்.

பின்னர் 'சருங்கலே' படம் எடுக்கச் சென்றிருந்தோம். கரவெட்டிக்கு. அவர்கள் பணக்காரர்கள். கரவெட்டி ஒரு மாதிரியான இடம் தெரியும்தானே? பிரபாகரனின் முதலாவது ஒபரேஷன் சென்டர். சாதிப்பிரச்சினை உள்ள இடம். கோவிலுக்குள் விடமாட்டார்கள்.

என்னைக் கண்டதும் விசிலடிச்சாங்க. ''உங்களோடு கொஞ்சம் கதைக்கலாமா?... ஆ! அட நல்லா தமிழ் தெரியும்டா...'' அவர்கள் என்னை காமினி பொன்சேகரா என்பார்கள். ஒருநாளும் என்னை அந்த மக்கள் அசோகா ஹோட்டலில் சாப்பிடவிடவில்லை. அவர்களே சமைத்து, அவர்களே பாயைக் கொண்டு வந்து, வாழை இலை போட்டு எமக்கு சாப்பிடத்தந்து அதன் பின்னரே அவர்கள் சாப்பிட்டார்கள்.
எங்கே அதெல்லாம்? எல்லாவற்றையும் தான் கெடுத்துவிட்டார்களே!

*(பேட்டியின் தொடர்ச்சி அடுத்த இதழில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்தான்

"என்னங்க... என்னங்க... கொஞ்சம் எழும்புங்களேன்..."

கட்டிலில் தன் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் கணவன் ராஜேந்திரனைத்தான் இப்படித் தட்டி, இல்லை குத்தி எழுப்பினாள் சாவித்திரி.

அவன் எழுந்தபாடில்லை. இன்று முழுக்க அவனுக்கு மூக்கால் ஓடியது. தும்மித் தும்மி கண்களும் சிவந்து விட்டன. முகம் வீங்கிவிட்டது.

நேரத்தோடு படுக்கைக்குப் போகிறவன் அன்று 'ரத்துஇர' பேட்டி நிகழ்ச்சியை சுவர்ணவாஹினியில் பார்த்துவிட்டுப் படுப்போமே என்று, டிவியின் முன்னால் தும்மித்தும்மி இருந்தவன் ஒரு 'பிரிட்ட'னையும் இரண்டு 'விட்டமின் சீ' யையும் விழுங்கி விட்டு, படுக்கைக்குப் போனான்.

படுத்து 10 நிமிடமாகவில்லை. தூக்கம் வந்துவிட்டது. குறட்டைவிட்டுத் தூங்கினான்.

கொடுத்து வைத்தவன் என்று சாவித்திரி எண்ணவில்லை. கொடுத்து வைக்காதவன் என்பது அவளுக்குத்தான் தெரியுமே! மூன்று மாதமாக பழுதாய் போன கடிகாரத்தைத் திருத்த வக்கில்லை, கொடுத்துவைக்க என்ன இருக்கிறது?

என்னங்க...க.... என்னங்க... க... எழும்ப மாட்டிங்களா? இது கோபம். சாவித்திரிக்கு கோபம் வந்துவிட்டது என்று இதற்கு அர்த்தம். இனியும் தூங்கி அன்றைய இரவை இழக்க அவன் விரும்பவில்லை.

அந்த பிரிட்டன் தூக்கத்திலும் முட்டுக்காலுக்குப் போகும் சாரத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு எழுந்து ஓடினான்.

இது அவனது அன்றாட டியூட்டி.

சாவித்திரி காலையில் ஐந்து மணிக்கு எழும்ப வேண்டும். எழும்பினால்தான் மூன்று பிள்ளைகளையும் பல்தேய்த்து, முகம் கழுவி, குளிப்பாட்டி, ஸ்கூலுக்கு வெளிக்கிடுத்தி, பகல் சாப்பாட்டையும் முடித்துவிட்டு, அவளும் வேலைக்கு - நேரத்துக்குப் போக முடியும் - ரெக்கோட் புக்கில் ரெட்லைன் விழுவதற்கு முன்னரே.

அந்தக் கடிகாரம் அன்றைய வேலைகள் எல்லாம் ஓயும் வரை, டி.வி.யில் தேசிய கீதம் இசைக்கப்படும்வரை ஹோலில் இருக்கும்.. இல்லை தொங்கும்.

தம்பதியினர் பெட்ரூமுக்குள் பிரவேசித்த உடன் அதுவும் ஹோலில் டியூட்டியை முடித்துக்கொண்டு பெட்ரூமுக்குள் வந்துவிடும். அதன் பிறகு இங்கே டியூட்டி. அடுத்த நாள் காலை ஆறுமணிக்கு சாவித்திரி வேலைக்குப் போன கையோடு மீண்டும் அது முன் ஹோலுக்கு வந்துவிடும். இப்படி ஒரு வெளவால் வாழ்க்கை அதற்கு. எல்லாம் நேரம்தான்.

முன் ஹோலுக்கும் பெட்ரூமுக்குமாக இரு கடிகாரங்கள் இருந்தன. 'டைம் பொம்' வைத்தாற்போல சரியாக நவம்பர் மாதம் 30ம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு அது தன் ஆட்ட ஓட்டத்தை நிறுத்தி ஆடி அடங்கிவிட்டது. பற்றரியை மாற்றிப் பார்த்தாயிற்று செயற்கை ஒக்சிஜன் கொடுப்பதுபோல... ஊஹூம் அது அசையவில்லை.

இப்போது வரும் கடிகாரங்களே இப்படித்தான். ஏதோ 'டொய்ஸ்' சாமான்களைப் போல.. வித்தியாசமே இல்லை. எல்லாமே பிளாஸ்டிக் மயம்.

முன்னரெல்லாம் சுவிஸ், ரோமிலிருந்து வரும் கடிகாரங்களின் உள்ளே ஒரு பெரிய தொழிற்சாலையைப் போலவே விதவிதமாக இருக்கும். ஒரு பெண்டுலம் கீழே ஆடிக்கொண்டே இருக்கும். அந்தக் காலத்து கடிகாரங்கள் பரம்பரை பரம்பரையாக ஓடிக்கொண்டிருக்கும். ஆனால் இது ஒன்பது மாதம்தான் வாங்கி அதற்குள் இப்படியாகிவிட்டதே.

**தம்பதியினர் பெட்ரூமுக்குள் பிரவேசித்த உடன் அதுவும் ஹோலில் டியூட்டியை முடித்துக்கொண்டு பெட்ரூமுக்குள் வந்துவிடும். அதன் பிறகு இங்கே டியூட்டி. அடுத்த நாள் காலை ஆறுமணிக்கு சாவித்திரி வேலைக்குப் போன கையோடு மீண்டும் அது முன் ஹோலுக்கு வந்துவிடும். இப்படி ஒரு வெளவால் வாழ்க்கை அதற்கு... எல்லாம் நேரம்தான்.**



- பதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவர் லோட்

தானே செய்து சரிக்கட்டி விடலாம் என்று அவன் அதனைக் கழற்றினான். ஏதோ தீப்பெட்டியைவிட இரு மடங்கான பெட்டியொன்றில் வானொலிப் பெட்டியினுள் உள்ள உறுப்புக்கள் போலத்தான்... சின்ன சின்ன கலர் கலரான தாயத்துபோல, மஞ்சாடி கொட்டைபோல இன்னும் என்னென்னவோ... இதற்குப் பேர் 'சேர்க்கியூட்'டாம்.

கடிகாரத்தின் உயிரே இந்த பெட்டியில்தான். அது பழுதாப் போனா... போனதுதான். தூக்கி குப்பையில் எறிந்துவிட்டு புதிதாகத்தான் வாங்க வேண்டும். அதற்கு 175 ரூபாதான். புதிதாக வாங்குவதானால் 1000 - 1500 ரூபா வரும். அதுவே டுப்ளிகேட் என்றால் பாதிவிலை வரும். வழி இல்லாததால்தான் 175 ரூபா கொடுத்து திருத்துவோம் என்று முடிவு செய்தான்.

பெரிய கம்பனி. ஊரே மெச்சுகிறது. என்ன பயன்? எடுக்கிற சம்பளத்தில் இருபது நாளை ஓட்டுவது என்பதே பெரும்பாடு. இந்த லட்சணத்தில் எப்படி 175 ரூபாவை ஒதுக்குவது? என்னமோ அது கையில் வந்து சேரு

**கண்ணைத் திறந்து பார்த்தான். முள் அசையவே இல்லை. ஒன்று வரும்போது ஒன்று போக வேண்டும் என்று விதி. என்ன செய்ய. நேரம்தான்!**

கிற மாதிரி இல்லை. அதுவும் நேரம்தான்.

அடுத்த மாதம். அதுவும் அப்படித்தான். 200 ரூபாவை மிச்சம் பிடித்துக்கொண்டு வீடு வரும் முன்னரே டெலிபோன் வந்துவிட்டது. ஊரிலிருந்து எதிர்பாராத விருந்தாளிகள் என்று. திடீர் பிரவேசம். அவர்களுக்கு பரவசம். இவர்களுக்கு விதிவசம். 200 ரூபா எந்த் மூலைக்கு? போன இடம் தெரியவில்லை.

தன் முயற்சியில் மனம் தளராத ராஜேந்திரன் கடிகாரத்தை நாளை எப்படியும் திருத்த எடுத்துச் செல்வதென்று தீர்மானித்தான். பணமும் எடுத்திருந்தான்.


வெலிமடையிலிருந்து சின்னம்மா குடும்பத்தினர் வந்திருந்தனர். வந்தவர்கள் மியூஸியம், சத்துட்டு உயன, கோல்பேஸ் என்றெல்லாம் சுத்தியடித்துவிட்டு களைத்துப்போய், வந்து அங்கங்கே ஹோலில் குப்புறப் படுத்துவிட்டார்கள்.

காலை ஆறு மணிக்கு பதுளை ரெயில். 5 மணிக்கு எழுப்பச் சொல்லிவிட்டுத்தான் படுத்தார்கள்.

விருந்து போட்டே களைத்துவிட்ட அவர்களும் அயர்ந்துவிடுவோமோ என்ற சந்தேகத்தில் முன்னெச்சரிக்கையாக கடிகாரத்தை கழற்றி பெட்ரூமில் மாட்டிவிட்டே படுக்கைக்குச் சென்றார்கள்.

அவர்களும் தூக்கம். இவர்களும் தூக்கம். காலை மணி 4 இருக்கும். சித்தப்பா திருடன்... திருடன்... என்று வீறிட்டு அலறினார். கதவு திறந்து இருந்தது. கடிகாரத்தையும் காணவில்லை. சந்தேகமில்லை, திருடன்தான் வந்து விட்டான் என்றுதான் அவர் கத்தினார். குஞ்சு குருமான்கள் எல்லோரும் அவரவர் அறைகளிலிருந்து முன் ஹோலுக்கு வந்துவிட்டார்கள்.

பாவம் சித்தப்பா, போனமுறை வந்த நேரம் அவருக்கு துபாயிலிருந்த தம்பி அழகான கைக்கடிகாரம் ஒன்றைக் கொடுத்திருந்தான். அது களவுபோய் விட்டது என்றால் அவரால் தாங்கிக்கொள்ள முடியுமா? 7000 ரூபா! அவர் கடிகாரம் என்று சொன்னது அந்த கைக்கடிகாரத்தைப் பற்றித்தான்.



கண்டக்டர் ஒருநாள் விசில் ஊதுவார்
அப்போது பேருந்து நிற்கும் பயணம் முடியும்.
நடுக்காட்டில் இறக்கிவிடப்பட்ட இவர்கள்
சுமைகளைத் தூக்கிக் கொண்டு எப்படிப் போவார்கள்?

நடுநிசி 2 மணிக்கு சுவர்க் கடிகாரத்தில் கடைசியாக நேரம் பார்த்திருக்கிறார் சித்தப்பா. 4 மணிக்கு ஆள் அரவம் கேட்டு எழுந்தபோது, அது அங்கு இல்லை. கதவு வேறு திறந்திருக்கிறது. கத்தி விட்டார்.

விஷயம் புரிந்துவிட்டது. ஆனால் இந்த 175 ரூபா சமாசாரத்தை எப்படி அவர்களிடம் சொல்வது? கணவரின் கௌரவம் என்னாவது? இப்படி இருவருமே மனதுக்குள் நினைத்துக்கொண்டு மௌனமானார்கள்.

கதவைத் திறந்துவிட்டு கொல்லைக்குப் போயிருந்த சின்னம்மா பாதி நனைந்தும் நனையாத உடம்போடு வந்து நின்றாள். மெதுவாக சாவித்திரி வாய் திறந்தாள். ''சித்தப்பா, உங்களை ஐந்து மணிக்கு எழுப்புவதற்காக நான்தான் கடிகாரத்தை பெட்ரூமுக்கு கொண்டு வந்தேன்'' என்றாள்.

அவர்களின் நல்ல நேரம். உடனே தயாராகி எல்லோரும் சூடாக கோப்பியைக் குடித்துவிட்டு ரெயிலைப் பிடிக்க ஓடினார்கள்.

நேற்று ஒரு மாதிரியாக கடிகாரப் பிரச்சினை தீர்ந்திருந்தது. கம்பனியின் மார்ச் மாத போனஸில் கடிகாரத்தை திருத்தி, கொண்டுவந்து மாட்டிவிட்டிருந்தான்.

திடீர் என்று சாவித்திரி குரல் ஈனஸ்வரத்தில் கேட்டது. பதறியடித்துக் கொண்டு முன் ஹோலுக்கு வந்தான்.

அவனுக்குப் புரியவில்லை. கடிகாரம் களவு போகவில்லை. அது சுவரில் அப்படியேதான் இருந்தது.

''என்னங்க இது நின்று விட்டதே...'' என்றாள் மனைவி பதறியவாறு.

அப்போதுதான் கண்ணைத் திறந்து பார்த்தான். முள் அசையவே இல்லை. ஒன்று வரும்போது ஒன்று போக வேண்டும் என்று விதி.

என்ன செய்ய.

நேரம்தான்! •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்களல்ல, இதயங்கள்!

ஆர். சி. சக்தி



**வயதான ஆண், நடுத்தர வயதுடையவர்கள், சிறுவர், சிறுமியர்... இப்படிப் பலதரப்பட்ட துணை நடிகர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். அந்தக்காலத்து கதை என்பதால் சிறுவர், சிறுமியருக்கு கோவணம் அல்லது இடுப்பில் ஒரு துண்டு மாத்திரமே கட்டப்பட்டிருந்தது.**

நாங்கள் அங்கு போய்ச்சேர்ந்த போது எல்லோரும் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். டைரக்டர் என்னை அழைத்து, 'ஜுனியர் ஆர்டிஸ்ட் எல்லாம் கரெக்டா வந்திருக்காங்களா, பாருங்க. நீங்களும் சீக்கிரமா டிபன் சாப்பிட்டுவாங்க' என்றார்.

புரொடக்ஷன் உதவியாளர் ஜார்ஜ், ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டார். எனக்கு டிபன் கொடுத்தார். சற்று தூரத்தில் துணை நடிகர்கள், சிறுவர்கள் கூட்டமாக உட்கார்ந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இந்தக் கூட்டத்தில் சேராமல் இரண்டு குழந்தைகள். தனியாக உட்கார்ந்து தன்னை அழைத்து வந்தவரிடம் டிபன் வேண்டாமென்று அழுது கொண்டிருந்தன.

அந்த இரண்டு குழந்தைகளும் மிகவும் அழகாக இருந்தன. ஏன் டிபன் வேண்டாமென்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதற்காக பக்கத்தில் போய் நின்றேன். அந்தக் குழந்தைகளின் கண்ணீரை உடனிருந்த ஆள் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தார்; அவர்களை சமாதானப்படுத்தி சாப்பிட வைப்பதில் மும்முரமாக இருந்தார்.

அந்தக் குழந்தைகளின் கன்னத்திலும், முதுகிலும் சில இடங்கள் சிவந்து போயிருந்தன. நான் உடனே அவரிடம், 'குழந்தைகளை அடிச்சீங்களா?' என்றேன். 'நான் அடிக்கல்ல சார், நேத்து அவங்க அம்மா அடிச்சிட்டாங்க' என்றார்.

'நேத்து வாங்கிய அடியா இன்று வீங்கியிருக்கிறது? இந்தத் தளிர்களை ஒரு தாயால் இப்படி அடிக்க முடியுமா, பெற்றவளுக்கு வரும் கோபமா இது? இவ்வளவு முரட்டுத்தனமாக அடிக்கிற அளவுக்கு இந்தக்குழந்தைகள் என்ன தவறு செய்தார்கள்?' என்றேன்.

'தவறு அவங்க பண்ணல்ல சார், தவறு பண்ணதெல்லாம் நான்தான்' என்று அவர் கண் கலங்க ஆரம்பித்தார்.

விவரத்தைத் தெரிந்துகொள்ள எனக்குள் ஒரு ஆவேசம். வற்புறுத்திக் கேட்டபிறகு, தான் இந்தக் குழந்தைகளின் தகப்பன் என்றும், நடந்தது என்ன என்றும் அந்த நபர் விவரித்தார்.

அன்று அவர் எனக்குச் சொன்னதை இன்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

வரிசையாக ஆறு வீடுகளைக் கொண்டது அந்தக் குடியிருப்புப் பகுதி. அந்த வீடுகளில் வாடகைக்கு இருந்த குடும்பங்களின் தலைவர்களுக்கு வெவ்வேறு வகையான தொழில்கள். பள்ளி ஆசிரியர், தனியார் தொழிற்சாலையில் பணிபுரியும் சூப்பவைசர், சிறிய அளவில் மெழுகுவர்த்தித் தொழிற்சாலை நடத்துபவர், பிரபலமான பத்திரிகை அலுவலகத்தில் பணிபுரிபவர், மாநகராட்சியில் சுகாதாரத் துறையில் செக்கிங் இன்ஸ்பெக்டராக ஒருவர்.

வெவ்வேறு துறையில் அவர்கள் பணியாற்றினாலும் பக்கத்து வீடுகளில் இருப்பவர்களோடு ஒருவருக்கொருவர் நேசமுடன் பழகிக்கொள்வார்கள். ஆடவர்கள் வேலைக்குச் சென்றபிறகு, அந்த குடியிருப்பின் பெண்கள் காய்கறி மார்க்கெட்டுக்கோ, கோயிலுக்கோ சேர்ந்து செல்வதைப் பலமுறைப் பார்த்திருக்கிறேன்.

சில நேரங்களில் ஏதேனும் ஒரு குடும்பத்தின் தலைவி வெளியே போக வேண்டியிருந்தால், வீட்டைப் பூட்டாமலேயே பக்கத்து வீட்டுப் பெண்ணை அழைத்து, 'அக்கா, நான் கடைக்குப் போயிட்டு வர்றேன், கொஞ்சம் வீட்டைப் பாத்துக்குங்க' என்று சொல்லிவிட்டுப் போவதுண்டு. மற்றவர்களும் அக்கறையுடன் அந்த வீட்டையும், வீட்டின் குழந்தைகளையும் பார்த்துக்கொள்வதுண்டு.

தீபாவளி, பொங்கல் என்று பண்டிகைக் காலங்களில் ஆறு வீட்டின் பலகாரங்களும் ஆறு வீட்டிற்கும் போய் வரும்.

வேலை முடிந்து மாலை வீட்டிற்குத் திரும்பும் குடும்பத் தலைவர்கள், வீட்டின் வெளியே முற்றத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, அவரவர் அலுவலகங்களில் நடந்த நிகழ்ச்சிகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வார்கள்.

மெதுவாக பேச்சின் போக்கு திசை திரும்பும், நாட்டு நடப்பு பற்றி பேச ஆரம்பிப்பார்கள். 'ஊழல் பெருகிவிட்டது, எங்க பார்த்தாலும் லஞ்சமா இருக்கு.



ஆர். சி. சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனங்ககிட்ட பொறுப்புணர்ச்சி இல்லை. ஒழுக்கம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது' என்று பேச ஆரம்பித்து, 'இந்த நாடு உருப்படாது' என்று சாபமிட்டு முடிப்பார்கள்.

'இந்த நாடு உருப்படணும்னா ஜனநாயகம் எல்லாம் சரிப்பட்டு வராது. ராணுவ ஆட்சி வந்து கையில சவுக்கெடுத்தாதான் நம் ஜனங்க திருந்துவாங்க' இது ஒருவரின் கருத்தாக இருக்கும்.

உடனே மற்றவர் அதை மறுத்து, 'கம்யூனிஸ ஆட்சி வரணும். அப்பதான் பொதுவுடமை பூக்கும்' என்று பக்கத்து நாடுகளைச் சுட்டிக்காட்டிப் பேசுவார்.

''கம்யூனிஸம் எல்லாம் வேணாங்க. சோஷலிஸம் போதுங்க. சோஷலிஸம் போதுங்க' என்பார் ஒருவர்.

வேறொருவர் 'நீங்க சொல்றதெல்லாம் நம்ம நாட்டுக்கு ஒத்துவராது. நம்ம பண்பாட்டுக்கு, கலாச்சாரத்துக்கு காந்தியத்தை ஒழுங்கா கடைப்பிடிச்சா போதும் சார், நாடு உருப்பட்ரும்...'

இப்படி நாட்டு நலனைப்பற்றி கவலைப்பட்டு, நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்த இஸத்தைத் தேர்ந்தெடுப்பது என்று கருத்து வேறுபட்டு, தூக்கம் வரும்வரை பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஒருவர் கொட்டாவிவிட ஆரம்பித்ததும், மற்றவருக்கும் அது தொற்றிக்கொள்ளும். கலைந்து விடுவார்கள். காலையில் எழுந்ததும் அவரவர் வேலைக்குப் போய்விடுவார்கள்.

ஒருநாள் மாலையில்... தனியார் தொழிற்சாலையில் சூப்பர்வைஸராக இருப்பவர் சற்று தளர்ந்த நடையுடன், முகத்தில் கவலை ரேகைகள் அங்கங்கு ஓடிக் கொண்டிருக்க, தெம்பில்லாமல் நடந்து வந்தார்.

மற்ற பக்கத்து வீட்டுக்காரர்கள், ''என்ன, ஒரு மாதிரியா இருக்கீங்க?'' என்று கேட்க, ''இல்ல, ஃபாக்டரியில யூனியன் பிரச்னை. சில கோரிக்கைகளை முன்வச்சு நிர்வாகத்துக்கிட்ட பேசினோம்.

அதை மொதலாளி ஏத்துக்க மாட்டேன்னுட்டாரு. எங்க தலைவரும் விட்டுக்குடுக்க மாட்டேங்கிறாரு. திடீர்னு லாக்-அவுட். பண்ணிட்டாங்க'' என்று சொன்னார்.
அவரே தொடர்ந்து, ''எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். எங்க யூனியன் தலைவர் 'நம்ம கோரிக்கை நிறைவேறாம வேலைக்குப் போகக்கூடாது'ன்னு உறுதியா சொல்லிட்டாரு. எத்தனை நாளுக்கு மொதலாளி தொழிற்சாலையை மூடி வச்சிருப்பாரு? பணம் போட்டுருக்காரே! ஃபாக்டரியைத் தொறக்காம இருந்துற முடியுமா அவரால? சும்மா கொஞ்ச நாளைக்கு எங்களைப் பயமுறுத்தணும்னு நெனைக்கிறாரு. கூடிய சிக்கிரம் சமாதானம் ஆயிடும்'' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

நாட்கள் கடந்தன. வாரங்களும், மாதங்களும் வந்துபோயின. ஃபாக்டரி திறப்பதற்கான அறிகுறியே இல்லை.

பாதிக்கப்பட்ட அந்த வீட்டின் நகைகள், மார்வாடி கடைக்கு அணிவகுத்துச் செல்ல ஆரம்பித்தன. நகைகள் தீர்ந்ததும் பாத்திரங்கள் போயின. ஃபாக்டரி திறப்பதற்கான அறிகுறியே இல்லை.

கஷ்டம் அந்தக் குடும்பத்தை நன்றாகக் கவ்விக்கொண்டது. கான்வென்டில் படித்த அந்தக் குழந்தைகள் காப்பரேஷன் ஸ்கூலுக்கு மாற்றப்பட்டனர். அந்தக் குடும்பத்தில் சமையல் என்பது கும்பமேளாவாகிவிட்டது. ஆறு வீடுகளாக ஒற்றுமையாக இருந்த அந்த வரிசை, ஐந்து வீடுகள் என்ற அளவிற்கு சுருங்க ஆரம்பித்தது. பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் இவர்களோடு பழகுவதைக் குறைத்துக் கொண்டார்கள்.

அந்த சூப்பர்வைஸரைப் பார்த்தாலே ஏதேனும் உதவி கேட்டு விடுவாரோ என்று ஒதுங்க ஆரம்பித்தார்கள். அந்த வீடு தனித்து விடப்பட்டது.

வீட்டின் சொந்தக்காரர் தொல்லை தாங்க முடியவில்லை, வாடகை கேட்டு. அந்த வீடு காலியானால் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பிடித்துக் கொடுக்கலாம் என்று மற்ற ஒவ்வொருவரும் நினைத்தார்கள்.

ஒருநாள் பகல் நேரத்தில், பள்ளி ஆசிரியர் சாப்பிட அமர்ந்தார். பசியோடு இருந்த அந்த சூப்பர்வைஸரின் குழந்தைகள், வாசலில் நின்று ஏக்கத்தோடு எட்டிப் பார்த்தன.

பள்ளி ஆசிரியர் மனைவியைக் கூப்பிட்டு, 'கதவைச் சாத்து' என்றார். கதவு சாத்தப்பட்டது. மூடப்பட்டது வீட்டின் கதவு மட்டுமா? அந்த ஆசிரியரின் மனக் கதவும்தான்.

**கஷ்டம் அந்தக் குடும்பத்தை நன்றாகக் கவ்விக்கொண்டது. கான்வென்டில் படித்த குழந்தைகள் கார்ப்பரேஷன் ஸ்கூலுக்கு மாற்றப்பட்டனர். அந்தக் குடும்பத்தில் சமையல் என்பது கும்பமேளாவாகிவிட்டது. பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் இவர்களோடு பழகுவதைக் குறைத்துக் கொண்டார்கள்.**

இதைத் தற்செயலாகப் பார்த்துவிட்ட அந்தக் குழந்தைகளின் தாய்க்கு அழுகையை அடக்க முடியவில்லை. அவமானத்தால் துடித்துப்போனாள். தன்னுடைய ஆத்திரத்தை, இயலாமையை, வறுமையால் ஏற்பட்ட வேதனையை எப்படித் தீர்த்துக்கொள்வது என்று தெரியாத அந்தத் தாய், குழந்தைகளை இழுத்து வந்து, 'இனிமே அங்க போவீங்களா? இனிமே அங்க போவீங்களா?'' என்று கத்தியபடியே ஆத்திரம் தீர அடித்தாள். குழந்தைகள் அலற ஆரம்பித்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு சாப்பாடு போட முடியாத அந்தத் தந்தை, 'ஷூட்டிங் போனா சாப் பாடும் போட்டு, பணமும் குடுப்பாங்க' என்று கேள்விப்பட்டு துணை நடிகர் ஏஜெ ண்ட் உதவியோடு தன் குழந்தைகளைக் கூட்டத்தில் நிற்பதற்காக அழைத்து வந்தி ருந்தார்.

இந்தச் சோகக் கதையை கேட்டதும் எனக்குள் பல கேள்விகள் பிறந்தன. உண்மையில், அந்த அடிகள் யாருக்கு?

தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலா ளர்களின் நலனைப்பற்றி கவலைப்படா மல் தொழிற்சாலையை மூடிவைத்த, அந் தத் தொழிற்சாலையின் அதிபருக்கா?

அல்லது தன்னை நம்பி இருக்கும் தொழிலாளர்களின் கஷ்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வீரவசனம் பேசி, வேலை நிறுத்தத்தைக் கைவிட மறுத்த அந்தத் தொழிற்சங்கத் தலைவருக்கா?

நேற்றுவரை நன்றாகப் பழகி இன்று ஏழ்மையில் இருக்கிறார்கள் என்பதற்காக அந்தக் குடும்பத்தைப் புறக்கணித்த பக் கத்து வீட்டுக்காரர்களுக்கா?

இந்தநாடு உருப்பட என்ன இஸம் வேண் டும் என்று பட்டிமன்றம் நடத்தியவர்கள், பக்கத்து வீட்டின் வறுமையைப் போக்க எவ்வித இஸத்தையும் தேர்ந்தெடுக்கவில் லையே, ஏன்?

**ஒன்று மாத்திரம் தெளிவாகப் புரிந்தது. இந்த நாடு மாத்திரமல்ல, எந்த நாடும் உருப்படத் தேவை இஸங்களல்ல; இத யங்கள்! அந்த இதயத்தில் கொஞ்சம் வெட்கம், கூச்சம்.**

பக்கத்து வீட்டுக்காரன் பட்டினி கிடக் கும்போது கதவைச் சாத்திக்கொண்டு சாப்பிடுகிறோமே என்று சிறிதளவாவது நம் மனதில் கூச்சம் பிறந்தால், இந்த மண்ணில் சுபிட்சம் பிறக்கும்.

ஆட்சி மாறுவதாலோ கட்சிக் கொடிகளின் நிறம் மாறுவதாலோ எந்த நன்மையும் மக் களுக்குக் கிடைத்துவிடப் போவதில்லை.

இந்த உலகில் எந்தப் பஞ்சம் வந்தா லும் தாங்கிக் கொள்ளலாம்; சமாளித்து விடலாம். தண்ணீர்ப் பஞ்சமாக இருந்தா லும், உணவுப் பஞ்சமாக இருந்தாலும், உடைப் பஞ்சமாக இருந்தாலும்... மனி தர்கள் ஒன்றுபட்டால், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தால், கவலைகளையும், கஷ்டங்களையும் பகிர்ந்து கொண்டால்... மனிதசமுதாயம் வாழ்ந்துவிடும்.

ஆனால் மனிதப்பஞ்சம் ஏற்பட்டால், மனித நேயம் அற்றுப் போனால், இந்த உலகத் தை எந்த இஸங்களாலும் காப்பாற்றமுடி யாது.

*- நன்றி : தமிழன் எக்ஸ்பிரஸ்.*

# Come or go சிக்காகோ

வழிப்போக்கன் கதை



சன சந்தடியும் பரபரப்பும் மிகுந்த சிக்காக்கோ நகரவீதி ஒன்றில் மைக் கேல் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். அவன் அந்நகரின் பிர பல பிக்பொக்கட்காரன். இருந்தும் இன்று இந்த நிமிடம் வரை 'இரை' எதுவும் அகப் படவில்லை.

திடீரென அவனது காற்சட்டைப் பொக் கற் மீது கையொன்று விழுவதை உணர்ந தான். லபக் என அக்கையைப் பிடித்துக் கொண்டான். மென்மையான அக்கை அவ னது முரட்டுப்பிடி தாங்காமல் கசங்குவதை உணர்ந்தவன் அதற்குரியவளின் முகத்தை கூர்ந்து நோக்கினான். பொன்முடி காற்றில் பறக்க அவளது மாநிற விழிகளில் படபடப் பும் அச்சமும் மாறிமாறித் தோன்றியது.

அவளை சன நெருக்கடியிலிருந்து வில க்கி ஒதுக்குப்புறமாக இழுத்துச் சென்றான். ''மைக்கேலிடமே கைவைத்த இந்த அழ குத் தேவதையின் பெயர் யாதோ?'' என வினவினான்.

அவனது பெயரைக் கேட்டு அவளது விழிகள் பிரமிப்பால் மின்னின.

''ஜூலியா'' என மிடுக்காகக் கூறினாள். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அவளது கரங்களை இறுகப்பற்றினான்.

''நீயே இனி என் வாழ்விலும் சாவிலும் பங்காளி'' சொல்லிவிட்டு குனிந்து அவளது உதடுகளில் முத்தமிட்டான்.

இரண்டு பிக்பொக்கட் விண்ணர்களினதும் சாகசத்தால் தொழில் 'ஓகோ' என்று ஓடி யது. சிக்காக்கோ நகர பிக்பொக்கட் சாம் ராஜ்யத்தின் பிரகடனப்படுத்தாத தலைவர் களாக மைக்கேலும், ஜூலியாவும் திகழ்ந் தனர். பங்களாவும் காரும் சொகுசுகளும் குவிந்தன. கூடவே ஜூலியாவின் வயிற்றில் வாரிசும் உருவானது.

அழகான ஆண்மகவுக்கு சாள்ஸ் எனப் பெயரிட்டனர் மைக்கேல் - ஜூலியா தம்பதி யர். ஆனந்த குதூகலத்தின் மத்தியில் திரு ஷ்டிபட்டது போல குழந்தையின் உடலில் பிறக்கும் போதே ஒரு குறைபாடு தோன்றி விட்டது. அதன் வலது கை விரல்கள் மூடி யபடியே அதன் ஜனனம் அமைந்துவிட்டது.

கையைத் திறக்க வைப்பதற்கு செய்யாத வைத்தியமெல்லாம் செய்தாயிற்று. எல்லா கோவில்களுக்கும் நேர்த்தி வைத்து ஏறி இறங்கியாயிற்று. மந்திர தந்திரமெல்லாம் செய்து பார்த்தாயிற்று.

'ஹூம்...' விரல்கள் அசையவே இல்லை.

இறுதி முயற்சியாக மதப்பெரியார் ஒரு வரின் ஆலோசனைப்படி நியூயோர்க்கிலுள்ள உளவியல் நிபுணர் ஒருவரைப் பார்க்கச் சென்றனர். அவர் குழந்தை சார்ள்ஸின் பெற்றோரான மைக்கேலினதும் ஜூலியாவி னதும் பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, தொழில் என பூர்வீகம் முழுவதையும் விசாரித்து அறிந்து கொண்டார். பின்னர் சில இனிப்பு வகைகளையும் விளையாட்டுப் பொருட்க ளையும் குழந்தையிடம் நீட்டினார். ஆனால் குழந்தை இடதுகையை நீட்டி அவற்றை குதூகலத்துடன் வாங்கிக் கொண்டது. வலது கையைத் திறக்கவே இல்லை.

நீண்ட யோசனைக்குப் பின்னர் அவரு க்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு தங்கச் சங்கிலியை எடுத்து வந்து குழந்தையின் கண்ணுக்கு முன்னால் மேலும் கீழுமாக ஆட்டினார்.

என்ன ஆச்சரியம்...!

குழந்தை அந்தத் தங்கச் சங்கிலியைப் பிடிக்க இரண்டு கைகளையும் ஆவலுடன் நீட்டியது. அவனது வலதுகை விரல்களைத் திறந்ததுதான் தாமதம். அதற்குள் இருந்து தங்க மோதிரம் ஒன்று கீழே விழுந்தது.

அந்த தங்க மோதிரத்தை அந்தப் பிள் ளை தனக்குப் பிரசவம் பார்த்த நேர்ஸ் இடமிருந்து பிறக்கும்போதே அடித்து வந்த சங்கதி பின்னர்தான் தெரியவந்தது!.

***(என்ன? உங்கள் சிந்தனையின் நீட்சி நாமெல்லோரும் அறிந்த வீரதீரர்களின் சித் திரங்களை மனமேடையில் தீட்டுகின்றதா?).***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதினி எங்கும் மே தினம்



**உலகத் தொழிலாளர்களினதும் உழைக்கும் மக்களினதும் தியாகத் திருநாள் மே தினம்.**

அமெரிக்காவின் சிக்காகோ நகர தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராடி இரத்தம் சிந்திப் பெற்றெடுத்த உரிமைகளின் தினமே இத் தினம். இதை உலகத் தொழிலாளிவர்க்கத்தின் நினைவு தினமாகப் பிரகடனம் செய்த பாட்டாளிவர்க்க ஆசான்களான கார்ல்மாக்ஸும் பிரெடரிக் ஏங்கல்ஸும் தொழிலாளி வர்க்கத்தின் கொடியாக செங்கொடியையும் பிரகடனம் செய்தனர்.

மே தினம் உலகத் தொழிலாளர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு நூறு வருடங்களுக்கு மேலாகிவிட்டாலும் அது சுட்டிக் காட்டிய லட்சியங்கள் இன்னமும் அடையப்படாமலே உள்ளன.

ஆரம்பத்தில் வேலை நேரக் குறைப்புக்காகப் போராடிய தொழிலாளி வர்க்கம் தனது படிப்பினைகளின் ஊடாகவும் பலத்தின் ஊடாகவும் பின்னர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றப் போராடியது. அதில் வெற்றியும் பெற்றது.

முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து 1917ல் ரஷ்யாவில் உலகைக் குலுக்கிய மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி நிகழ்ந்தது. மனிதகுலம் தனது கோடிக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றுப் பாதையில் என்று மே கண்டிராதவகையில் முதன் முதலாக தொழிலாளர்களின் சமதர்ம அரசு அமைந்தது.

அதைத் தொடர்ந்து இரண்டாம் உலகப் போரின் பின்னர் சீனாவிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், கொரியாவிலும், இந்தோசீனத்திலும், கியூபாவிலும் தொழிலாளர் அரசுகள் அமைந்தன. அதன் உந்து விசையால் உலகத் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் மட்டுமின்றி அடக்கியொடுக்கப்பட்ட நாடுகளும் தேசங்களும் கூட எழுச்சி பெற்று பல வெற்றிகளை ஈட்டின.

எமது நாட்டிலும் மேதினத்தின் புரட்சிகர உணர்வை தொழிலாளிவர்க்கமும், விவசாயிகளும், இளைஞர்களும் உயர்த்திப் பிடிக்கத் தவறவில்லை. அந்நிய ஆட்சியாளர்கள் மட்டுமின்றி அவர்களது பாதந்தாங்கிகளாக சுதந்திரத்தின் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐக்கிய தேசியக் கட்சிஅரசும் இலங்கைத் தொழிலாளி வர்க்கம் மேதினத்தைக் கொண்டாட அனுமதிக்கவில்லை. ஒரு உலகத் தொழிலாளர்களின் ஒருமைப்பாட்டு தினமான மேதினத்தை 'வெளிநாட்டர் தினம்' என ஐ. தே. க அரசு முத்திரை குத்தியது. ஆனால் தொழிலாளர்கள் நடாத்திய தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக 1956ல் பதவிக்கு வந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் அரசு மே தினத்தை தொழிலாளர் தினமாக ஏற்று தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்தது.

இருப்பினும் அத் தினத்தின் புரட்சிகரத் தன்மையை மழுங்கடிக்கும் வகையில் தொழிலாளர் புரட்சிகர ஊர்வலங்களில் பங்கெடுக்காத வகையில் அன்றைய தினத்தில் தியேட்டர்களில் இலவச சினிமாக் காட்சிகளை ஏற்பாடு செய்தும் இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் சினிமாக் கலைஞர்களை அழைத்து வந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தும் ஐ.தே.க. பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இன்று உலக அரங்கிலும் சரி, எமது நாட்டிலும் சரி தொழிலாளர் வர்க்கமும் உழைக்கும் மக்களும் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். பல நாடுகளில் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி உருவாக்கிய சமதர்ம அரசுகளை உலக ஏகாதிபத்தியமும் அந்நாடுகளில் உருவான புதிய அதிகார வர்க்கமும் கூட்டுச் சேர்ந்து அழித்தொழித்துள்ளன. மக்களைப் பிளவு படுத்தும் வகையில் நாடுகள், இனங்கள், மதங்கள், மொழிகள், சாதிகள் என்பவற்றுக்கிடையில் சண்டைகளை ஏகாதிபத்தியம் தொடக்கி வளர்த்து வருகின்றது.

மறுபுறம் உலக மயமாக்கம், தாராளமயம் என்ற கோஷங்களுக்கூடாக எல்லைகளைக் கடந்த உலகம் தழுவிய சுரண்டலையும் அடக்கு முறையையும் ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து வருகின்றது.

இந்தப் புதிய சவால்களை எதிர் கொண்டு போராடி, முறியடித்து, சுரண்டலற்ற, அடக்கு முறை அநீதிகளற்ற ஒரு புதிய உலகைச் சிருஷ்டிப்பதற்கான பணி, முன் என்றுமில்லாத வகையில் உலகத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னர் காத்துக் கிடக்கின்றது.

எமது நாட்டுத் தொழிலாளி வர்க்கமும் இந்த புனிதப்போரில் இணைவதற்கு இன, மத, மொழி போதங்களைக் கடந்து ஒன்றுபடுவதே இவ்வருட மேதினத்தில் நாம் ஏற்கும் சபதமாக இருக்க வேண்டும்.

**- செஞ்சுடரோன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து (நா) வீடு

# குட்டையில் ஊறும் கூட்டணி மட்டைகள்




டாக்டர் ராமதாஸ் (பா.ம.க.)

- பொன்பரி முத்தையா -

1996ம் ஆண்டு நடைபெற்ற மக்களவை மாநிலங்களவைத் தேர்தலில் படுதோல்வியடைந்த ஜெயலலிதா 1998ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தனது புதிய கூட்டணியுடன் அமோக வெற்றி பெற்றார். அவரின் புதிய பங்காளிகளான பா.ம.க. 5 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களிலும், ம.தி.மு.க. 5 இடங்களில் போட்டியிட்டு 3 இடங்களிலும் வென்றன. அ.தி.மு.க. 18 இடங்களையும் கைப்பற்றியது.

அரசியலில் இருந்து ஒழித்துக்கட்டப்பட்டதாக கருதப்பட்ட 'ஜெ' புதிய கூட்டணியின் ஆதரவுடன் மீண்டும் வீறு கொண்டு எழுந்தார். மத்திய அரசைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் விளங்கினார். 'ஜெ'யின் ஆதரவுடன் மற்றைய கூட்டணிக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பி.ஜே.பி வாஜ்பாய் தலைமையில் மத்தியில் ஆட்சி அமைத்தது.

சாதிச் சங்கமாக இருந்து அரசியல் கட்சியாக மாறி முதன் முதலாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு ஐந்தில் நான்கைக் கைப்பற்றி பாராளுமன்றம் சென்ற பா.ம.க. 'ஜெ'வின் ஆதரவினால் எடுத்த எடுப்பிலேயே மத்திய அமைச்சரவையிலும் பங்கு பற்றியது.

மத்திய அமைச்சரவையில் இடம் பிடிப்பதற்கு கூட்டணிக்கட்சிகளுக்கிடையே உண்டான மோதலினால் வாஜ்பாய்க்கு ஏற்பட்ட தர்மசங்கடமான சூழ்நிலையை கருத்திற் கொண்டு ம.தி.மு.க. (வை.கோ) அமைச்சரவையில் பங்கு கேட்கவில்லை. (இதன் மூலம் பி.ஜே.பி க்கும் ம.தி.மு.க வுக்கும் இடையே ஓர் நட்பு ரீதியான இறுக்கம் ஏற்பட்டது) அ.தி.மு.க, பா.ம.க மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்தது.



"அம்மா சரணம்!" - மூப்பனார்

1996ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பெருவெற்றி பெற்ற தி.மு.க., த.மா.க கூட்டணி 1998ம் ஆண்டு படுதோல்வி அடைந்தது. முன்பு 20 இடங்களை வென்றிருந்த த.மா.க 3 இடங்களையே பெறமுடிந்தது. 17 இடங்களில் வெற்றி பெற்ற தி.மு.க 6 இடங்களையே வென்றது.

மத்தியில் தனது தயவிலேயே அரசு இருப்பதை தனக்குச் சாதகமாக கருதிக்கொண்ட 'ஜெ', அவ்வரசைக் கொண்டு தன்மீது போடப்பட்டுள்ள ஏராளமான வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் கருணாநிதி தலைமையிலான மாநில அரசை கலைப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டார். இது வாஜ்பாய் அரசுக்கு தர்ம சங்கடத்தை உண்டாக்கியது.

பி.ஜே.பி தன் தேர்தல் சுலோகமாக மாநிலங்கள் அரசை தேவையில்லாமல் கலைப்பது இல்லை எனவும் மாநில அரசின் நடவடிக்கைகளில் அநாவசியமாக தலையிடுவதில்லை எனவும் சொல்லியிருந்தது. இவை காங்கிரசுக்கு எதிரான கருத்துகளே. காங்கிரசின் ஆட்சிக் காலங்களிலேயே இந்தியாவில் அதிகளவில் காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாநிலஅரசுகள் மத்திய அரசால் கலைக்கப்பட்டன. இதே தவறை தமது அரசு செய்யாது என்று பி.ஜே.பி ஏற்கனவே உறுதி கூறியிருந்தது.

தன் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதால் ஆத்திரமடைந்த 'ஜெ', கடைசியில் மத்திய அரசுக்கான ஆதரவு வாபஸ் என்ற அஸ்திரத்தைப் பிரயோகித்தார். அதற்கும் வாஜ்பாய் வளைந்து கொடுக்கவில்லை. இதற்கிடையே காங்கிரசுடன் இரகசியப் பேச்சுக்களை ஆரம்பித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் காங்கிரஸ், பாராளுமன்றத்தில் பி.ஜே.பி அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. தானும் தனது கூட்டணிக் கட்சிகளும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பி.ஜே.பி அரசை எதிர்த்து வாக்களிப்போம் என ஜெயலலிதா அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பில் வாஜ்பாய் அரசு தோல்வியடைந்து, அதன் 13 மாத ஆட்சி முடிவுக்கு வந்தது. மீண்டும் தேர்தல் கூட்டணிகள் ஆரம்பமாகின. அரசியல் சாணக்கியம் மிகுந்த கருணாநிதி எதிர்கால நிகழ்வுகளை கவனத்தில் கொண்டு பி.ஜே.பி கூட்டணியில் இணைந்தார்.

'கடவுள் இல்லை, இல்லவே இல்லை' என்று நாத்திகம் பேசி, புதிய சமுதாயம் உருவாக்க முனைந்த பெரியாரின் வழிவந்த தி.மு.க., அ.தி.மு.க., என்ற இரு பெரும் திராவிடக் கட்சிகளும் இந்து சமயத்தை உயர்த்திப்பிடித்து இந்து இந்தியாவை உருவாக்க முனையும் பி.ஜே.பி யுடன் கூட்டணி அமைப்பதில் போட்டியிட்டது விந்தையிலும் விந்தை.

கருணாநிதி பி.ஜே.பியுடன் இணைந்தவுடன் ஏற்கனவே பி.ஜே.பியுடன் இணைந்திருந்த வை.கோ. விற்கு தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டது. கருணாநிதியால் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்டு தனிக்கட்சி ஆரம்பித்த வை.கோவிற்கு தற்பொழுதுதான் ஓரளவு நிலையான வாக்கு வங்கிகளை உருவாக்க முடிந்திருந்தது.

நீண்டகால நோக்கிலே தி.மு.க, அ.தி.மு.க., கட்சிகளுக்கான மாற்றுக்கட்சியாக மூன்றாவது சக்தியாக வளரக்கூடிய பலம் ம.தி.மு.க.வுக்கே இருந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை காங்கிரஸ் அழிந்த சக்தியாகவே உள்ளது. அனைத்து தரப்பினருக்கும்.... அனைத்துக் கட்சிகளிலிருந்து வெளியேறுவோருக்கும் மாற்றுக் கட்சியாக உள்ள ஒரே அமைப்பு ம.தி.மு.க என்று சொன்னால் மிகையல்ல. ஆனால் தி.மு.க.-பி.ஜே.பி. கூட்டணி மூலம் இவை அனைத்தையும் ம.தி.மு.க இழந்தது.

மீண்டும் 2001இல் தமிழ் நாட்டு சட்டசபைத் தேர்தலில் கூட்டணிக் குழப்பங்கள் ஆரம்பமாகியுள்ளன. மீண்டும் ஜெயலலிதாவே காய்களை நகர்த்த ஆரம்பித்தார். மத்தியில் இரண்டு மந்திரிகளுடன் மாநிலத்தில் ஆளும் தி.மு.க.வின் முக்கிய கூட்டணியாகவும் இருந்த பா.ம.க. யாரும் எதிர் பாராதவிதமாக எந்தவிதமான பாரதூரமான சம்பவங்களும் இல்லாமல் திடீரென்று மத்திய அரசிலிருந்து ராஜினாமாச் செய்து அ.தி.மு.கவுடன் மீண்டும் இணைந்தது. இது தி.மு.க அணிக்கு மாபெரும் இழப்பும் அதிர்ச்சியுமாகும். ஐந்து வருட ஆட்சியை முடித்து மீண்டும் அரியணை ஏற தயாராகும் கருணாநிதிக்கும் ஐந்து வருட காலம் அதிகாரம் இல்லாமல் அல்லல்பட்டு மீண்டும் ஆட்சியை எப்பாடுபட்டாவது பிடித்துவிடத் துடிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே நடைபெறும் இழுபறி போட்டியில் ஏனைய கட்சிகள் எல்லாம் இழுபடுகின்றன.


கருணாநிதி


ப. சிதம்பரம்

**புதிய உறவு இது போவது எதுவரை ?**

மத்திய அரசில் இருந்து இராஜினாமாச் செய்ததற்கு பிரதி உபகாரமாக பா.ம.க. தமிழ் நாட்டில் 27 தொகுதிகளும் பாண்டிச்சேரியில் இரண்டரை வருடங்களுக்கு ஆட்சி உரிமையும் என்ற உடன்பாட்டை அ.தி.மு.க. வுடன் செய்து கொண்டது. பா.ம.கவைப் பொறுத்த மட்டில் இது மிகப்பெரிய போனஸே.

ஜெயலலிதா ஏன் பா.ம.கவுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது ஆச்சரியமே. இன்றைய அ.தி.மு.க. வைப் பொறுத்தவரையில் அதில் அடியாள் பலத்துடன் இருந்த பல மாஜித் தலைவர்கள் பலர் (சாத்தூர் ராமச்சந்திரன், தாமரைக்கனி, ஆதிராஜாராம், கருப்புசாமி பாண்டியன், கண்ணப்பன், பொன்னையன்....) ஓரங்கட்டப்பட்டார்கள். இதனால், வன்முறையிலேயே வளர்ந்த பா.ம.க தன்னருகில் இருப்பது தனக்குப் பாதுகாப்பு என்று 'ஜெ' நினைத்திருக்கலாம். அத்துடன் தென்மாவட்டங்களில் பா.ம.வுக்கு உள்ள வாக்கு வங்கிகளும் தனக்கு சாதகமான அம்சமே என்ற எதிர்பார்ப்பிலே 'ஜெ' அளவுக்கு அதிகமாகவே பா.ம.கவுக்கு தொகுதிகளை வழங்கினார்.

அடுத்ததாக ஏற்கனவே 29 எம்.எல்.ஏ.க்களைக் கொண்டுள்ள த.மா.கா தன்னுடன் காங்கிரஸையும் இணைத்துக்கொண்டு அதிக தொகுதிகளை எதிர்பார்த்தது. தி.மு.க. கூட்டணியில் பி.ஜே.பி உள்ளதால் 'ஜெ'யை ஒதுக்கி விட்டு கருணாநிதியுடன் அணிசேர முடியாத இக்கட்டான சூழ்நிலையில் இருந்தது த.மா.கா.

## ஓவர் லோட்


எல்லோருக்கும்
ஹிட்லரிசத்தைப் போதியுங்கள்

பின்பு
பயங்கரவாதத்திற்கு
நீர் ஊற்றுங்கள்
இனப்படுகொலைக்கு
உரம்போடுங்கள்
பிரிவினைவாதத்தை வளர்க்க
உயிரைக் கொடுத்து உதவுங்கள்

யுத்தங்களை எரியவிட்டு
எண்ணெயூற்றுங்கள்
எடுத்ததற்கெல்லாம் மனிதனை
சுடுங்கள், வெட்டுங்கள், குத்துங்கள்
கொல்லுங்கள்
வீட்டோடு சேர்த்தே
குட்டி குருமானோடு எரியுங்கள்

மனிதன்
அகதியென்றேனும்
ஒன்று படட்டும்!

*- எஸ். நளீமின் 'கடைசிச் சொட்டு உசிரில்' தொகுப்பிலிருந்து...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியில் உள்ள இரண்டாம் மட்டத் தலைவர்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி மூப்பனார் 'ஜெ'யுடன் இணைந்தார். கருணாநிதி என்றுமே தனது கட்சி நலனையும் தனது நலனையும் முன்னிறுத்தியே தனது முடிவுகளை எடுப்பார். பல இடங்களில் அவரது சாணக்கியத்தனம் என்பதைவிட நயவஞ்சகமான முறையிலேயே தன்னை நிலைநிறுத்திக் கொண்டார் என்பதை அவரது கடந்தகாலத்தை பார்க்கும் எவரும் புரிந்து கொள்ளலாம். வை.கோவுடன் மீண்டும் உறவை புதுப்பித்தபோதும் அவதானத்துடனேயே நடந்து கொண்டார்.



**தனிவழி, அதுதான் யோசனை!**

தற்போது நடைபெறப்போகும் தேர்தலிலும் ம.தி.மு.க அதிக தொகுதிகளை எதிர்பார்ப்பதை உணர்ந்து கொண்ட கருணாநிதி அதற்கும் ஒரு தந்திரம் மேற்கொண்டார்.

கருணாநிதியின் தேசிய ஜனநாயக கூட்டணியில் தற்போது உள்ள நிலவரப்படி தி.மு.கவிற்கு அடுத்து பெரிய கட்சியாக ம.தி.மு.க.வே உள்ளது. பா.ஜ.க தேசியகட்சியாக இருந்தாலும் தமிழ் நாட்டில் அதன் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. எத்தனை தொகுதிகள் கொடுத்தாலும் அத்தனை தொகுதிகளினதும் பி.ஜே.பியால் வெற்றிபெற முடியாது. அசாதாரணமாக அது வெற்றி பெற்றாலும் ஆட்சியில் பங்கு கேட்காது. அதையும் மீறி வேறு சிக்கல்கள் எதுவும் தோன்றினாலும் டில்லியில் உள்ள தலைவர்களுடன் பேசி நிலைமைகளை சமாளிக்க முடியும்.

இதனை நன்கு உணர்ந்த கருணாநிதி தனது கூட்டணிக் கட்சிகளுடன் தேர்தல் தொகுதி பங்கீடு பற்றிய பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே திடீரென பத்திரிகையாளர்களை கூட்டி தி.மு.க.விற்கும் பா.ஜ.க.விற்கும் இடையே தேர்தல் தொகுதி பங்கீடு முடிவடைந்து விட்டதையும் தனது கூட்டணியில் தி.மு.கவிற்கு அடுத்த பெரிய கட்சி பா.ஜ.கட்சி என்றும் அதனடிப்படையில் பா.ஜ.கட்சிக்கு 23 தொகுதிகள் ஒதுக்கப்படுவதையும் அறிவித்து இரு கட்சிகளும் உடன்படிக்கையில் கையொப்பம் இட்டுவிட்டதாகவும் அறிவித்தார்.

இது கூட்டணியில் இருந்த ம.தி.மு.க உட்பட மற்ற கட்சியினருக்கு அதிர்ச்சியை அளித்தது. அதிக தொகுதிகளை எதிர்பார்த்திருந்த மற்றைய கட்சிகளுக்கு 23ஐ விட குறைந்தளவு தொகுதிகளே ஒதுக்க முடியும் என்று இதன் மூலம் கருணாநிதி உணர்த்தினார்.

இது கருணாநிதியின் தந்திரமான வேலையே. 'ஜெ' கூட்டணியில் தொகுதிகள் பங்கிடப்பட்டு அவை பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு விட்டன. அதனால் வை.கோ 'ஜெ' கூட்டணிக்குப் போக முடியாது. மூன்றாவது அணி ஆரம்பிக்கத் தயாராக இருந்த சிறிய கட்சிகளையும் தமது கூட்டணிக்குக் கொண்டு வந்தாகிவிட்டது. ஆகவே வை.கோ.வுக்குப் போக வேறு மார்க்கம் கிடையாது கொடுத்ததைப் பெற்றுக் கொண்டு அடங்கி இருக்க வேண்டும் அல்லது தனியாக தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இதில் எது நடந்தாலும் தனது மகனின் எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கு நன்மையே என்று கருணாநிதி திட்டமிட்டார்.

**இக்கூட்டணிகள் எல்லாம் கொள்கை அடிப்படையில் ஏற்பட்டவை அல்ல. மாறாக அயோக்கியத் தனமான சந்தர்ப்பவாத கூட்டணிகளே ஆகும். அடிப்படையில் இரு கூட்டணிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. இதில் யார் வெற்றி பெற்றாலும் மக்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது மட்டுமே உண்மை.**

இதனால் வெகுண்டெழுந்த வை.கோ. கூட்டணியை விட்டு வெளியேறினார். பா.ஜ.க போட்டியிடும் 21 தொகுதிகள் தவிர்ந்த மிகுதி 213 தொகுதிகளிலும் தனது கட்சி போட்டியிடும் என்று அறிவித்தார்.

வை.கோவின் வெளியேற்றத்தால் உண்டாகும் இழப்பை ஈடுகட்ட, கருணாநிதி மிகுதியாக இருந்த சாதிக் கட்சிகளை எல்லாம் தனது அணியில் சேர்த்தார்.

இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருப்பது கொள்கைக் கூட்டணியல்ல. மாறாக பச்சைச் சந்தர்ப்பவாத கூட்டணியே. சாதிகளை ஒழிப்பதற்காக சமத்துவ புரம் கட்டும் கருணாநிதி தேர்தல் நேரத்தில் அதே சாதிக்கட்சிகளை அரவணைத்து சாதி ஓட்டுகள் மூலம் அரியணை ஏற வழி பார்க்கிறார். எப்படியிருந்தாலும், வை.கோ.வின் பிரிவு தி.மு.க. ஓட்டுகளை சிதறடிக்கவே செய்யும்.

இக்கூட்டணிகள் எல்லாம் கொள்கை அடிப்படையில் ஏற்பட்டவை அல்ல. மாறாக அயோக்கியத்தனமான சந்தர்ப்பவாத கூட்டணிகளே ஆகும்.

மேலோட்டமாக பார்க்கும்போது தி.மு.க கூட்டணி அதிக கட்சிகளை கொண்ட மிகப் பிரமாண்டமான கூட்டணி போலத் தோன்றலாம். ஆனால் உள்ளே நோக்கும் போது இவற்றில் பல கட்சிகள் வெறும் லேபல் கட்சிகளே. இவை தனியாகத் தேர்தல்களில் நின்றால் ஒரு தொகுதியைத்தானும் பெறமுடியாதவை.

பல கட்சிகள், இருப்பதே தேர்தல் நேரங்களில் மட்டுமே தெரியவரும். இவை கூட்டங்கள் பேரணிகள் என்ற பெயரில் பணம் கொடுத்து ஆட்களை அழைத்து வந்து தம்மிடம் தொண்டர் பலம் உள்ளதாக மற்றவர்களுக்குக் காட்டுவார்கள். யார் அதிக தொகுதிகள் தருவார்களோ அந்தப்பக்கம் சாய எந்த நேரமும் தயராக இருப்பார்கள்.

மறுபக்கத்தில் 'ஜெ' கூட்டணியை நோக்குவோமானால் இதுவும் ஒரு சந்தர்ப்பவாத கூட்டணியாக அமைந்தாலும், அதனுடன் இணைந்திருக்கும் கட்சிகளைப் பொறுத்த மட்டில், ஒரு பலமான கூட்டணியாக கருத இடமுண்டு.

கூட்டணியில் உள்ள கட்சிகளான காங்கிரஸ் + த.மா.கா இணைந்து போட்டியிடுவதால் பாரம்பரியமிக்க காங்கிரஸ் ஓட்டுகள் சிதற வாய்ப்பில்லை.



**ஒன்றுசேர்ந்த அன்பு மாறுமா?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்றே C.P.I + C.P.M போன்ற கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் பாரம்பரியமான நிச்சயிக்கப்பட்ட வாக்கு வங்கிகள் உள்ளன. அத்துடன் பா.ம.க + ஜான்பாண்டியனின் கட்சி என்பவற்றின் சாதி ஓட்டுக்களும் உள்ளன. இவை ஜெ.யிடம் அப்படியே உள்ளது.

96ஆம் ஆண்டு தேர்தலில் 'ஜெ' படுதோல்வி அடைந்தாலும் அ.தி.மு.க.வின் ஓட்டு விகிதம் சரியவில்லை. 98ஆம் ஆண்டு அது 2% அதிகரித்திருந்தது. தி.மு.க 5% இழந்திருந்தது. 'ஜெ' இன் பிரசாரம், தன்னை பெண் என்ற வகையில் முன்வைத்தும், எம்.ஜி.ஆரை நினைவுபடுத்தியுமே நடத்தப்படுகின்றது.

M.G.R. காலத்தில் இருந்தே அ.தி.மு.க.விற்கு தாய்க்குலத்தின் வாக்குகளே அதிக அளவில் கிடைத்து வந்தது. அதனைப் பயன்படுத்தி, தன்னைப் பெண் என்றும் பாராமல் சிறையில் அடைத்தார்கள் பொய் வழக்குகள் போட்டார்கள் என்று ஜெயலலிதா தன்மீது அனுதாபத்தை உண்டாக்க முனைகின்றார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார்.

அத்துடன் ஒரு நடிகையாக வாழ்க்கையை ஆரம்பித்த 'ஜெ', சினிமா என்ற மாயையை எப்படிப் பயன்படுத்துவது என்று நன்றாக அறிந்து வைத்துள்ளார். காலம் காலமாக தி.மு.க.வில் இருந்த S.S.சந்திரன், ராதாரவி போன்றவர்களுடன் மன்சூரலிகான், ராதா, அம்பிகா, நளினி, வாசுகி, சரஸ்வதி, குள்ளமணி, குண்டு கல்யாணம் என்று அ.தி.மு.க.வில் இணைந்திருக்கும் நட்சத்திரங்களின் பட்டியல் நீள்கிறது.

இதைவிட தமிழ்நாட்டில் M.G.R தவிர்த்து வேறு யாரும் இதுவரை தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றதில்லை. தற்போது மக்களும் தி.மு.க.வின் 5 வருட ஆட்சியில் மாற்றத்தை எதிர்பார்ப்பதாக உள்ளூர் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவற்றினடிப்படையில் பார்த்தால் அடுத்த முதல்வராக வெற்றிவாகை சூடப்போகிறவர் ஜெயலலிதாவே. அவர் தேர்தலில் நிற்குமுடியாமல் சட்டம் தடுத்தாலும் அவரது அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அடிப்படையில் இரு கூட்டணிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. இவற்றில் யார் வெற்றி பெற்றாலும் மக்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது மட்டுமே உண்மை. ●




''தந்தை செல்வா இயற்கை மரணம் எய்தியதனால் அவர் புகழப்படுகின்றார். ஆனால் அவரால் வாரிசாக அடையாளப்படுத்தப்பட்ட அண்ணன் அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டதனால் துரோகியாகக் கணிக்கப்பட்டுள்ளார். தந்தை செல்வா இப்போதிருந்தால் ஆயுதக் கும்பல்கள் அவரை என்ன செய்திருப்பரோ தெரியாது''

*- யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா சதுக்க திறப்புவிழாவில் ஈ.பி.ஆர்.எல்.எப். மாநகரசபை உறுப்பினர் சுபத்திரன்.*

சிறுவர்களைப் போராளிகளாக சேர்த்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்துள்ள விடுதலைப்புலிகள், ''நாம் சிறுவர் மற்றும் ஆயுதப்போர் குறித்த ஐ.நா.செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுன்னுவுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறவில்லை'' எனவும் தெரிவித்துள்ளனர்.

*- வீரகேசரி 04.04.2001.*

பிரபாகரன் தனது பிள்ளைகள் எவ்வாறு பரீட்சை எழுதினார்கள் என்பதை யாருக்கும் தெளிவாக்க வேண்டும் என்றில்லை... பிரபாகரனினதும் மற்றும் புலிகளின் உயர்மட்டத் தளபதிகளினதும் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளோடு ஒன்றிணைந்துதான் கல்வி கற்கின்றார்கள் என்பதை வன்னி மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

*- 08.04.2001 திகதி 'ஆதவன்' கட்டுரையில்.*

''இப்போது நாகரிகத்தின் பெயரால் மூலிகைகள், பறவைகள் போன்று வேடுவ சமூகமும் அருகிக் கொண்டு வருகின்றது. நானும் என்போன்ற வயதுள்ள சிலரும் தான் வேடுவச் சமூகத்தைப் பாதுகாத்து காடுகளில் வாழ்க்கை நடாத்தி வருகின்றோம்.''

*- வேடுவர் தலைவர் ஊடுவாரிகே வன்னியலத்தோ கூறியது.*

''அரசியல் தீர்வொன்று அவசியம். அது சமஷ்டியாகவோ, கூட்டமைப்பாகவோ, வடகிழக்குச் சபையாகவோ, சுயாட்சிப் பிராந்தியமாகவோ இருக்கலாம். பெயர் முக்கியமானதல்ல. இத் தீர்வுகளில் ஏதாவதொன்றை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியும்''.

*- விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.*

''ம.தி.மு.க. தலைவரையும் பா.ம.க. தலைவரையும் தவிர இந்திய அனைத்துக்கட்சித் தரப்பிலும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எவ்வித ஆதரவும் இல்லை. எல்லோரும் சந்திரிகா குமாரதுங்கவின் திட்டத்தை ஆதரிக்கின்றனர். ராஜீவ்காந்தியின் கொலையின் பின்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்திய மக்களுக்கு வெறுப்பு அதிகமாகி விட்டது. ராஜீவ் கொலையில் பிரபாகரனுக்கும் சந்தேகமில்லாமல் தொடர்பு இருக்கின்றது.''

*- 'புரொண்ட்லைன்' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. என். ராம்.*

''யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களுள் பெரும்பான்மையானவர்கள் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள்.''

*- 'துக்ளக்' கட்டுரையில் யாழ். சென்று திரும்பிய நிருபர் வெங்கட்.*

''பிரித்தானியா விதித்துள்ள தடை லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியற் செயற்பாடுகள் மீது நெருக்குவாரங்களை இறுக்கியபோதும் நாம் மாற்று வழிகளையும் புதிய தந்திரோபாயங்களையும் கடைப்பிடித்து சட்டத்தின் பிடிக்குள் சிக்குப்படாமல் செயற்பட்டு வருகின்றோம். இந்தத் தடையால் எனது தனிப்பட்ட அரசியல் சுதந்திரங்களும் உரிமைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் குன்றிய உடல் நிலையும் மருத்துவ தேவைகளும் காரணமாக நான் வேறு நாடுகளில் குடியமர்வது முடியாத காரியம்''

*- 'தமிழ் கார்டியன்' பேட்டியில் அன்ரன் பாலசிங்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்



கொழும்புத் தமிழ்ச் சங்க புதிய மண்டபத்தில் கூடியிருக்கும் சபையோர்

கொழும்பில் வாழ்ந்த தமிழறிஞர்கள் 1924ம் ஆண்டில் தமிழ் மக்கள் அதிகமாக உள்ள வெள்ளவத்தையில் 'திருக்குறட் பயிற்சிக் கழகம்' எனும் அமைப்பை நிறுவினர். விபுலானந்த அடிகள், சுவாமி சங்கர சுப்பிரமணியர், சச்சிதானந்தயோகி ஆகியவர்களின் ஆசியும் ஆதரவும் இவர்களுக்கு இருந்தது. சேர். அ. மகாதேவா காப்பாளராகவும், திரு. இ. தம்பிராசா தலைவராகவும், திரு. மு. வயிரவப்பிள்ளை செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தனர்.

இவர்கள் 'முருகன் பெருமை' எனும் நூலைப் பதிப்பித்தும், 'கலைமகள்' என்னும் ஆண்டுச் சஞ்சிகையையும் வெளியிட்டனர். வாரம் தோறும் திருக்குறள் வகுப்புகளை நடாத்திவந்ததோடு, பல்வேறு சொற்பொழிவுகளையும் ஒழுங்கு செய்வதும் ஆரம்பகாலப் பணியாக இருந்தது.

கழகத்தை முன்னின்று வழிநடத்திய தமிழ் அறிஞர்கள் இடமாற்றத்தினால் வேறிடம் சென்றதினால் 1936ம் ஆண்டு இக்கழகம் வலுவிழந்தது. மீண்டும் தலைநகருக்கு இடமாற்றம் பெற்ற இவர்களும், வேறு அறிஞர்களும் இணைந்து **'கொழும்பு தமிழர் முன்னேற்றக் கழகம்'** எனும் அமைப்பை 1942ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் நாள் நிறுவினர்.

இச்சங்கத்தின் தலைவரான முதலியார் சு. பொன்னம்பலம் அவர்களும், துணைத் தலைவர்களாக இருந்த திரு. இ. தம்பிராசா, திரு. மு. வைரவப்பிள்ளை ஆகிய மூவரும் இச்சங்கத்தை நிறுவுவதற்கான முன்னோடிகளாக இருந்தனர்.

1901ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான இரண்டாவது தமிழ்ச்சங்கம், 1924ல் கொழும்பில் ஆரம்பமான திருக்குறட் பயிற்சிக்கழகம், கொழும்பில் 1942ல் ஆரம்பமான தமிழ் முன்னேற்றக் கழகம் ஆகியவைகளுக்கு இடையே ஒருவகைத் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது.



க. இ. க. கந்தசாமி

பல அறிஞர்கள் இச்சங்கத்தின் உறுப்பினர்களாயினர். இவ்வாண்டு (1942) ஆகஸ்ட் மாதம் பொதுக்கூட்டத்தில் ''கொழும்புத் தமிழ்க் கழகம்'' என பெயர் மாற்றப்பட்டது. திரு.அ. சபாரத்தினம் தலைவராகவும் திரு. சே.க. சண்முகம்பிள்ளை செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களும் உதவி ஆணையாளராக இருந்த சு.வி. மயில்வாகனம் அவர்களும் ஆட்சிக் குழுவில் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

1945ம் ஆண்டு **'கொழும்புத் தமிழச் சங்கம்'** என பெயரை மாற்றிக் கொள்கிறது.

வெள்ளவத்தையில் வாடகைக்குப் பெறப்பட்ட இல்லத்தில் சங்க அலுவலகம் இயங்கியது. வாரம்தோறும் கருத்தரங்குகள் நடைபெற்றன. படிப்பகம் இருந்தது. இந்தியாவிலும், இலங்கையிலும் வெளியாகும் சிறந்த தமிழ்ச் சஞ்சிகைகள் படிப்பகத்தில் இருந்தது. உணவு விடுதி நடாத்தி அதன் வருவாயைச் சங்கத்திற்கு உதவினர். வாடகை கொடுக்க இயலாமையினால் சங்க உறுப்பினர்களுக்குரிய இல்லங்கள் சில சங்க அலுவலகமாக தொழிற்பட்டன.

சாதாரண உறுப்புரிமை 5/-, ஆயுள் உறுப்புரிமை 25/-. ஆக, நால்வர் ஆயுள் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் என்.எம்.எம். மொஹிதீன், கு.பாலசிங்கம், நாகூர் மீராமுஹமட் ஹனிபா, தி. உருத்திரா ஆவர். சாதாரண உறுப்பினர்கள் 192.

பொதுக்கூட்டங்கள் சைவமங்கையர் கழகத்தில் நடைபெற்றன. ஆரம்ப காலத்தில் சங்க நிதிக்காக 'கண்ணகி', 'அரிச்சந்திரா', 'மங்கம்மா சபதம்' ஆகிய திரைப்படங்கள் படமாளிகைகளில் ஒழுங்கு செய்யப்பட்டன.

முதன் முதலாக 'கலித்தொகை மகாநாடு' சிறப்பாக நடைபெற்றது. தமிழறிஞர் ஈ.எல். தம்பிமுத்து எழுதிய 'திராவிடர் வரலாறு', சைமன் காசிச்செட்டி எழுதிய 'புளூராச்' ஆகியன சங்கம் வெளியிட்ட ஆரம்ப நூல்கள்.

தேசிய மொழிகளை அரசமொழிகளாக்கும்படி தேசியமொழி ஆணைக்குழுவுக்கு ஓர் சிறந்த அறிக்கையைச் சங்கம் அந் நாட்களிலேயே கையளித்தது வரலாறு. மேலும்,

1) சங்கத்துக்குச் சிறந்த யாப்பு ஒன்றை வகுத்தமை.

2) சங்கத்தைச் சங்கங்களுக்கான அரசியல் சட்டத்தின்படி பதிவு செய்தமை (1950)

3) சங்கத்துக்குச் சொந்தமாக 42 பேர்ச் நிலத்தை (கொழும்பு 06, 57ம் ஒழுங்கை, 7ம் இலக்கத்தில்) விலைக்குப் பெற்றமை (1950).

ஆகிய மூன்று பெரும்பணிகள் நிறைவேறின. க. மதியாபரணம் நிலத்தை வாங்க பெருமளவு நிதி உதவி புரிந்திருந்தார்.

பத்துப்பாட்டு மகாநாடு, எட்டுத்தொகை மகாநாடு, சிலப்பதிகார விழா, வள்ளுவர் விழா முதலான இலக்கிய விழாக்களும், சொற்பொழிவுகளும் பட்டிமன்றம் கவியரங்கு பெரியார்களது விழாக்களும் நடைபெற்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள அறிஞர்கள் இவைகளிற் பங்குபற்றினர். 'முருகு' என்னும் சிறந்த சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க நிலத்தில் 1957ம் ஆண்டு புதிய கட்டிடத்தை நிர்மாணிக்க, நிதிச்சீட்டுக்க ளை வழங்கியும், திரைப்படக் காட்சிகளை ஒழுங்கு செய்தும் நிதி சேர்த்தனர். மேலும் கலாசார அமைச்சிடம் சங்கப் பணிகளுக்கு நிதி உதவி பெறப்பட்டன.

சமுதாயப் பணிகளிலும் சங்கம் ஈடுபடத் தவறவில்லை. 1952 ஆண்டு வெள்ளத்தி னாலும் 1958ம் ஆண்டு கலவரத்தினாலும் பாதிப்புக்கள் ஏற்பட்டபோது சங்கம் நிவாரண உதவியினை வழங்கியது. இதற்கான பொது க்கூட்டத்தில் பீட்டர் கெனமன், எம்.எச். மொஹமட், கொல்வின் ஆர். டி. சில்வா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, ஏ.எம்.ஏ. அஸீஸ், சி. உருத்திரா ஆகியயோர் உரை யாற்றியிருக்கிறார்கள்.

சிறந்த சிங்கள எழுத்தாளர் பன்னிருவர் சிங்கள மொழியில் எழுதிய சிறுகதைக ளைத் தமிழில் மொழிபெயர்த்த 'சேது பந்தனம்' என்னும் நூலும் சங்க வெளியீ டாக வந்தது.

1975ம் ஆண்டு சங்க முன்பக்க நிலத்தில் புதிய கட்டிடத்தை அமைக்கும் மிகப்பெரும் பணியில் சங்கம் ஈடுபட்டது. சங்கத்தின் நிதிநிலை போதியதாக இருக்கவில்லை. சங்கத் தலைவர் மு. வயிரவப்பிள்ளையும் ஏனையோரும் நிதிசேர்த்து உதவினர். 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் திரைப் படக் காட்சியினாலும், அதிர்ஷ்டச் சீட்டு வகையிலும் நிதி சேகரிக்கப்பட்டது. ஆர்வலர் பலர் தாமாக நிதி சேர்த்து உதவினர். வெள்ளவத்தை நெசவு ஆலையில் கடமை யாற்றியவர்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக் கவர்கள். முதலிரு மாடிகளும் ஈராண்டில் நிறைவுற்றன. 1980ம் ஆண்டு மூன்றாவது மாடியும் நிறைவு பெற்றது. அப்பொழுது தலைவராக இருந்த கலாநிதி க.செ. நடராசா அவர்கள் பலரிடம் நிதி உதவி-பெற்று உதவினார்.

செய்யப்பட்டு, அதன் வட்டியாக வரும் பணம் பரிசில்கள் வழங்கப் பயன்படுத் தப்படுகின்றது. தற்பொழுது 15 நிரந்தரப் பரிசில் நிதியங்கள் உள்ளன.

சங்க நூலகம் வளர்ச்சி அடைந்து தனி யான மண்டபத்தில் அமைந்தது. சங்கத்தின் வேண்டுதலை ஏற்று முதலமைச்சர் எம்.ஜி. ஆர். ஒருலட்ச ரூபாவுக்குச் சிறந்த தமிழ் நூல்களை இந்நூலகத்துக்கு வழங்கினார்.

திருவாவடுதுறை ஆதீனமும், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சும் சிறந்த பல நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

'ஈழத்துப் பூதந்தேவனார்' என்ற பெயரில் அனைத்துலகத் தொடர்புள்ள தலைமை நிலையத்தை நிறுவச் சங்கம் முன்வந்தது. சங்கத் தலைவராக இருந்த திரு. து. தருமராசா தம்பதியின் பேருதவி யால் 30 ஏக்கர் நிலம் மாங்குளத் தில் கிடைத்தது. இங்கு நூலகம், புலவர் கல்லூரி, அச்சகம், தொழிற் பயிற்சி நிலையம், பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு, வதிவிடங்கள், பூங்கா, விளையாட்டரங்கு, விருந்தி னர் விடுதி, உணவகம் ஆகியன நிர்மாணிக்கும் எண்ணம் கிடப்பிலி ருக்கிறது, நாட்டில் நிலவும் அமை தியற்ற சூழ்நிலையால்.

இக்காலப்பகுதியில் கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், அகில இலங்கைத் தமிழ்மறை க்கழகம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், கொழு ம்பு சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை இசைக் கலை மன்றம், யாழ். முத்தமிழ் கழ கம் ஆகியவை இச்சங்க முயற் சிகளுக்கு ஆதரவு வழங்கின.

1957ல் தொடங்கப்பட்ட புதிய கட்டிட முயற்சிக்கு 1968ஆம் ஆண்டு அரசு வரிவிலக்கு அனு மதி வழங்கியது. 5.9.1970ம் நாள் கட்டிட கால்கோள் விழா நடந்தது. எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் முதலான பெரியார் கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.



தற்போதைய செயலாளர் பாலசிறிதரன்.



தற்போதைய தலைவர் சோ. தேவராஜா.

# வாழ்வும் வளமும்

முதற் தமிழ்ப் பல்கலைக்கழ கத்தை நிறுவித் தமிழுக்கும் தமிழுலகிற்கும் தமிழருக்கும் பெரும்பணி செய்த செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார் நூற்றாண்டு விழாவைக் கொழும்பு செட்டிநாட் கோப்ப ரேசன், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் உதவியோடு தமிழ்ச்சங்கம் தலைநகரில் சிறப்பாக நடத்தியது.

மேலும் கொழும்பில் ஆசிரியராகக் கட மையாற்றிய க. கந்தசுவாமி நூலகத்துக் குப் பொறுப்பாக இருந்த காலத்தில் நூலகம் வளர்ச்சி பெறத்தொடங்கியது.

பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்களின் முயற்சியினால் அரிய தமிழ் நூல்கள் வெளி யானது. பேரறிஞர் ஆர்னல்ட் எழுதிய 'பாவலர் சரித்திர தீபகம்' நூலை, கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளோடு வெளியிடும் முயற்சி தொட ங்கியது. திரு. த. கனகரத்தினம் அவர்கள்

1957ம் ஆண்டு தொடங்கப்பட்ட வேலை 1980ம் ஆண்டு நிறைவுபெறுகி றது. 1975ம் ஆண்டு 16 ரூபா வாக ஒரு பக்கற் சீமெந்து 1980ல் 60 ரூபாவாக இருந்தது.

இளவயதினருக்கான தமிழார்வத்தை வளர்க்க பல வகையான போட்டிகள் நடாத் தப்பட்டு பணமும், நூல்களும், சான்றிதழும் வழங்கப்பெற்றன. தமிழறிஞர்களின் நிரந்தர நிதி யங்கள் வங்கியில் வைப்புச்



ஊழியர் திரு. பண்டா

இங்கே முக்கியமான ஒரு கால கட்டத்தைக் குறிப்பிட வேண்டும். 1983ம் அண்டு ஆடிக்கலவரம் ஏற் படுத்திய பேரழிவிலும், சூழ்நிலை யிலும், அந்த அச்சுறுத்தல் கால கட்டத்திலும் அக்கட்டிடத்தில் அன் றைய கௌவர பொதுச் செயலா ளர் க.இ.க. கந்தசா்மி தங்கியிருந் தார். அங்கு நீண்ட நெடுங்கால மாக உதவிக்கு நின்ற தொழிலாளி திரு. பண்டாவும் கூடவே தங்கியி ருந்தார்.

யுத்தக் கெடுபிடியிலும் இன்னோரன்ன கெடுபிடிகளாலும் சிதறும் தமிழ்ச் சமூகத் தின் ஒரு பகுதி தலைநகரில் தஞ்சம் புகுந் துள்ளது. அதற்கு விழாக்கள் கருத்தரங்கு கள் மூலம் ஆறுதலளிக்கும் ஒரு இடமாக வும் இச் சங்கம் விளங்குகிறது.

இங்கேயும் குழப்பங்கள், கலாட்டாக்கள், போட்டிகள், பொறாமைகள் என்பன சங்க த்தை வளையவருகின்றபோதி லும், தலைநகரில் தலைநிமிர் ந்து நிற்கின்றது கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

வருக பொற்காலம். வாழ்க மனிதம். வளர்க தமிழ்.
உயர்க உலகு.

- ஜீ. சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினிமாவைப் படியுங்கள்!

1. தமிழ் சினிமா விபச்சாரத்தை வளர்த்து சீரழிக்கிறது சமுதாயத்தை.
2. மனிதனுடைய சிந்தனையை தவறான வழிக்கு திருப்புவதே தமிழ் சினிமாதான். தன்னம்பிக்கை அற்றவனாக, நடத்தையில் தரங்குறைந்தவனாக, சகோதர பாசத்தைக் கேள்வி எழுப்புவனாக அவனை வளர்க்கின்றது.
3. தமிழ் சினிமா என்பது திரையில் தோன்றி மறையும் கற்பனை, அது ஒரு மாயை. அதில் வருவதெல்லாம் பொய். சினிமாவினால் நன்மை ஏதுமில்லை.
4. ஆயிரக்கணக்கான குழந்தைகளின் அறிவுக்கண் குருடானதற்குக் காரணம் தமிழ் சினிமாதான்.
5. சினிமாக் கலை சமுதாயத்தை சீரழிக்கும் சிலந்திவலை.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் மேற்கோள்கள், பின்னாங்கு பயனீட்டாளர்கள் சங்கம் வெளியிட்டிருக்கும் 'தமிழ் சினிமா' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

மேற்கோள்களிலிருந்து அந்தப் புத்தகம் தமிழ்சினிமா குறித்து எவ்வகையான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது என்பதை யாரும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

சமூகத்தின் பல தவறான கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் அநியாயங்களுக்கும் முக்கியமான காரணமாக சினிமாவை, குறிப்பாக தமிழ் சினிமாவை பார்ப்பது இந்நூலின் அடிப்படை கருத்தாகும்.

இப்புத்தகம் சினிமாவோடு சம்பந்தமுடைய பல பிரச்சினைகளைப் பற்றி பேசுகின்றது. சமூகத்தில் சினிமா நட்சத்திரங்களுக்கென இருக்கும் மதிப்பு, முக்கியமாக குழந்தைகள் மீதும், இளைஞர்கள் மீதும் சினிமா ஏற்படுத்தும் பாதிப்பு, சினிமாவின் மூலமாக சமூகத்தில் பரப்பப்படும் வன்முறை, சமூகத்தின் நல்ல மதிப்பீடுகள் சினிமாவினால் பாதிப்புக்குள்ளாகி அதன் புனிதத்துவம் இழந்து போவது, சினிமா எனும் சாதனத்தின் மூலம் சுயநலம் கொண்டோர் செய்யும் ஏமாற்றுகள், ரசிகர் மன்றங்கள், இன்றைய தமிழ் சினிமாவின் நிலை போன்றவைகள் குறித்து காரசாரமான கருத்துக்களை உரத்துக் கூறியிருக்கின்றது.



இந்த அக்கறை வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், தமிழ் சினிமாவைக் குறித்து அவர்களுடைய அணுகுமுறை அறவியல் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்தப்புத்தகம் (தமிழ்) சினிமாவை சமகால கலாசார, அரசியல், பொருளாதார நிறுவனங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு வெளியிடப்படும் படைப்புக்களின் ஓர் அங்கமாக பார்க்காமல் தனித்துப் பார்க்கின்றது.

சினிமா எனும் சாதனம் சமூகத்தில் இயங்குவது முழுக்க அதன் சுயவிருப்பம் சார்ந்த விஷயமல்ல. சினிமாவை பிற நிறுவனங்களோடு வைத்து நோக்கும்போதுதான் சரியான ஒரு முடிவுக்கு வரமுடியும்.

உதாரணமாக, சினிமா வன்முறையை பரப்புகின்றது என்பதை ஒரு வாதமாக கொள்வோமெனில் சினிமாவில் வரும் வன்முறைக் காட்சிகளை ஒழித்துவிட்டால் மக்களிடையே வன்முறை இல்லாது போய் விடும் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை.

சமூகக் கட்டமைப்பிலுள்ள வன்முறை (structural violence)யை சினிமா என்னும் சாதனம் எந்த அளவுக்கு நியாயப்படுத்துகின்றது என்பதைப் புரிந்துகொண்டு அந்த வன்முறையைப் போக்குவதே சரியான செயலாக இருக்குமன்றி, சினிமாவில் வரும் வன்முறைக் காட்சிகளை ஒழித்துவிடுவதால் மட்டும் வன்முறை ஒழிந்துவிடாது.

தொடர்புசாதனப் படைப்புகளில் சினிமாவோ அல்லது ஒரு வாரப் பத்திரிகையோ அல்லது ஒரு தொலைக்காட்சித் தொடரோ எதுவாக இருந்தாலும் அது ஒரு குறிப்பிட்ட சிலரால், குறிப்பிட்ட காரணங்களுக்காக உருவாக்கி வெளியிடப்படுவதாகும். இவ்வாறு வெளியிடப்படும் படைப்புகள் சமூகத்தில் என்ன மாதிரியான நோக்கங்களையும் செயல்பாடுகளையும் கொண்டு இயங்குகின்றன என்பதைப் புரிந்துகொள்வதே தொடர்புசாதனம் குறித்து நாம் செய்யவேண்டிய முதல் காரியமாகும்.

தமிழ் சினிமா குறித்து எல்லா வகையிலும் மாயைகள் உருவாக்கப்பட்டு, அவைகள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுவரும் நிலையில் மக்களைக் குறைகூறி எந்தப் பயனுமில்லை. சினிமா என்றால் என்ன என்பதை எடுத்துக் கூறாத நிலையில் விமர்சனப் பார்வை ஏதுமின்றி சினிமாவை நிஜம் என்று நம்பும் ஒரு மக்கள் கூட்டமே இங்கு உருவாகும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

சினிமாவைப் பற்றி சரியான முறையில் அணுகக்கூடிய கட்டுரைகள், புத்தகங்கள், வெளியிடப்பட வேண்டும். படங்கள் உருவாக்கப்பட வேண்டும். சுருக்கமாக சினிமாக் கல்வி எல்லா மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

'தமிழ் சினிமா' சொல்வதுபோல சினிமாவை ஒழிக்க முடியாதுதான். ஆனால் சினிமாப் பைத்தியங்களை உருவாக்காமல் இருக்க முடியும். இதற்கு முக்கியமான தேவையாக இருப்பது தமிழ் சினிமா குறித்தான சரியான அணுகுமுறையும், அதன் அடிப்படையிலமைந்த திரைப்படக் கல்வியும்தான்.

*- நன்றி: ஊடகம், ஜனவரி 94.*

''கண்ணோடு காண்பதெல்லாம்'' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் ருசிதா பிரசாத். அந்தப் படத்தின் தோல்வியோடு தமிழ் ரசிகர்களின் கண்களில் காணாமலே போனார்.
தமிழில் வாய்ப்பில்லாதவர்களுக்கு கை கொடுக்கும் தெலுங்கு தேசம் ருசிதாவையும் வரவேற்றது. அங்கு நடித்த ஒரு சில படங்கள் வெற்றியடைய தெலுங்கின் பிரபல ஹீரோயினாகிவிட்டார் ருசிதா. சில படங்கள் தமிழிலும் 'டப்'பாகிக் கொண்டிருக்கின்றன. எல்லாம் சரிவந்தால் மீண்டும் தமிழில் இவர் கலக்கக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆண்டாள் அழகர்

'நரசிம்மா' படத்தில் வில்ல னாக நடித்துக் கொண்டிரு ந்த மன்சூரலிகான் நிஜவாழ் க்கையிலும் வில்லனாக நடந்துகொண்டு இப்போது சிறையில் இருப்பது தெரிந் ததே! இதனால் 'நரசிம்மா' படத்தில் அவர் நடித்த காட் சிகளை திரும்பவும் ராதா ரவியை வைத்து எடுத்துவரு கிறார்கள். எனவே முன்னாள் நடிகர் சங்கத்தலைவரும் இந்நாள் நடிகர்சங்கத் தலை வரும் இணைந்து நடிக்கும் படமாக வளர்ந்து வருகிறது 'நரசிம்மா'.

ஹீரோ 'விஜயகாந்த்' தான் நடிகர்களில் வருட சம்பளம் அதிகம் பெறுபவராக இருக் கிறார். ஒரு வருடத்தில் இர ண்டு படங்கள் கண்டிப்பாக நடித்துவிடுகிறார். மேலும் வருமானத்திற்கு வழிசெய் யும் விதமாக இஞ்சினியரிங் கல்லூரி ஒன்றும் கல்யாண மண்டபம் ஒன்றும் கட்டி வரு கிறார். இரண்டுக்கும் பெயர் 'ஆண்டாள் அழகர்'.

## வைர மோதிர இசையமைப்பாளர்

'லவ்டுடே' படத்தில் 'ஏன் பெண்ணென்று பிறந் தாய்' பாடல் எல்லோருக்கும் நினைவிருக்கும். அதைப் பாடிய அஸ்லம் முஸ்தபா இசையமைப் பாளராகிறார். 'காதல்தேசம்' படத்தில் இவர் பாடி யபோது ''இசையமைப்பாளராக எல்லாத் தகுதி யும் உனக்கு இருக்கிறது. முயற்சி செய்'' என்று சொல்லியிருக்கிறார் அதன் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான். இப்போது மு.களஞ்சியத்தின் 'மிட்டா மிராசு' படத்திற்கு இசையமைப்பாளராகி யிருக்கிறார் அஸ்லம் முஸ்தபா. அப்படத்திற்கென பதிவு செய்த எல்லாப் பாடல்களையும் போட்டுக் காட்டியபோது, பாராட்டி வைர மோதிரமொன்றை பரிசளித்திருக்கிறார் ஏ.ஆர்.ரகுமான்.



## கிச்சு கிச்சு பண்ணடா!



இரட்டை வேடங்களில் நடிக்கும் அள வுக்கு முன்னேறியிருக்கிறார் மும் தாஜ். படம் 'சாக்லெட்'. இந்தப் படத் தின் தயாரிப்பு நிர்வாகியை வீட்டுக்கு அனுப்பும் அளவுக்கு செல்வாக்கு மிகுந்தவராகி வருகிறார் மும்தாஜ். ஆரம்பத்தில் 'அட்ஜஸ்ட்' பண்ணக் கூடியவர் என்று பேர் வாங்கி பல வாய்ப்புக்களையும் பெற்றவர் இப் போது பிசியான பிறகு அட்டகாசம் பண்ணுகிறாராம்.

மும்பைப் பட வாய்ப்புகளும் அவ ரைத் தேடிவருவதால் இப்போதெல் லாம் ஹீரோயினைவிட பந்தா பண் ணுகிறாராம். சம்பளத்தையும் வெகு வாக உயர்த்தி விட்டார். இருந்தும் கோடம்பாக்கத்துக்காரர்கள் மும்தாஜை கழற்றிவிடத் தயாராயில்லை. காரணம் அவர் துணிகளைக் கழற்றுவதற்கு தயாராக இருப்பதால்!

'மிட்டா மிராசு' படத்தில் பிரபுக்கு ஜோடி தானில்லை என்று தெரிந்ததும் நடிக்க வராமல் தண்ணி காட்டியி ருக்கிறார். பின்னர் தயாரிப்பாளர், நடிகர் சங்கத்திற் கெல்லாம் சென்று மிரட்டிய பிறகே படத்தை முடித்துக் கொடுத்திருக்கிறாராம்.

இல்லாவிட்டால் 'கிச்சுகிச்சு பண்ணடா கீழே என்னைத் தள்ளடா கட்டில் யுத்தத்திலே என்னை நீ வெல்லடா' என்று வைரமுத்து எழுதியிருக்கும் வைர வரிகளுக் கான அற்புத நடனத்தை காணும் பாக்கியம் நமக் குக் கிடைக்காமலே போயிருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிய எம்.ஜி.ஆர்.

பாக்கியராஜ், சத்தியராஜ், ராமராஜன் போன்ற பலர் எம்.ஜி.ஆர் போல நடிக்க முற்பட்டாலும் நிஜத்தில் எம்.ஜி.ஆர் போலவே நடந்து கொள்கிறவர் அஜீத்குமார் தானாம். தன் படத்தில் பணியாற்றும் சக தொழிலாளர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் உடனே வாரி வழங்குகிறார். தன்னை வைத்து படமெடுத்து தோல்வியடைந்த தயாரிப்பாளர்களுக்கு மீண்டும் ஒரு படம் பண்ணித்தந்து அவர்களை கைதூக்கி விடுகிறார். அவர் படங்களை இயக்கும் புதுமுக இயக்குனர்களுக்கு படத்தின் நூறாவது நாளன்று ஒரு கார் வாங்கி பரிசளிக்கிறார். சமீபத்தில் இருதய சிகிச்சை செய்து கொண்ட ஒரு பத்திரிகையாளருக்கு அதற்கான செலவு இரண்டரை இலட்சத்தையும் அஜீத்தே கொடுத்திருக்கிறார். அதற்கு அவர் விதித்த நிபந்தனை, இதை யாரிடமும் வெளியே சொல்லக்கூடாது என்பதுதான்.



'கோக்' விளம்பரத்திற்காக இரண்டு நாள் கால்ஷீட்டுக்கு அவருக்கு ஐம்பது இலட்சம் தருவதாக கேட்டிருக்கிறார்கள். அதை மறுத்து விட்ட அஜீத் அதற்கு கூறிய விளக்கம் ''என் புகழைக் கொண்டு ஒரு பொருளை என் ரசிகர்கள் மேல் திணிக்க மாட்டேன்''.

சி
னி
மா

## அவந்திகா



இந்த அவந்திகாவை தமிழுக்கு தந்திருப்பவர் மனீஷா கொய்ராலா. மனீஷாவின் சொந்தக்காரப் பெண்ணான இவர் இயற்பெயர் ஜெயாரே. சென்ற வருடத்தின் மிஸ் கோவாவும் இவர்தான். ஏற்கனவே லிசாரே என்ற பெயரில் நடிகை இருப்பதால் இவர் பெயரை 'அவந்திகா' என்று மாற்றியிருக்கிறார் 'சாக்லெட்' படத்தின் இயக்குநர் ஏ.வெங்கடேஷ். இவர் 'மகாபிரபு', 'செல்வா', 'பூப் பறிக்க வருகிறோம்', 'நிலாவே வா' படங்களை இயக்கியவர்.



பிரசாந்துக்கு ஜோடியாக புதுமுகம் ஒன்றைத் தேடிய போது கிடைத்தவர்தான் 'அவந்திகா'. இவர்களோடு மும்தாஜ், சுஹாசினி, லிவிங்ஸ்டன், நாகேந்திரபிரசாத், சார்லி, தாமு, வெண்ணிற ஆடை மூர்த்தி, சாப்ளின் பாபு போன்ற பலர் நடிக்கிறார்கள். தமிழ் படங்களின் இன்றைய ஸ்டைல் வெளிநாடுகளில் பாடல் காட்சிகளை எடுப்பது. இவர்கள் புதுமையாக ஒஸ்ட்ரியா, பெல்ஜியம், ரஷ்யா, லண்டன் என்று ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு நாட்டில் எடுத்திருக்கிறார்கள். இசை தேவா, பாடல்கள் வாலி, மற்றும் ஒரு புதுமை ஏ.ஆர்.ரகுமானின் தங்கை ரெஹனா முதன்முறையாக இந்தப் படத்தில் பாடுகிறார். ஒளிப்பதிவு விஜய் மில்டன், வசனம் பட்டுக்கோட்டை பிரபாகர். படம் இம்மாதம் வெளிவருகிறது.

கமல்ஹாசனின் ஆஸ்தான நடன இயக்குனரான ரகுராம் மாஸ்டரின் மூத்த பெண் சுஜாதா மலையாள படங்களிலும் 'கிருஸ்ணதாஸி' போன்ற சின்னத்திரை தொடர்களிலும் நடித்து வருவது தெரிந்ததே. இப்போது இரண்டாவது பெண்ணான காயத்ரியும் தெலுங்கில் சில படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார். கலைப்புலி தாணு, தான் தயாரிக்க இருக்கும் அடுத்த படத்தில் இவரை (தமிழில்) ஹீரோயினாக்குகிறார்.

'மோனிஷா என் மோனலிசா' படத்தில் முற்றிலும் புதுமுகங்களை நடிக்க வைத்து தோல்வியடைந்தார் டி.ராஜேந்தர். அதற்குப் பதிலடியாக தனது 'சொன்னால்தான் காதலா'வில் பழைய முகங்களாக நடிகப் பட்டாளத்தையே இறக்கியிருக்கிறார். முரளி, ரோஜா, மும்தாஜ், குஷ்பு, கரண், லிவிங்ஸ்டன், மணிவண்ணன், வடிவேல், ராஜஸ்ரீ, ராஜீவ், வெண்ணிற ஆடை மூர்த்தி, அனுமோகன், சார்லி, வையாபுரி, கசன்கான், பாண்டு, நம்பியார், வீ.கே. ஆர், சிலம்பரசன்... என்று நீள்கிறது பட்டியல்.



### அதிஷ்டக்காரி!

தமிழில் இவர் நடித்த முதல் படமான 'பத்ரி' வெளியாவதற்கு முன்பே பல படங்களில் ஒப்பந்தமாகி விட்டவர் பூமிகா. இப்போது சொல்லாமலே புகழ் சசியின் 'ரோஜா கூட்டம்' படத்திற்கு ஒப்பந்தமாகியிருக்கிறது இந்த மும்பை வரவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரதி படத்தில் 'நிப்பதுவே நடப்பது வே' பாடலைப் பாடி மிகப்பெரிய அளவில் பிரபலமானவர் ஹரீஷ் ராக வேந்தர் தமிழில் பாடுவதற்கு முன்ன ரே 'பஞ்சரம்' என்ற தெலுங்குப்படத் தில் ராஜ்கோட்டியின் இசையில் அறி முகமாகிவிட்டார். தமிழில் முதலில் பாடியது 'அரசியல்' படத்தில் வித்யா சாகர் இசையில் 'வாசுகி வள்ளுவன் வாசுகி'. புகைப்படக் கலைஞர் ஹரீ ஷின் மகனான ராகவேந்தர் பாடியி ருக்கும் வேறு சில பாடல்கள் அழகிய தீயே (மின்னலே), திருடிய இதயத்தை (பார்வை ஒன்றே போதுமே), என் நெஞ்சில் மிங்கினாலே (தீனா)....

அர்ஜுனுடன் வானவில் படத்தில் அறிமு கமான அபிராமி சரத்குமாருடன் இணை ந்திருக்கும் படம் தோஸ்த் (நண்பன்). இயக்கம் எஸ்.ஏ.சந்திரசேகர். தன் வழக் கப்படி இப்படத்திலும் சட்டத்தையே கை யிலெடுத்துக் கொண்டிருக்கிறாராம். சரத் குமாரின், பாதி வில்லத்தனம் கொண்ட தோஸ்த்தாக ரகுவரனும், முழு வில்லத் தனம் கொண்ட தோஸ்த்தாக பிரகாஷ் ராஜும் நடிக்கிறார்கள். நகைச்சுவைக்கு விவேக் இருக்கிறார். வாலியின் பாடல்க ளுக்கு இசையமைக்கிறார் தேவா. சரத் குமாரை துரத்தி துரத்தி காதலிக்கும் மேடைப் பாடகியாக அபிராமி.

அபிராமியின் வருத்தம் ஒன்று உண்டு. தனக்கு அடுத்தடுத்து சரத்குமார், பிரபு போன்ற வயதானவர்கள்தான் ஹீரோ வாக கிடைக்கிறார்கள். அஜீத், விஜய், பிரசாந்த் போன்ற இளசுகளுடன் சேர்ந்து நடிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை என் பதுதான் அது. அப்படி அவர்களுடன் நடி க்க சான்ஸ் கிடைத்தால் தன் சம்பளத் தைக்கூட குறைத்துக் கொள்ள தயாராம்! கமலின் 'குணா' படத்தைப் பார்த்து பெயர் வைத்துக் கொண்ட அபிராமி.




சிம்ரன் கதாநாயகியாக நடித்த 'வாலி' படத்தில் ஒரு சின்ன வேடத்தில் வந்தார் ஜோதிகா. இப் போது கமெராமேன் ஜீவா இயக்கும் '12B' படத் தில் சிம்ரனோடு சரிக்குச் சமமான கதாநாயகியாக நடிக்கிறார்.

தமிழில் நக்மா இருந்த இடத்தைப் பிடித்தார் சிம்ரன். அதற்குப் பதிலடியாக நக்மா தன் தங்கை ஜோதிகாவை களத்தில் இறக்கினார். பின்னர் சிம் ரன் தன் தங்கை மோனலை நடிக்க வைத்தார். ஆனால் இந்த மோனல், நடிக்க வந்து உடனேயே காணாமல் போன நக்மாவின் இரண்டாவது தங் கை ரோஷினி போலத்தானாம்.
ஜோதிகா போல சிம்ரனுக்கும் மூன்றாவது தங்கை ஒருவர் உண்டாம். அவர்தான் சிம்ரன் அடுத்து இறக்க இருக்கும் துருப்புச் சீட்டு என்கிறார்கள். ஆச்சரியமான ஒற்றுமை... அவரது பெயர் ஜோதி.

## எல்லாம் காலம்!

'புதிய சாட்சி' படத்தில் ஹீரோயினாக அறிமுகமானவர் அல்போன்சா. அந்தப் படம் இதுவரை வெளிவராததால் நடனமாடுவதற்கு தாவினார். சுமார் 25 படங்களில் ஆடி அசத்தி விட்டார். ஆடுவதில் சலிப்பேற்பட்டு போன அல் ஃபோன்சா ஆந்திராவிற்குள் நுழைந்தார். கைவிடப்பட்ட தமிழ் நடிகைகளுக்கு வாழ் வளிக்கும் தெலுங்குப் படவு லகம் அவரை ஹீரோயினாக வரவேற்றது. 'லவ்வர்ஸ் டே' என்ற ஒரு படம் வெளியாகி வெற்றியும் பெற்றுவிட்டது. எனவே அது தமழுக்கும் 'டப்' செய் யப்படுகின்றது. இப்போது தமிழுக்கும் ஹீரோயினாகிறார் அல்போன்சா. இது தான் காலம் என்பது.



## தோஸ்த்



சின்னத்திரையில் பாலுமகேந்திராவின் 'கதை நேரம்' மற்றும் 'பாரதி', 'நிலாகாலம்', 'லிட்டில் ஜான்' (சேர னின் 'பாண்டவர் பூமி' தயாரிப்பில்) போன்ற தரமான படங்களைத் தயாரித்த 'மீடியா ட்ரீம்ஸ்' நிறுவனத்தினர் கமல்ஹாசன் நடிக்க தயாரிக்கும் படம் 'பம்மல் K சம்பந்தம்'. நாடகத்துறையின் முன்னோடிகளில் ஒருவரான அவ்வை சண்முகம் பெயரில் நடித்த கமலஹாசன் இப்போது மற்றுமொரு நாடகத்துறை முன்னோடியான பம்மல் K சம்பந்த முதலியார் பெயரிலும் நடிக்கிறார். அவ்வை சண்முகியில் நடன இயக்குனராக நடித்த கமல் இதில் சினிமா சண்டைப் பயிற்சியாளர் வேட த்தில் வருகிறார். படத்திற்கு உண்மையான சண்டைப் பயிற் சியாளர் விக்ரம் தர்மா. கமலுக்கு ஜோடியாக சிம்ரன் மற்றும் அப்பாஸ் தேவயாணி ஆகியோர் நடிக்கிறார் கள். மௌலி இயக்குகிறார். வசனம் கிரேஸி மோகன்.





ஷங்கர் இயக்கத்தில் கமல் நடிக்கும் 'ரோபோ' என்ற படத்தையே எடுக்கத் திட்டமிட்டிருந்தார்கள் 'மீடியா ட்ரீம்ஸ்' நிறுவனத்தினர். ஆனால் ஷங்கர் இயக்கிவரும் ஹிந்திப்படமான 'நாயக்' (முதல் வன்) இன்னும் முடிவடையாததால் அதற்கிடையில் கமலை வைத்து இந்தப் படம் தயாராகிறது. ஆளவந்தானுக்கு முன்பே கமலின் இந்தப்படம் வெளியாகி விடும் என்கிறார்கள்.

சி னி மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சமூகத்திற்கு காலம் தந்த வரவும் செலவும்



## சிவரமணி நினைவாக...

சிவரமணி தனது இருபத்தி மூன்றாவது வயதில் 19. 05. 1991 அன்று தற்கொலை செய்து கொண்டார். அவர் இறக்கும் போது யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பிரிவு இறுதி ஆண்டு மாணவியாக இருந்தார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட சிவரமணி பெற்றோர் இருவரையும் ஆசிரியர்களாகக் கொண்டி ருந்ததினாலும், தந்தையார் பின்பற்றிவந்த இடதுசாரி அரசியலாலும் மிகவும் இள மையிலேயே சமூக உணர்வு மிக்கவராகவும் கவித்துவம் மிக்கவராகவும் வளரும் சூழ்நிலை வாய்த்திருந்தது.

அன்றைய காலகட்டத்தில் தேசிய ஒடுக்குமுறைக் கெதிராக கிளர்ந்தெழுந்த ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களில் சிவரமணியும் ஒருவரானார். ஆனால் அவரது பல்கலைக் கழகப் பிரவேசமும் முற்போக்கு அறிவுஜீவிகளின் தொடர்பும் அவரது தேசிய வாதக் கண்ணோட்டத்தை முற்போக்கான பாதையில் பயணிக்க வைத்தது.

அதன் விளைவாக பிற்போக்கு தமிழ்த் தேசிய வெறியைத் தமது முன்னைய தமிழ் தலைமைகளிடமிருந்து பிதுரார்ஜிதமாகப் பெற்றுத் தொடர்ந்ததுமல்லாமல் அதை ஆயுதபலாத்காரத்தின் மூலம் தமிழ்ச் சமூகம்மீது திணிக்க முற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் பாசிஸவாதப் போக்கையும் சிவரமணி தீவிரமாக எதிர்த்தார்.

அரசியல் அரங்கு ஒருபுற மிருக்க தமிழ் சமூகத்தின் பிரபுத்துவவாத அவமான எச்சசொச்சங்களான, பெண் ணடிமைத்தனத்தையும், சாதி உணர்வுகளையும் வக்கற்ற கலாசார முறைமைகளையும் எதிர்த்துப் போராடுவதிலும் அவர் சளையாது ஈடுபட்டார்.

அந்த வகையில் யாழ் பல்கலைக்கழக பெண்கள் சங்கம், பெண்கள் ஆய்வு வட்டம், ஏழை அனாதைப் பெண்களுக்கென உடுவிலில் இயங்கிய 'பூரணி இல்லம்' என்பனவற்றில் சிவரமணிக்கு இருந்த தீவிரமான ஈடுபாடு சிவரமணியின் களச் செயற் பாடுகளுக்கு உதாரணமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உருவாகிய கலாசாரக் குழுவிலும் சிவரமணி முக்கிய பங்காற்றினார். அக்குழுவில் இருந்த பல்வேறு விடுதலை இயக்கங்களின் பிரதிநிதித்து வத்தை அழித்து அதை புலிகளின் பிரச்சார அமைப் பாக மாற்ற நாடக நெறி யாளர் க. சிதம்பரநாதன் குழுவினர் எடுத்த முயற்சிகளை முறியடிப்பதில் சிவரஞ்சித், யோகன், மோகன், புதுசு அ. ரவி, தில்லை, செல்வி குழுவினருடன் சிவரமணியும் முக்கிய பங்கு வகித்தார்.

ஆனால் 1987ல் இந்திய - புலிகள் யுத்தம் மூண்ட பின்னரும், 1990ல் புலிகளின் ஏகபோகம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னரும் தமிழ் சமூகத்தில் ஏற்பட்ட பன்முக ஜனநாயக வீழ்ச்சி சிவரமணியின் சிந்தனையிலும் பாரிய தாக்கத்தை செலுத்தியது. இதுவே அவரது ஆரம்பகால கவிதைகளில் இருந்த உற்சாகத் தன்மையை பிற்காலக் கவிதைகளில் காணமுடியாமல் போனமைக்கு காரணமாகும்.

அரசியலில் ஏற்பட்ட எதேச்சாதிகாரப் போக்கு, கலாசார அரங்கில் அதனால் ஏற்படுத்தப்பட்ட ஒற்றைவாத மலட்டுப் போக்கு, சமூக சூழலில் ஏற்பட்ட பிற்போக்கு பெண்ணடிமைத் தனத்தின் அழுத்தம் எல்லாமுமாகச் சேர்ந்து சிவரமணியை தற்கொலைக்கு இட்டுச் சென்றது. தற்கொலையை எந்தக் கோணத்திலும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனினும் எம்மைப் பொறுத்தவரையில் சிவரமணி யின் மரணம் - தமிழ் சமூகமும் அது உருவாக்கிய அரசியலும் ஏற்படுத்திய ஒரு கொலையாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இக்கருத்து உண்மை என்பதை அவரது மரணம் நிகழ்ந்த சில மாதங்களில் அவரது போராட்டத் தோழியும் சக மாணவியுமான செல்வியும், போராட்டத் தோழனும் அன்புக் காதலனு மான தில்லைநாதனும் புலிகளால் பிடித்துச் செல்லப் பட்டு சித்திரவதையின் பின் கொல்லப்பட்ட சம்பவங்கள் சான்று பகர்கின்றன.

அவர் இறந்தபின் வெளியிடப் பட்ட அவரது 'சிவரமணி கவிதைகள்' என்ற தொகுதி முன்னுரையில் சித்திரலேகா மௌனகுரு கூறுவது போல, ''அவரது தற்கொலை எழுப்புகிற வினாக்களும் உணர்த்துகிற செய்திகளும் எமது ஆழ்ந்த அக்கறைக்கு உரியவை. தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய் இவை எம்முன் பிண்டப்பிரமாணமாய் உள்ளன...''

*- தில்லானா*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற




இதயம் அதிகமாக இரத்தத்தை வெளியேற்றும்போதும் அல்லது புறத்தமனிகள் அதிகமான அளவிற்கு சுருங்கிவிடுவதாலும் உயர் இரத்த அழுத்தம் உண்டாகிறது.

இதனை பாதரசம் உள்ள ஒரு சாதனம் மூலம் அளவிடலாம். சாதாரணமாக 120/80mm Hg சரியான அழுத்த அளவு.

வயதான ஒருவரின் தமனிகளின் சுவர்கள் தடிப்பாகி, முன் போல விரியும் தன்மை குறைவுற்று இருக்கும். எனவே வயோதிபர்களின் இரத்த அழுத்த அளவு அதிகமிருக்கலாம். எழுபது வயதுக்காரருக்கு 170/90 என்பது சரியான ஆரோக்கியமான அளவு எனலாம்.

ஆனால் இருபது வயது இளைஞனுக்கு இந்த அளவு இரத்தஅழுத்த நோயைக் குறிக்கும். 170 எனும் எண் இதயம் சுருங்கும்போதுள்ள அழுத்த அளவை (Systole) குறிப்பிடுகிறது. பொதுவாக வயதுடன் 100 ஐ கூட்டிக்கொள்வதும் அல்லது 150 வரையிலும் சிஸ்டோலின் உயர் அளவு என்றும், அதில் 2/3 பங்கு அல்லது 92ஐ டயஸ்டோலின் உயர் அளவு எனவும் கொள்ளலாம்.

**காரணங்கள்:**

**சிறுநீரகக் கோளாறுகள்**

சிறுநீரகங்களில் ஏற்படும் நாள் பட்ட கோளாறுகள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். சிறுநீர், இரத்தம் ஆகியவற்றைச் சோதனை செய்வதன் மூலமும், வேறு சில சோதனைகள் மூலமும் இதனை அறியலாம்.

**மகாதமனியில் சுருக்கம்**

பிறவியிலேயே உண்டாகும் மகாதமனி சுருக்கத்தின் காரணமாக இரத்த அழுத்தம் அதிகமாகலாம். இவர்களுக்கு இடுப்புக்கு மேற்புறம் அதிக இரத்த ஓட்டமும் கீழ்ப்புறம் குறைவான ஓட்டமும் காணப்படும். அதாவது இரத்த அழுத்த அளவைக் கைகளில் சோதித்தால் அளவு அதிகமாகவும், கால், தொடை பாகத்தில் சோதனையிட்டால் குறைவாகவும் இருக்கும்.

**நாளமில்லாச் சுரப்பிகளின் கோளாறுகள்**

அட்ரீனல் சுரப்பி மீது ஏற்படும் கட்டிகள், கார்டிகோஸ்டிராய்டுகள் அதிகம் சுரப்பது, தைராய்ட் சுரப்பியின் தீவிரச்செயல்பாடு, கருத்தடை மருந்துகளாகப் பயன்படும் ஈஸ்ட்ரோஜன் போன்றவை உயர் அழுத்தத்தை உண்டாக்கும்.

**பிறவகை:**

உறுப்புகளில் கோளாறு ஏதுமின்றி அகக் காரணிகளின்றித் தோன்றும் உயர் இரத்த அழுத்தம் ஒருவகையாகும். இதனை Essential Hypertension எனக் குறிப்பிடுவர். இது மன உளைச்சல், கவலை, வேலைப் பளு, ஆளுமை என பல காரணிகளால் தோன்றுவது.

**குறைந்த இரத்த அழுத்தம்**

இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், உடற்பயிற்சியாளர்கள் போன்றோருக்கு இரத்த அழுத்த அளவு குறைவாக இருக்கும். இது ஒரு வியாதியல்ல. பெரியவர்களும் தங்களுக்குக் குறைவான இரத்த அழுத்தம் எனக் கூறிக்கொண்டு கவலை அடைகின்றனர். இதனால் நன்மையே தவிர தீமையில்லை என்பதை உணர வேண்டும்.

**மருந்துகள்:**

இரத்த அழுத்தத்திற்கு பல வகையான மருந்துகள் உள்ளன. நோயின் தன்மையைப் பொறுத்து இதனை மருத்துவ ஆலோசனையின்படி உட்கொள்ள வேண்டும். ஓரளவு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள் (Moderate Hypertensives) மருந்துகள் இல்லாமல் சரிசெய்து கொள்ள முடியும்.

**எடை குறைப்பு**

பெரும்பாலும் குண்டாக, உடற்பருமனாக உள்ளவர்கள் இரத்தக் கொதிப்பு நோய்க்கு ஆளாகின்றனர். அதிக உடல்பருமன் காரணமாக வென்ட்ரிக்கிள்களின் பணிச்சுமை அதிகமாகிறது. 1 கிலோ எடையைக் குறைத்தால் சுமார் 3 மி.மீ அளவு இரத்த அழுத்த அளவு குறைகிறது.

**உப்பைக் குறையுங்கள்**

அதிக உப்பை உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். உட்கொள்ளும் உப்பின் அளவைப் பாதியாகக் குறைப்பதன் மூலம் 7.1 மி.மீ அளவு இரத்த அழுத்த அளவு குறைந்துள்ளது.

**கல்சியம் தேவை**

போதுமான கல்சியம் இல்லாமையால் இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். உறுப்புகள் காரணமான இரத்த அழுத்த நோயில் கல்சியம் தேவை பற்றி முடிவான கருத்து இல்லை. ஆனால் (Essential Hyperternsion) அவயம் சாரா இரத்த அழுத்தத்திற்கு கல்சியம் பயனளிப்பதாகக் கூறுகிறார்கள். கருவுற்ற தாய், குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோருக்கு எலும்பு உறுதிபடவும் கல்சியம் தேவையாகும்.

**சைவ உணவு**

இறைச்சி, முட்டையின் மஞ்சள் பகுதி ஆகியவற்றை தவிர்ப்பது நல்லது. சைவ உணவு ஏற்புடையது. காய்கறிகள், பழவகைகள், கீரைகள் நன்மை தரும். மீன் - சிலவகை கடல் மீன்கள் இதயத்திற்கு நல்லது. கொழுப்பு வகைகளை, உறையும் எண்ணெய் வகைகளை விட்டு விடுங்கள்.

**புகை ஒரு பகை**

புகைபிடிப்பதால் இரத்த அழுத்தம் அதிகரிக்காவிட்டாலும், இதயத் தசையிலும், நுரையீரலிலும், பலவகையான தீங்குகளைச் செய்கிறது. தமனிகளின் சுவர்கள் தடிப்பாகி விடுகின்றன. மூளையில் உள்ள இரத்தக்குழாய்களில் இரத்தக்கசிவையும் உண்டாக்கும். மறதி, கை, கால் நடுக்கம், உறக்கமின்மை தோன்ற வழிவகுக்கும். பர்கர் வியாதி எனும் கால் விரல்கள் அழுகும் நிலை உண்டாகும்.

அல்கஹோல் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கிறது என்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே அது பீர் ஆக இருந்தாலும், விஸ்கியாக இருந்தாலும், சாராயமாக இருந்தாலும் வேண்டாம்.

கோபம், உணர்ச்சிவசப்படுவது, அவசரப்படுவது, (பதறிய காரியம் சிதறும்) ஆகியவற்றைத் தவிர்க்கவும். அளவறிந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இரத்த அழுத்தம் உடையவர்கள் கடினமான உடற்பயிற்சி, எடை தூக்குவது, முழுநேர வேலை போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். வேகமான நடை, நீந்துதல், சைக்கிளில் செல்வது, பூப்பந்தாட்டம் போன்றவை நல்லதாகும். தியானம், மன அமைதிக்கான பிரார்த்தனை, ஓய்வு, மன இறுக்கங்களைத் தளர்த்துவதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு வரலாம்.


**கோப்பி - டீ வேண்டாம்**

இரத்தக்கொதிப்பு உள்ளவர்கள் கோப்பி, தேநீர் அருந்துவதை நிறுத்துவது நல்லது. சில மருந்துகள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். அவற்றைத் தவிர்க்கவும்.

உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதா என அறிய பலமுறை - நாள்கள் அல்லது வார இடைவெளிகளில், நின்று கொண்டும், படுத்துக்கொண்டும் டாக்டரிடம் சோதனை செய்து கொள்ளுங்கள். ஏனெனில் உயர் இரத்த அழுத்தம் என்பது நபருக்கு நபர் வேறுபடலாம்.

- நன்றி : 'ஹெல்த்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அபத்த நாடகம்

வெளியீடு: ஜோர்ஜ் சந்திரசேகரன் 54/14, இசை ஒழுங்கை, தாமரைக்கேணி, மட்டக்களப்பு.
பக்கங்கள் - 52. விலை- 100.00

இலங்கை வானொலியின் நீண்ட கால ஒலிபரப்பாளரும், சாகித்திய மண்டல பரிசு பெற்ற எழுத்தாளருமான திரு. ஜோர்ஜ் சந்திரசேகரனின் நான்காவது வெளியீடாக ''அபத்த நாடகம்'' என்ற நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலில் இரண்டு நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. ஒன்று ''நத்தையும் ஆமையும்'' என்ற நாடகம். இந்நாடகம் பிரபல பிரெஞ்சு நாடக ஆசிரியர் இயூஜீன் அயனஸ்கோ எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பாகும். இந்நாடகம் இரண்டாம் உலகயுத்த சூழலின் பகைப்புலத்தில் மறுதாரம் செய்து கொண்ட ஒரு சோடியின் உறவுச் சீர்குலைவையும் தவிர்க்க முடியாதபடி சேர்ந்து வாழலையும் சித்தரித்து பொதுவாக அக்கால கட்டத்தில் ஏற்பட்ட மனித விழுமியச் சிதைவை படம்பிடித்துக் காட்டுகின்றது.

மற்றைய நாடகமான ''மோட்சமும் நரகமும்'' என்பது திரு.ஜோர்ஜ் சந்திரசேகரனால் எழுதப்பட்டது. இந் நாடகம் எமது சமூகத்தில் நிலவுகின்ற இறப்புக்குப் பின்பான நிலையைப் பற்றிய ஐதீகத்துக்குப் புதுக்கருத்து தீட்டுகின்றது.

ஆசிரியரின் நீண்டகால நாடகத்துறைப் பரிச்சயத்தை மட்டுமன்றி அவரது ஆழமான கருத்து ஈர்ப்புத் தளத்தையும் அனுபவத்தையும் இந்நாடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய முன்னுரை ஆசிரியரின் பன்முக ஆளுமையின் ஒரு வெட்டு முகமாகத் திகழ்கின்றது. இந்நூல் தமிழ் நாடக ஆர்வலரின் தேடுதல் பரப்பை விசாலப்படுத்த மேலும் உதவும் என நிச்சயமாக நம்பலாம்.



## கடைசிச் சொட்டு உசிரில்

வெளியீடு: யாத்ரா நண்பர் இலக்கியக்குழு வாழைச்சேனை.
பக்கங்கள்: 71
விலை: 95.00

இளங்கவிஞர் எஸ். நளீம் அவர்களின் 30 கவிதைகளைத் தாங்கிய கவிதைத் தொகுதிதான் ''கடைசிச் சொட்டு உசிரில்''. அழகிய அட்டையில் அமைந்துள்ள சித்திரமே அவலத்தின் ஒரு குறியீடாக அமைந்திருக்கின்றது.

யுத்த பூமி அவலங்களின் மௌனமான மனக்குமுறல்களே இக் கவிதைகளின் அடிநாதமாக இருக்கின்றன. போராட்டத்தின் மிடுக்குத்தனமோ உழைப்பின் வைராக்கியமோ கவிதைகளில் தலைநீட்டாவிடினும் கவிஞரே கூறுவது போல 'அழுகையின் கண்ணீர்' கவிதைகள் எங்கும் சிந்தப்படுவது கவிஞரின் வெற்றி என்றே கூறவேண்டும்.

இந்நூலுக்கு கவிஞர் அல் அஸுமத் எழுதிய முன்னுரையில் மரபுக் கவிதை படைப்பவர்களுக்கும் புதுக்கவிதை படைப்பவர்களுக்குமிடையிலான கால் நூற்றாண்டு விவாதத்தை மீண்டுமொருமுறை மீட்டியிருப்பினும் கருத்துக்கள் பயன்மிக்கவையாக அமைந்துள்ளன.

கவிஞர் நளீம் ஈழத்துக் கவிதைத் தடாகத்தில் முகை அவிழ்த்துள்ள இன்னொரு மொட்டாக அடையாளம் காட்டுகிறது அவரது இக்கவிதை நூல்.




## இன்னமும் வாழ்வேன்

வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை.
பக்கங்கள்: 80.
விலை: 85.00

வாழ்வின் தரிசனங்களையும் அதனால் எழுந்த பார்வைகளையும் தாங்கி வந்துள்ளது மாவை வரோதயனின் கவிதைத்தொகுதி. மொத்தம் 77 கவிதைகள் நூலில் அடங்கியுள்ளன.

இன்று புதுக்கவிதை என்றால் வசனங்களைப் பிய்த்தெறிந்த நிலை. மரபுக் கவிதை என்றால் அது என்ன? என்ற கேள்வி. இந்தச் சூழலில் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு புதிய பாணியில் கவித்துவ ரசனையுடன் மாவை வரோதயனின் கவிதைகள் அமைந்துள்ளன.

மானுடம், தேசியம், தனிமனித உணர்வு, இயற்கையின் ஈர்ப்பு என்பன கவிஞரின் மன நதியில் இயல்பாகப் புரளும் அலைகளாக அவரது கவிதைகள் நமது சிந்தனைக் கரையை வந்து தழுவி நிற்கின்றன. அவரது எதிர்கால ஏற்றத்துக்கான ஏணிப்படிகளாக கவிதைகள் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

## குறிஞ்சித்தேன்

கவிஞர் க.ப.லிங்கதாசன்.
வெளியீடு: லிங்கன் பதிப்பகம்
இல. 167/.25இ டிம்புல வீதி, அட்டன்.
பக்கங்கள்: 100.



தேன் இனிக்கும். கவிதையும் இனிக்கும். தேனில் மலைத்தேனே சிறந்தது என்பார்கள். அவ்வாறே ஈழத்தமிழ் இலக்கியத்திலும் இன்று மலையக இலக்கியம் தேன்குடமாக இருக்கின்றது. அத்தகைய மலையக மாருதத்திலிருந்து அம்மண்ணின் மூத்த கவிஞர்களில் ஒருவரான கவிஞர் க.ப.லிங்கதாசன் அவர்களின் கவிதைத் தொகுதி ''குறிஞ்சித்தேன்'' என்ற தலைப்பிட்டு அழகுற வந்துள்ளது.

60 கவிதைகளைத் தாங்கி வந்துள்ள இப்பாநூலை வாசிக்கும் பொழுது, உணர்ச்சிப் பிரவாகமும், சீர் நடையும் மனதை வசீகரிக்கின்றது. தமிழையும், தமிழனையும், தமிழ் மானத்தையும் பாடும் கவிஞன் தன்பாடல்கள் மூலம், விழிப்புணர்வூட்டும் இலட்சிய வெறியுடன் இயங்குவதை அவதானிக்க முடிகின்றது.

''தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'' என்பதைவிட ''மனிதன் என்று வாழடா மானிடத்தை உயர்த்தடா'' என்பதே கவிஞர் லிங்கதாசனின் தாரக மந்திரம்.

இந்த கவிதை நூல் வெளிவந்த நேரத்தில் கவிஞர் இவ்வுலகை நீத்ததுதான் மாறாத சோகமாய் அமைந்துவிட்டது.



**நூல் ஆய்வு**

- மாணிக்கவாசகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

තිනකරන් THINAKARAN

உங்கள் தினகரனில் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத் தாங்கிவருகின்றன.

அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள்

அர்த்த புஷ்டியான கட்டுரைகள்...

தமிழ் பேசும் தேசியக் குரலான தினகரன் வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும் முன்னிலையில் நிற்கின்றது.

வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்

நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!!!

வாழ்வதற்காகவே வாசிப்போம்

## செந்தூரம்

SENTHOORAM

தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்

வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும் அரவணைத்துச் செல்லும் தொலைக்காட்சி கையெடுடனான ஒரு பல்சுவை விருந்து

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும்,

புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சந்தா விபரம்
### உள்நாட்டு சந்தா
### (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

## வெளிநாட்டு சந்தா
### (அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்பட வேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd.
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org